914

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மாருள்

ஒருவராகிய

சிறுத்தொண்ட

நாடகம்.

914
f.22

21 FEB 1922

இஃது

செங்காடு-ஸ்ரீமத்.

மாசிலாமணிக்கவிராயர் அவர்களால்

இயற்றப்பட்டு,

புன்னை புதுப்பாளையம் கிராமத்திலிருக்கும் கவிராஜர்

ஸ்ரீமான், ப. மாசிலாமணி முதலியார்

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு,

கை. சு. துரைசாமிமுதலியார்

சகல சுதந்திரம் பெற்று பிரசுரிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

சென்னை

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

காபி ரைட்.

21 [அணா 10.

O-,2MMM7,C
N21
175900

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராகிய

சிறுத்தொண்ட நாடகம்.

இது

செய்யாறு தாலூக்கா நெம்மலி கிராமத்தினரும்

ஏனாதிநாயனர் மாபினரும்.

செங்காடு கிராமம் சங்கீத வித்வர்ம்சர்

பிரம்மஸ்ரீ சேஷாத்திரி பட்டாசாரியர்

நெம்மலி கிராமம் தமிழ் ஆந்திரபுராண பிரசங்கர்

பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர்

இவ்விருவர்களின் மாணக்கருமாகிய

செங்காடு

ஸ்ரீமத், மாசிலாமணிக்கவிராயர் அவர்களால்

இயற்றப்பட்டு,

புன்னை புதுப்பாளையம் கிராமத்திலிருக்கும் கவிராஜர்

ஸ்ரீமான், ப. மாசிலாமணி முதலியார்

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு,

நெம்மலிகிராமம்

ம-ா-ா-ஸ்ரீ சு. ஆறுமுக உடையார்

ம-ா-ாஸ்ரீ மா. தங்கவேலு கிராமணி

இவர்களால் முதற்பதிப்பு பதிப்பிக்கப்பட்டதை,

கை. சு. துரைசாமி முதலியாரால்

சகல சுதந்திரத்துடன் பெற்று

[இரண்டாம் பதிப்பு.]

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1921. [அணா 10

21 FEB 1922

175900

21 FEB 1922
MADRAS

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனுவ் சகலகன தனவான்களுக்கும் அச்சுக்கூடத் தலைவர் கட்கும் அறிவிப்பது யாதெனில், இந்த சிறுத்தொண்ட நாடகம் என்னும் நூலை அமைத்த செங்காடு, ம-ா-ா-ஸ்ரீ, அ. மாசிலா மணிக் கவிராயருக்கு; இந்நூல் விஷயமாயுள்ள சர்வசுதந்தரங் களையும் பெற்றிருக்கும் செய்யாறு தாலூக்கா நெம்மலிகிராமம் சு-ஆறுமுக உடையார், மா-தங்கவேலு கிராமணி இவ்விருவர்க ளிடத்தும் 1917ஹு மேமீ 17உ அடியிற் கையொப்பமிட் டிருக்கும் என்னால் சகல சுதந்திரத்துடன் விற்பனைக்கு பெறப் பட்டு இரண்டாம்பதிப்பு பதிப்பித்து ரிஜீஸ்டர் செய்திருப்ப தால் பிரிட்டிஷ் இலாக்காவிலும் பிரான்சு இலாக்காவிலும் என் னிட அனுமதியில்லாமல் யாரேனும் அச்சிடுவார்களேல் ஷெ காபிரைட் ஆக்ட்படி கிரிமினல் குற்றத்துக்கும் ஜவாப்தாரிக ளாக வேண்டுமென்பதை இதனால் அறிவிக்கப்படுகின்றது.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சின்னகாஞ்சிபுரம் நெமந்தக் கார தெருவு 45-வது நெம்பர் வீடு ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார் அவர்களிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை அணா-10.

வி. பி. தபால் சார்ஜ் அணா-2.

இப்படிக்கு,

கை-சு-துரைசாமி முதலியார்.

பெருமாள் கோயில் தோட்டம் 2-வது சந்து,

சவுகார்பேட்டை போஸ்டு,

மதராஸ்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

அன்பர்களே!

பூவுலகிற் பொலிவுற்றிலங்கும்நால்வகையோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்குலக்ஷம் ஜீவபேதங்களுள், மானிடப் பிறவியை யடைதலே மிகவுமருமையென்பது தோன்றவே (எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான் யாதினுமரிதரிதுகாண், அரிதரிது மானிடராதலரிது) என்றற் றொடக்கத் தக்கனவா யுள்ள மூதோர் வாக்கியங்கள் பொதிந்துள்ளன. ஆகவே இத் துணைச்சிறப்புவாய்ந்த மானிடப்பிறவிபெற்றுள்ள ஒவ்வொருவரு மடையத்தக்கது. சதுர்வித புருஷார்த்தங்களே யாமென்ப தறிய (தருமம், பொருள், காமம், வீடென்னும் நான்குமுருவத் தாலாயபயன்) எனும்வாக்கியம் மலைபிலக்காம் ஆகையால் இத் தகையபுருஷார்த்தங்களை யடைவதற்குத் தகுந்த சாதனம், ஈஸ் வரனைத் தஞ்சமாகவடைதலே யாம்என்பதுணரனே (மலர்மிசை யேகினான், மாணடிச்சார்ந்தார், நிலமிசைநீடு வாழ்வார், வேண்டுதல் வேண்டாமையி லானடிச்சேர்ந்தார்க் கியாண்டுமிடும்பையில) எனும் பொதுமறைப் போதியதே, ஆனதா லீஸ்வரனைத் தஞ்சமாக வடைதற்குச்சிறந்தசாதனம் பக்தியேயாம், எனவிளங்கவே (பத்திவலையிற்படுவோன்காண்) எனமாணிக்கவாசகசுவாமிகளுங் கூறியுள்ளார், ஆகையினாலேயே மானிடப் பிறவி பெற்றுள்ள வொவ்வொருவரு மின்றியமையாது வேண்டப்படுவது பக்தியே யாம். எனப்பெறப்படுதலின்.

இத்தகைய பக்தியை யுலகிலியாவருங்கைப்பற்றி இன்ப மடையுமாறு பரோபகாரமாக முன்னாலவ்வாறொழுகி கதிபெற்ற அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகியசெப்பருஞ்சீர்த் திவாய்ந்த சிறுத்தொண்ட நாயனார் சரித்திரத்தைநாடகத் தமிழால் கூறுவதா லிந்நூல் சிறுத்தொண்டநாடகம் எனப் பெயர் பெற்றது.

இச்சரித்திரத்தை முன்னால் சேக்கிழாராதி பெரியோர்க ளாற் கூறப்பட்டிருக்கினு மவை கற்றவர்க்கன்றி மற்றவர்க்

கெளிதில் புலப்படாமையான் மந்த மதியினருமெளிதி னுணறுமாறும் பக்திமான்கள் பலர்கேட்டுக்கொண்டபடிக்கும் தற்கால உசிதமான க்யால், கெத், கிருதி, கெஜல், ரங், தில்லாணு, டப்பா, லாவணி, நோட், கீர்த்தனம், ஜாவளி, கண்ணிகள், தருக்கள் முதலிய இராகதாள வர்ணமெட்டுகளடங்கிய நூதன நாடகமாக வியற்றப்பட்டது.

இந்நூலைக் கருதிப் பார்ப்பவர்கள் நற்குணங்கள் யாவும் பரஸ்பர மடையப்பெற்று நல்லனவெல்லாம் பெருவார்களென பதிண்ணம்.

இந்நூலை இலக்கண விலக்கியங்கட்கியையப் பிழையறப் பரிசோதித்துத் தந்த, புதுப்பாளையம் சிவநேசச்செல்வத் திருக்கூட்டத் தலைவரும் சென்னை லோகோபகாரிப் பத்திரிகையில் விஷயதானஞ் செய்பவரு ளொருவரும் அத்வைதியும் ஆகிய கவிராஜர், ஸ்ரீமான்-ப-மாசிலாமணி முதலியார் அவர்கட்கு மனமுவந்த வந்தனம் புரியாநின்றனன். இதை அச்சிடுவதற்கும் அவர் சிரமம் பாராது இப்புத்தகவிஷயமாக வெடுத்துக்கொண்ட வூக்கமு முதவியும், எஞ்ஞான்றும் யான மறக்கத் தககனவாகா.

இந்நூல் விஷயமாய் சிரமமேற்றுக்கொண்ட ஏழாச்சேரி கிராம மணியம் முன்சீப் ஸ்ரீமத்-சோ-தங்கவேலுமுதலியார் அவர்கட்கும் மனமுவந்த நன்றி பாராட்டப் பெரிதுங் கடமைபூண்டுள்ளேன்.

இந்நூலை அச்சுவாசனமேற்றி உலாவச்செய்த செய்யாறு தாலூக்கா நெம்மலி கிராமத்திலிருக்கும் திருநீலகண்டர் மரபு சுப்பராயஉடையார் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக உடையார், எனதுகுமாரன் சிரஞ்சீவி தங்கவேலுகிராமணி, இன்னவர்களின் அரும்பெரும் நன்றியும் எஞ்ஞான்று மறக்கத்தக்கனவல்ல. ஷெயார்களுக்கே இப்புத்தகவிஷயமான ரிஜிஸ்டர் முதலிய பாத்தியதைகள் சகலமும் ஒப்புவித்திருக்கிறேன்.

இந்நூல் யாதோ ரிடையூறுமின்றி நிறைவேறத் தயைபுரிந்த எல்லாம் வல்ல பெருங்கருணைக் கடவுள், இஃதென்ஞான்றும் நிலைபெறுமாறும், கருணைபுரியும்படி அவ்விறைவன் பாதாம்புயத்தைச் சந்ததம் சிந்தியாநின்றனன்.

இங்ஙனம்,

அடியார்க்கடியன்,

நெ. செ. அ. மா.

சிறப்புக் கவிகள்.

அழகுசெய்யூர் வடமொழி வியாகரண மஹாவித்வான்

ப்ரம்மஸ்ரீ பரிமள ரங்காச்சாரியார் அவர்கள் மாணாக்கரும்

நெம்மலி தமிழ்ப்புலவர்

ப்ரம்மஸ்ரீ, ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் குமாரரும்

வடமொழி வியாகரண தென்மொழி பிரசங்க வித்வானுமாகிய

கவிதிலகம் ப்ரம்மஸ்ரீ

வெ. கிருஷ்ணமாச்சாரியாவர்கள்

இயற்றியது.

శ్లో॥ రాజన్మంగళ శాంగ్రైపత్రినజూషా
విద్యాహావిత్యుర-(ద్యతా)
క్లృప్తంనిర్మల రత్ననామకవినా
చారిత్రముద్యద్రసయ్॥
శుద్ధంద్రావిడ భాషయామితమహా
భక్తస్య సన్నాటకమ్
విద్యాహృద్య హృదాద్యకృష్ణగురుణి
బాధాతే సంభావితమ్॥

விருத்தம்.

இன்சொனு டகமாய்ப்பாரில் யாவரு மிசைத்தீடேறத்
தென்சொலிற் சிறுத்தொண்டன்றன் சீர்த்தியை விரித்துரைத்த
நன்சொலமா சிலாமணிப்பேர் நாவல னற்றிறத்தை
யென்சொல்கேன் சேடனுங்கண் டிசைப்பரி தாகுமாதோ.

செய்யாறு தாலூக்கா புதுப்பாளையம்
சிவநேசச்செல்வத் திருக்கூட்டத்தலைவரும் அத்வைதியுமாகிய

கவிராஜர்

ஸ்ரீமான், ப. மாசிலாமணிமுதலியாரவர்கள்

இயற்றிய,

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவனென்றோர்மொழியையுலகோருய்ய
அலகிலாச்சோதிதானாதியிற்றந்தமாவருமைபெற்ற
பலகலாசாரபெரியப்புராணத்தினிற்பணித்தசீர்த்தி
பிலகெலாத்தொண்டர்களிருங்காதையின்மிக்கவெழில்தான். 1

சீர்மேவுசிறுத்தொண்டர்தம்பத்தியங்காதை சீர்த்தியோர்ந்துப்
பார்மேவுமாக்களுய்யப்பவப்புணரிகடத்தற்கோர்ப்பாலமென்ன
யேர்மேவுநவரஸமுமேற்பவிலக்கணநயமுமினிதினாய்ந்து
நார்மேவுநாடகமாய்நவின்றிட்டானாரென்னினவிலக்கேண்மோ. 2

பூவார்ந்தத்தடங்குலவுப்புரியருணாரணியமெனப்புகல்செங்காட்டிற்
றேவார்ந்தகவுரிமகிழ்திருநாதனடியிணையிற்சிரத்தையோடுத்
தூவார்ந்தமலர்த்தூவித்துதியப்பாசாமிதவந்தோய்ந்தசேயன்
மாவார்ந்தபிரசங்கமழைபொழியுமாசிலாமணிவல்லோனே. 3

புதுப்பாளையம் சிவநேசச்செல்வத் திருக்கூட்டத்தினரும்
ஏழாச்சேரி கிராமமணியம் முன்ஸீப்புமாகிய
சோதிடம்

ஸ்ரீமத், சோ. தங்கவேலு முதலியாரவர்கள்

இயற்றிய

எழுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பார்தருகருணைப்பகவதிகவுரிப்பதிகைலாசப்பதியின்
பேர்தருமன்புப்பீடுறுப்பத்திப்பிழம்புதகைத்திருத்தொண்டர்
சீர்தருமனமாய்ச்சேய்க்கறிதந்தச்சிறுத்தொண்டடிகேட்சரிதை
கார்தருசெந்தமிழ்நாடகமிசைத்தாயமென்னெனச்சொலுதுமரோ. 1

காவளமோங்குங்கண்ணகனிலத்துக்கண்ணியப்பதிசெங்காடு
மாவளநகரவண்சீர்ப்பத்திவள்ளலப்பாசாமியனேய்
தூவளமகத்துத்தோய்ந்திடுசீர்த்தித்துகளறுவிபவமிக்கானாய்
நாவளஞ்சாலுநவநவரஸச்சொல்நாவலன்மாசிலாமணியே. 2

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தஸ்வாமிகளருளிய

திருச்சாட்டங்குடி-பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே. (1)

பொன்னம்பூங் கருக்கானற் புணர்துணையோ டுடன்வாழு
மன்னங்கா ளன்றில்கா ளகன்றும்போய் வருவீர்காள்
கன்னவிலுட் சிறுத்தொண்டன் கணபதீச் சரமேய
வின்னமுத னிணைபடிக்கீ ழெனதல்ல லுரையீரே. (2)

குட்டத்துங் குழிக்கரையுங் குளிர்பொய்கைத் தடத்தகத்து
மிட்டத்தா லிரைதேரு மிருஞ்சிறகின் மடநாராய்
சிட்டன்சீர் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. (3)

கானருகும் வயலருகுங் கழியருகுங் கடலருகு
மீனிரிய வருபுனலி னிரைதேர்வெண் மடநாரய்
தேனமர்தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடிமேய
வானமருஞ் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. (4)

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
வந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே (5-10)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டி லுள்ளது.

சுவாமிபெயர்-கணபதீஸ்வரர், தேவியார் - திருக்குழல்மாதம்மை.

உ

சிவமயம்.

சிறுத்தொண்ட நாடகம்.

கணநாதர் துதி.

வெண்பா.

திருவளருஞ் செல்வத் திருச்செங்காட் டங்குடிவா
ழருள்வளருஞ் சிறுத்தொண்ட ரதிமதுரத்-தெருள்சரிதை
பக்தியுடன் பாடிபவம் பாற்றிடவே சித்திதருஞ்
சத்தியரு ளத்திமுகன் சரண்.

சண்முகர் துதி.

விருத்தம்.

அணியுமிவ் வுலகோர்வானோ ரனுதின மன்பாய்ப்போற்றி
பணிந்திடப் பவமகற்றும் பசுபதி மகிழ்ந்தசுப்ர
மணியென விளங்கிசீர்மா மரகத மயிலிலேறித்
தணிகைமா மலையில்வாழுஞ் சண்முகர் பாதம்போற்றி.

சரஸ்வதி துதி.

விருத்தம்.

மலரயன் நாவினுளு மாக்ஷிமை பெற்றே யோங்கி
யுலகெவாம் பன்னியுன்னி யோதுதற் கருமையான
நலந்தரும் வெண்மையான நறுமலர் மீதிலுற்ற
கலைமகள் திவ்யசெம்பொற் கழலடி போற்றிபோற்றி.

பரசிவ வணக்கம்.

விருத்தம்.

பொன்னவிர் சடையில் மூன்றும் பிறைசுர நதிபுனைந்து
மின்னிக ருமையாள்வாம மேவிட மழுமானேந்தி
தன்னிக ரில்லாதோங்கு சங்கரன் பதத்தைத்தாழ்ந்து
நன்னயச் சிறுத்தொண்டன் நாடகம் நவிலலுற்றும்.

உமையவள் வணக்கம்.

விருத்தம்.

மதிதிரு வதனியீசன் வாமபா கத்திஞளுஞ்
சதிருடன் மேவியீரேழ் தாரணி யளித்துக்காக்கும்
துதிபெறு கௌரிபாதந் தொழுதுயர் சிறுத்தொண்டன்ற
னதிசய பக்திக்காதை யறைவனு டகமாய்த்தானே.

சமயயகுரவர் அறுபான்மூவர் துதி.

விருத்தம்.

பன்னும்வே தாகமத்தின் பயனெலாம் பாக்களாக்கித்
தன்னிலே யுணர்த்திக்காட்டுஞ் சமயநற்குரவர்பாத
முன்னியோ ரறுபான்மூவ ரொண்கழற் சென்னியேற்றி
யின்னயத் தமிழாற்றொண்ட னெழிற்கதை யிசைக்கலுற்றும்.

சிறுத்தொண்டர் துதி.

விருத்தம்.

அந்திவண் ணனைபூசிக்கு மடியவர் தங்கட்கெல்லாஞ்
சந்தத மன்னமீந்துத் தனயனைக் கறிசமைத்துச்
சுந்தர னுளமுவப்பத் தொண்டுசெய் சிறுத்தொண்டன்றன்
கந்தமார் பதம்பணிந்தக் காதையை கழறலுற்றும்.

அவையடக்கமும் ஆக்கியோன்பெயரும்.

விருத்தம்.

களிறுமுன்னே யேனமது கதித்தாற்போலுங்
கருடன்முன்னே மசகமது கவிந்தாற் போலு
மொளிர்குயில்முன் காகமது வொலித்தாற் போலு
மோங்குமயில் முன்னேவான் கோழி போலுந்
தளிரோங்குஞ் செங்காடு தன்னில் வாழுந்
தனயனெனு மாசிலா மணியா மன்பன்
றெளிவுடைய பாவலர்கள் பாதம் போற்றித்
திகழுஞ் சிறுத்தொண்டன்கதை செப்பலுற்றும்.

உ

சிவமயம்.

மாசிலாமணிக் கவிராயர்பாடிய

சிறுத்தொண்ட நாடகம்.

சபாரஞ்சிதன் கணநாதரைத்துதிக்கும் ஜாவளி.

(சுந்தர கணநாதா ஓம் ஓம் எனும் வர்னமெட்டு)

பல்லவி.

வரமருள் கணநாதா-ஓம் ஓம்
வரமருள் கணநாதா.

அநுபல்லவி.

வரைமகள்பாலா வல்லபைலோலா (வா)

சரணங்கள்

1. பரப்ரம்மமாயெங்கும்
நிரந்தரமாகிய
புரந்தகித்தோனருள்
பிரணவப்பொருளே
சுரர்களீடேறயின்பச்
சுகத்தைத்தந்துகாத்திடட்ட
அரனுலகத்தைஃஒளவை
அடையவேசெய்திட்ட (வர)

2. விண்மணியும்நீ
தெண்மணியும்நீ
தண்மணியும்நீ
கண்மணியும்நீயே
வண்மையாகவலம்
வளர்க்குந்தயாநிதியே
வுண்மைத்திருவுருவா
யுறையுமதிபதியே (வர)

3. கரிமுகவனும்நீ
யரிமருகனும்நீ
விரிகடல்கலைநீ
திரிபுவனமும்நீயே
வரிசையொடுமாசிலா
மணிதாசன்புகழ்ந்திடும்
திருச்செங்காடருணேசத்
தேவனார் மகிழ்ந்திடும். (வர)

கணேசர் வருகிற

பொது விருத்தம்.

விரிகுழற் கன்னிமார்கள் விளையாடித் தீர்த்தமாடு
மரிசனச் சலமதூறி யளவிலாச் சோலைசூழ
வரிசையாய் நீடித்தோங்கி வளரறம் பெருகிவாழும்
புரிச்செங்கா டுறைகணேசர் புகழ்தர வருகின்றாரே.

கணேசர் வருகிற ஜாவளி.

(வாடிசகியே நாம் கூடி யாடாமெனும் வர்னமெட்டு.)

கண்ணிகள்.

1. வந்தனரிதோ வல்லபைகணேசனார்
வாசமா மலர் வீசவே
வாரணமுகப்
பூரணமிகக்
காரணஜெகவு
தாரணமாக. (வந்)

2. தொண்டர்மாமணி தூயநவமணி
தோகை யுமையவள் சுகுணகண்மணி
தொந்திகுலுங்க
பந்தம்விலங்க
சிந்தையிலங்க
மைந்தர்துலங்க (வந்)

3. மூஷிகமேறி மூவுலகிற்சவாரி
மோக்ஷ சூக்ஷமருள்
முப்பழமுண்டு
அப்பங்கற்கண்டு
ஒப்பாயுட்கொண்டு
நட்பாய்த்திரண்டு. (வந்)

4. பொன்னகர்நிகர் புரி செங்கைநகர்
பூதலம் புகழ் விநாயகர்
புண்யகம்பீர
கெண்யவுதார
மண்ணினில்தீர
யெண்ணமீடேற. (வந்)

வசனம்.

ஹே! தனயா கைலாயஸத்தில் உமாமகேஸ்வரர் மடியில் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்த யென்னை யாதுகாரணமாகப் பிரார்த்தித்தனை.

சபாரஞ்சிதன் வசனம்

ஹே! கணநாத் வந்தனம், இந்தநாடகம் நூதனமாதலால் முன்னின்று நிறைவேற்றுவீராக பிரார்த்தனை.

கணேசர் வசனம்.

ஹே! பாலா உம்மிஷ்டப்படி நாடகத்தை நிறைவேற்றக் கிருபைகூர்ந்தனன். கலைமகட்டும் ஆக்கியாபிக்கின்றனன். அக் கலைமகளை தியானிப்பாயாக, வருகின்றேன்.

சபாரஞ்சிதன் வசனம்.

சித்தம் தேவா.

சபாரஞ்சிதன் கலைமகளைத் துதி.

ஜவாளி.

(கோபமேனு எந்தன்மேலெனும் வர்னமெட்டு)

பல்லவி.

வந்தருளேசுந்தர வாணிகல் யாணியே

அநுபல்லவி.

வந்தனம் தந்தனம்
மைந்தனுன் சொந்தமாய். (வந்)

சரணங்கள்.

1. நான்முக னுவிலுமறை நாமகளே பொருளே
நாடினேன் தேடினேன்
பாடினேன் வாடினேன் (வந்)

2. பாரதியேசாரதா பனுவலாட்டி யென்மாதா
பாங்குடன் சாங்கமாய்
தீங்கிலா தோங்கியே. (வந்)

3 தாசன்மாசிலாமணி தாவினேன் கூவினேன்
தஞ்சமென் றன்னையே
அஞ்சலித் துன்னையே

கலைமகள் வசனம்.

கல்யான், ஹே! வத்ஸா. சத்தியலோகத்தில் சதுர்முகன் நாவில் சதாவீற்றிருந்த என்னையாதுகாரணமாகதியானித்தனை.

சபாரஞ்சிதன் வசனம்.

ஹே! லோகாபிராமி இந்தநாடகம் நூதனமாதலால் உடனிருந்து நிறைவேற்றப் பிரார்த்தனை.

கலைமகள் வசனம்.

ஹே! தனயா கடாக்ஷித்தேன், அச்சமின்றி நாடகத்தை நடாத்துவாயாக வருகின்றேன்.

சபாரஞ்சிதன் வசனம்

சித்தம் தாயே.

கட்டியன் வருகிற பொது வசனம்.

இவ்விதமாக இராஜாதிராஜனுன சோழமகாராஜன் வாயிற் காக்கும் கட்டியன் வருகிற தறிவீர்கள் கனவான்களே.

கட்டியன் வருகிற நோட்.

சரிக சரிக சரிகசா ரிம மகரிக ரீரிசா
சாரிசா ரீரீரீ ரிம மகரிக ரீரிசா

கட்டியன் சபாவந்தனம் இந்துஸ்தான் நோட்.

கண்ணிகள்.

பல்லவி

1. சரணம்செய்தனன் சபையோர்க்கு
சரணம் செய்தனன்
சட்டவட்டமாய் கட்டுதிட்டமாய்
பட்டப்பறக்க சிட்டர்சிறக்க (சர)

2. பாவலர்கட்கும் பக்தி நாவலர்கட்கும்
பாதமேபோற்றி நீதமாபோற்றி
கோதறத்தேற்றி காதலாய்ப்போற்றி (சர)

3. புண்யவான்களே வெகு கண்யவான்களே
பொறுங்கள் பேசாதீர் இருங்கள் கூசாதீர்
வெறுங்கை வீசாதீர் ஒருமையேசாதீர்

கட்டியன் வசனம்.

தமிழ்நாட்டு மூவேந்தர்களில் ஒருவரான சோழமகாராஜன் கொலுவுக்கு வருகிறதறிவீர்கள், கனவான்களே.

சோழராசன் வருகிற
பொது விருத்தம்.

தேன்சொரிந் தருவிபாய்ந்து திகழ்நவ மணிகொழிக்கும்
மேன்மையாஞ் சோழநாட்டை மிகுதியா யரசின்நீதி
நூன்முறை தவருவண்ணம் நுட்பமாய் செங்கோலோச்சுங்
கோன்சோழ ராஜதீரன் கொலுவுக்கு வருகின்றானே.

வசனம்.

பலவளங்களும் நிறைந்த சோழநாட்டை, மனுநீதி தவறாது அரசாண்டுவரும் ராஜாதி ராஜனுன சோழமகாராஜன் மந்திரிமார்கள் சூழ கொலுவுக்குவருகிற தறிவீர்கள் கனவான்களே.

சோழராஜன் வருகிற தரு.

(இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.)

பல்லவி.

ராஜசோழனிதோ வந்தான்-ஜெக
ராஜராஜர்க்கு மதிபதிகுணமிலகிய

அநுபல்லவி.

வாசவனுக்குநிகர் வழங்கும்வள் ளல்சக்ரேசன்
வல்லவீ ரர்கள்முடி வணங்கும திப்ரகாசன்
பாசமுடனேயீசன் பக்தர்களுக்குநேசன்
பாவைய ராலமேந்தி பணியுங்கம் பீரபோஜன்
பஞ்சபாண னும்
அஞ்சியழகினைக்
கெஞ்சியெதிரினில்
தஞ்சந்தஞ்சமென
சஞ்சமலர்முக மிஞ்சுதிருவுருப்
பஞ்ச லக்ஷண ரஞ்சிதமும்பெறு (ராஜ)

சரணங்கள்.

ஆதித்த னுங்கண்கூச அழகுபொன் முடிசூட்டி
அற்புத மாய்ப்பூஷணம் அலங்கிர்த மாகப்பூட்டி
நீதிதவறுச் செங்கோல் நெறிமுறை தன்னைக்காட்டி
நீள்புவி யிலேழ்மையே நேரிடாமல் பாராட்டி
நீக்ஷியோடா
சாக்ஷிசெய்திடும்
மாக்ஷியிலகிய
ஆக்ஷிபெருஞ்செயல்
சூக்ஷிநெறியொடு தாழ்ச்சியில்லாமலே
காக்ஷியாக யிரு வாக்ஷியணிந்திடும் (ராஜ)

சத்தியம் அறம்பொறுமைச் சரியாய்செ லுத்துந்தீரன்
சைவவீர வைராக்யம் சார்ந்தசிலவுதாரன்
வெத்திமா லையணிந்த வேந்தர்வேந் தனும்வீரன்
வெய்யோன்குலத்தையோங்கிவிளங்கச்செய்யுங்கம்பீரன்
வேதவேதியர்
காதலோடெதிர்
கோதிலாவாசீர்
வாதஞ்செய்திட
சீதமலர்த்தடஞ் சேருஞ்செங்காட்டில்
நாதனெனுமரு ணேசன்பாதம்பணி (ராஜ)

இராஜன் போற்றி விருத்தம்.

வாரிசூ ழுலகமெல்லாம் வளரறம் பெருகவேண்டும்
மாரியுந் தவறாதோங்கி மனிதர்கள் வாழவேண்டும்
ஆரிய மறையோர்வேத மனுதின மோதவேண்டும்
நாரியோர் பாகாவுன்றன் நளினபோற் பாதம்போற்றி

மந்திரி போற்றி விருத்தம்.

கஞ்சமா மலர்கள்வாவிக் கன்னலுஞ் செந்நெல்சூழ
பஞ்சல க்ஷணங்களுள்ளப் பதிசோழ நாடாள்மன்னா
தஞ்சமென்றடைந்தபேரைத் தயைபுரிந் தன்பாய்காக்கும்
ரஞ்சித சோழராஜே நளினபொற் பாதம்போற்றி.

இராஜன் தேச விசாரணை.

1. வினா:—திருவருளால் நமதுலகில் திங்களில் மும்மாரி
தீதறப்பெய்கின்றதா?
விடை:—திண்யனே யாவர்க்கும் கண்யனே குறைவின்றி
தீதறப்பெய்யுதையா.

2. வினா:—பஞ்சரத் தினங்களாய்ப் பாரினிற் றுலங்கிடும்
பஞ்சஸ்தலபூசை பண்பாய் நடந்தேறுதா?
விடை:—பகர்காலமிருமூன்று நிகரிலாப் பூஜைகள்
பகரமாய் நடக்குதையா.

3. வினா:—கோதிலா வேதியர் நீதிமறை நூல்களை
ஓதிவருகின்றார்களா?
விடை:—கொற்றவா யவர்களுக் குற்றதொழிலதனையே
கோதிலாதோதுகின்றார்

4. வினா:—இன்னும்பற் பலகுடிக ளிடர்களில்லாமலே
யெல்லோரு மிகக்ஷேமமா?
விடை:—இறைவா குடிகளும் இடறதில்லாமலே
யெல்லோரும்மிகக்ஷேமமே.

5. வினா:—கோவும் புலியுமே கூடியோர் துறையினில்
குறைவின்றிநீருண்ணுதா?
விடை:—கொற்றவா தங்கள்செங் கோலதற்கஞ்சியே
குலவிநீருண்ணுதையா.

6. வினு:—கொலைகளவுகோள் பொய்க்குடிமுதற்றீயதொழில் குவலயந்தன்னிலுண்டா?
விடை:—கோமானே யவ்விதக் குடிமுதற் றீயதொழில் குவலயத்தெங்குமில்லை.

இராஜன் விருத்தம்.

சுடர்விளக் கேயாளுலுந் தூண்டுகோல் வேண்டுமென்ற
படர்பழ மொழியைப்போலென் பக்கலிலுறையுமந்திரி
வடபுர மதனில்துஷ்ட வாதாபி நகர்மேல்சண்டை
யிடச்சென்ற பரஞ்சோதித்தா னின்னமும் வரக்காணேமே.

வசனம்.

பிரகாசமாய்த் துலங்காநின்ற திருவிளக்காயினுந் தூண்டு கோல் வேண்டுமென்பதுபோல அனைத்தையுங் கற்றுணர்ந்த அரசனானாலும் அறிவுடையமந்திரி வேண்டுமல்லவா அதுபோல எனதருகி லுறையுமந்திரி விவேகியாகவும், வீராதி வீராகவும், பக்திமானாகவும் விளங்கும் நமது அணுக்கரான பரஞ்சோதி யாரை வடபாரீஸத்தில் வாதாபிநகரமன்னன் பகுதிகட்டாததை ப்பற்றி அவன்மேற் போருக்கு நானனுப்புவித்த செய்தி வெகு நாளாகியும் ஒன்றுந்தெரியவில்லையே என்னசெய்யலாம் மந்திரி.

மந்திரி சொல் தரு.

(தணிகைமலையி லெழுந்தருளியயெனும் வர்னமெட்டு)

பல்லவி.

ஜெயஞ்ஜெயமென ஜெயபேரிகை
சீர்முழங்குதுபார்

அநுபல்லவி.

ஜெகத்திலவர்க்கு நிகர்த்தபேரிந்தத்
தீவுகளில்யார் (ஜெய)

1. வயல்சூழ்திருச்செங்காட்டங்குடியில்
வளர்பிரகாசனும்
வழங்குங்கணபதீச்சுரர்பதம்
வணங்குந்தாசனும். (ஜெய)

2. ஆனையேற்றங் குதிரையேற்றம்
அனைத்துந்தெரிந்தவர்
ஆகமவேதாங்கமனைத்தும்
ஆய்ந்தறிந்தவர் (ஜெய)

3. ஆதிபரஞ்சோதியெனவே
அவர் திருநாமம்
அரனடியார்க்கடிமைசெய்வதில்
அதிகமாமநேயம் (ஜெய)

4. வடபுரத்தி லடஞ்சாதித்து
வணங்காமல்நெட்டு
வாதாபிநகரைமுழுதும்
வாரிப்போரிட்டு (ஜெய)

5. புகழாந்திருச்செங்காட்டுக்கருகே
பொலிதல்வீசவே
புதுமையாகவே யுலகமுழுதும்
புகழ்ந்துபேசவே. (ஜெய)

மந்திரி வசனம்.

ஹே! வேந்தர் வேந்தே நமது அணுக்காரரான பரஞ்சோதியார் பெருமையைப்புகல ஆதிசேடனுக்கும் அருமை அவர் வெற்றிபெற்றுவருகிற ஜெயபேரிகையின் ஓசை அதோ கேட்கின்ற தறிவீர்.

இராஜன் சொல் தரு.

(இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.)

பல்லவி.

எதிர்சென்றழைத்துவருவோம்-நாம்
எதிர்சென்றழைத்துவருவோம்

அநுபல்லவி.

எழுந்துவருவாய்மந்திரி பழுதிலாமொழிதந்ரி (எதி)

சரணங்கள்.

1. சதிர்பெரும்யானைபரி சாரணருங்கவரி
சாமரைபோட அலர்ந்தசெந்
தாமரைசூட

ஜாக்ரதையாச்சரச சல்லாபவுல்லாசத்துடன்
சீக்கிரம்புறப்படுவீர் க்ஷேமத்தைக்கேட்கத்தென்புடன் (எ)

2. பரஞ்சோதியார்பெருமை பகரக்கேட்டேனருமை
படிதனிற்கீர்த்தி-கண்ய
கெடிபெருஞ்சீர்த்தி

பக்திமார்க்கமுடை வெற்றியோவென்றுவந்த
சக்தியோவரைய கத்தியங்கண்டுமுந்த (எதி)

3. ஆரவாரமாய்க்கோஷ்டம் அதிசயத்திருக்கூட்டம்
ஆலித்துவரவே-உபசாரம்
பாலித்துவுறவே

அந்தரவாசிக ளாசீர்வதித்திட
சுந்தரசெங்காட்டிற் சுபமது கதித்திட (எதி)

இராஜன் வசனம்.

அப்பாமந்திரி இதுவரையி லவர் பக்திமகிமையும் பராக்ரமங்களையும் நான் நன்ருய்க்கவனிக்கவில்லை, இன்றுன்ருல் அறிந்தேன், நாமவரை எதிர்கொண் டழைத்துவருவோம் வருவீர்.

மந்திரி வசனம்.

சித்தம் பிரபுவே.

சிறுத்தொண்டர் வருகிற

பொது விருத்தம்.

சீர்பெறுஞ் சோழமண்டலமதைசூழ் திருச்செங்கா டெனுமா
பார்புகழாமாத் தியர்மரபினிலே பசர்பஞ் சோதியெனும்
பேர்பெறுஞ் சிறுதொண்டநாயனுர் பிரியமதாகவேதான்
நீர்புனைசங்கரன் ருளிணைபணிந்து நீள்சபை வந்தனரே.

வசனம்.

இங்கு இவ்வாறிருக்கத் திருச்செங்காட்டங்குடியில் ஆமாத்தியர் குலத்தில் பிறந்த பரஞ்சோதியாரென்பவர் சிவனடியார்களுக்குத் திருவமுதிடுந் திறத்தால் சிறுத்தொண்டர் எனுஞ்சிறப்புப்பெயரோடு சோழராஜனிடத்தி லணுக்கா ருத்தியோகம்நடாத்தி அவர்கட்டளைப் வாதாபிமன்னனை ஜெயித்து சோழராஜனிடம் வருகிற தறிவீர் கனவான்களே.

சிறுத்தொண்டர் வருகிற, இந்துஸ்தான் நோட்

பல்லவி.

சிறுத்தொண்டரிதோவந்தனர்
க்ஷேமசுபத்தைத்தந்தனர்

அநுபல்லவி.

திருச்செங்காட்டங் குடியெனும்க்ஷேத்ரன்
அருமையாமன்ன தானசற்பாத்ரன் (சி)

சரணங்கள்

1. சாதுக்கள்சகவாசனுய்
சதுர்மறையுணர்தாசனும்
கோதுதவிர்குணங் கொண்டபரஞ்சோதி
கோதைவெண்காட்டு நங்கைமகிழ் நீதி (சிறு)

2. மதிமுகம்பூதிமின்னிட
மார்பில்ருத்திராக்ஷந்துன்னிட
சதிரொடுபட்டாடை யிடைதொடுத்து
சதுரெனவே பேரெடுத்து (சிறு)

3 தரிசனம்பெறும் பத்தியே
சார்ந்தசீல முத்தியே
வரிசையாய்ப்பெற வந்தப்ரைக்யாதி
வளர்செங்காடரு ணேசன்சிறப்போதி. (சிறு)

இதுவுமது.

(அன்னையே திவ்ய அடியினைத் தஞ்சமெனும், வர்னமெட்டு)

பல்லவி.

திருமண்டலம்புகழ் திகழ்பரஞ்சோதி
சிறுத்தொண்டர்வந்தனர் சீராய்ப்ரைக்யாதி

அநுபல்லவி.

தருமத்தின்நீதி தங்கும்பிரகாசன்
அறுபத்துமூவரில் அருஞ்சிவதாசன் (திரு)

சரணங்கள்.

1. மெய்யெங்கும்வெண்பொடி மேன்மையாய்மின்ன
கையினிலேஜெப மாலையுந்துன்ன (திரு)

2. வரிசையுடனேயறம் வளம்பெறவேயேற்றி
புரிச்செங்காடுறையரு ணேசனைப்போற்றி. (திரு)

சிறுத்தொண்டர் போற்றிவிருத்தம்.

ஏகமாய்ப் பரமாயெள்ளி லெண்ணைபோ லெழிலீரேழாம்
லோகமாய்ச் சுவையாயெங்கும் நிறைந்தசற் சோதிதானய்
நாகமா ராகத்தாளுய் நடுநிலைப் பொருளாயாதி
யாகவே கலந்துநின்ற வரன்றிருத் தாட்கள்போற்றி.

வசனம்.

அரசரேறே அடியேன் வந்தனம்.

சோழராஜன் விருத்தம்.

உரமதாற் செருக்குப்பூண்டு வுத்ரபா ரீசந்தன்னிற்
கரவுநெஞ் சன்வாதாபிக் கப்பங்கட் டாததாலேத்
திரமதாய் நீர்போயந்தத் தீயனை வென்றுவந்தப்
பரஞ்சோதி யாரேதங்கள் பராக்ரமம் விளம்புவீரே

வசனம்.

பரஞ்சோதியரே இவ்வுலகின்கண் நமது செங்கோலுக்கடங்கிய வடபாரீசத்து வாதாபிமன்னன் கெர்வித்துக் கப்பங்கட்டாமையைப்பற்றி என்னுத்தரவுபடிச் சென்று அத்தீயனைவென்று செயம்பெற்றுவந்த தங்கள்பெருமையைக்கேட்க விரும்புகின்றனன் விளம்புவீரையா

சிறுத்தொண்டர் சொல் தரு.

(இ-ம்-தன்யாசி-தாளம்-ஆதி.)

பல்லவி.

சிவன்செயலாலெனக்குச் செயங்கிடைத்ததல்லாமல்
சிறியனுலாவதுண்டோ - ஜெகதீசனுன்

அநுபல்லவி.

அவனிமுழுதுந்தமக் கடங்கிப்பகுதிகட்டத்
தவறிகெர்வித்தபேரைத் தக்ஷணம்பற்களைக்கொட்ட (சிவ)

சரணங்கள்.

1. உத்தரபாரீசந்தன்னில் ஒன்னலன்வாதாவி
ஒடுங்கினுனெனைக்கண்டு ஒருநொடியினில்பாவி
சித்தரசனைவென்று சிறையிட்டுப்பின்புதாவி
செல்வநிதிகளெல்லாஞ் சேர்த்தேனும்மிடமேவி (சிவ)

2. ஆனைகுதிரைமுதல் அடங்கலும்நமதாக
ஆக்கினேனவன்வந்து அடைந்தான்சரணமாக
போனக்ஷேமங்களிதுப் புகன்றேனுமக்கன்பாக
புகழாந்திருச்செங்காடுப் புனிதனருளேயோக (சிவ)

சிறுத்தொண்டர் வசனம்.

அகிலலோகத்துக்குக் காரணகர்த்தனுன கடவுள்செயலால் அடியேனுக்கு ஜெயங் கிடைத்ததன்றி வேறில்லை. துஷ்ட அரசனுகிய வாதாபிமன்னனை வென்று அவன் செல்வக் குவியல்யாவும் இதோ தங்கள்வசம் சேர்த்தேன் சோழமகாராஜனே.

இராஜன் சொல் தரு.

(இ-ம்-அடாணு-தாளம்-ஏகம்.)

பல்லவி

கண்டுகொண்டேன்-நல்ல
காரணமாகிய பூரணபக்தியை

அநுபல்லவி

அண்டுபடாததோ ராசன்வாதாவி
அலரி அபயமடைந்திடமேவி
தண்டுகூட்டிவந்த தாஷ்டீகமோர்நாவில்
தவருதுரைக்கத் தரமார்க்கித்தீவில் கண்

சரணங்கள்.

1. உத்தமர்தங்களை உத்தத்தில்விட்டேனே
உணர்விலாதவி வேகியாய்க்கெட்டேனே
சுத்தனேயபாசா ரத்துக்குட் பட்டேனே
தூயபக்தசிரோ மணியாய்நின்றிட்டோனே கண்

2. வரிசையாய்நம்மிட நிதியில்மொத்தமாய்
வாரியுமதிஷ்டப் படியேசித்தமாய்
புரிச்செங்காடருணேசர்க்குத்தத்தமாய்
பூர்த்தியாய்த்தருமஞ்செய் வாய்பரிசுத்தமாய். கண்

இராஜன் வசனம்.

ஐயா, குற்றமற்றவரே கொடியரைக் கடிந்து ஜெயம்பெற்றவரே, சுத்தமான நீதிமுறை கற்றவரே, தங்கள் குணுதிசயங்களை அறியாமல் யுத்தமுகத்தில் விட்டிருந்த என் அபசாரத்தைப் பொறுத்து என்னை ரக்ஷிப்பதுடன் பெருகிக் குவிந்துகிடக்கும் நவநிதிகளில் உமதிஷ்டப்படி சத்விஷயமாய்ச் சிலவுசெய்ய உமதிருப்பிடத்துக்கு வெகுதிரவியங்களை அனுப்பிவிட்டிருக்கிறேன். நீர்

என்னிடம்செய்யும் அணுக்கார் உத்தியோகத்தைவிட்டு உமதிருப்பிடம் அறம்புரிந்து வாழ்ந்துகொண்டிருக்கப்பிரார்த்திக்கின்றேன்

சிறுத்தொண்டர் வசனம்.

வேந்தர்வேந்தே, நான்செய்யவேண்டிய உரிமைத்தொழிற்படிசெய்தேன், அதனால் நீர் என்னைப் புகழத்தகாது எல்லாம் ஜெகதீஸ்வரன்செயல், தம் இஷ்டப்படி நடக்கச்சித்தம்.

பொது வசனம்.

இவ்விதமாக சிறுததொண்டர் பரசிவபத்தியைச் சோழராஜனுணர்ந்து, சிவபக்தரை வேலைவாங்க அஞ்சி அவரிஷ்டப்படி தருமஞ்செய்ய அளவிலாத் திரவியத்தோடு விடைகொடுத்தனுப்ப, சிறுத்தொண்டர் தமதிருப்பிடமாகிய திருச்செங்காட்டங்குடியை நோக்கிவரும்போது அவர்மனைவி, தாதியால் வருகையறிந்து எதிர்கொண்டழைக்கும்விதம் காண்க.

வெண்காட்டு நங்கை வருகிற

பொது விருத்தம்.

பதிவிரதை களிற்சிறந்தப் பாக்யவா ரோக்யமாது
நதிமதி யணியுமீசன் நற்பதப் பணிகள்செய்ய
சதிரொடு தனக்குதாதி சந்தண நங்கைசூழ
மதிமுக திருவெண்காட்டு மங்களநங்கை வாராள்.

வசனம்.

இவ்விதமாகப் பதிவிரதா சிரோமணிகளிற் சிறந்த திருவெண்காட்டு நங்கையார் தன் தாதி சந்தண நங்கையுடன் நாயகன் திருத்தாட்பணி செய்யவருகிற தறிவீர் கனவான்களே.

வெண்காட்டு நங்கை வருகிற ஜாவளி

(வாடி சகியே நாம் எனும் வர்னமெட்டு.)

பல்லவி.

மங்கைவந்தனள் வெண்காட்டு நங்கைவந்தனள்
மாகூதியிலகிய சூக்ஷி தந்தனள்.

அநுபல்லவி.

மங்களமாக பங்கஜதிரேக
துங்கவிவேக பொங்கமதாக (மங்)

சரணங்கள்.

1 குயில்மொழிமாதுகோதையரில்சாது
சோதிலா சந்தண தாதியாள்தோது

கொஞ்சியேகூடு
ரஞ்சிதத்தோடு
மிஞ்சியேபாடு
அஞ்சுகத்திடு (மங்)

2. அருந்ததிரதி அஞ்சியெதிர் துதி
ஆழி சூழுலகில் அழகதேவதி

அற்புதமான
கற்புக்காதீன
உற்பவஞான
நற்புகழான (மங்)

3. கோதிலாமணி கோர்வையாய்ப்பணி
கோடி சூர்யப்ர காசமாயணி

குரிசில்கள்பேச
வரிசைகள்வீச
புரிச்செங்காட்டீச
தரிசனவாச (மங்)

சந்தணநங்கை வசனம்.

தாயேவெண்காட்டு நங்காய் அதோ தங்கள் நாதன் வருகின்றூர் பார்.

வெண்காட்டு நங்கை வசனம்.

ஆனல் எதிர்சென்றழைத்துவருவோம் வருவாயடிசகியே

சந்தண நங்கை வசனம்.

சித்தம் தாயே.

வெண்காட்டு நங்கை சொல் தரு.

(துணைநினையல்லாலிலே யெனும் வர்னமெட்டு)

பல்லவி.

வந்தனம் வந்தனம் தங்கள்
வனசபொற்பாதம்-நற்சீதம்

அநுபல்லவி.

சந்ததமு மன்புகொண்டு
சரசமுடனே பண்டு கண்டு தொண்டு (வந்)

சரணங்கள்.

1. சகிமார்களோடுகூடிசந்தோஷமாய்விளையாடி
மகிழ்ந்திங்குவந்தேன் ஓடி
மாக்ஷிமையாய் தேடி நாடி கூடி (வந்)

2. அடியார்க்கடிமையாக அனுதினமுமன்பாக
படிதனிலேவிவேக
பாக்கியசிலாக்கிய மாக வனேக (வந்)

3. தரிசனத்துக்குகந்த தாஷ்டீகத்தில்மிகுந்த
புரிச்செங்காட்டருணேச
பொன்னடிச் சொந்தமுந்த (வந்)

சிறுத்தொண்டர் விருத்தம்

மணக்கமழாத்திச்சூடி மதிநதிசடை புனைந்து
வுனர்வொடுயாவுந்தாரு மொளிர்பெறவிளங்கிவாழுங்
கணபதீச்சுரர்பாதக் கடாக்ஷத்தால்மென்மேலாகக்
குணமதுபெருகிநாளுங் கோதையேவாழிவாழி.

வசனம்.

வாழி வாழி வெண்காட்டுநங்காய், இதுவரையிலும் இய ன்றமாத்திரம் அன்னதானஞ் செய்துவந்தோம், இப்போது சோழமகாராஜன் கட்டளைப்படி உத்தியோகத்தைவிட்டு அள விலாத் திரவியத்தைப் பெற்று வந்திருக்கிறேன் ஆகையால் திருக்கணபதீச்சுரத் திருவாலயத் திருத்தொண்டு புரிவதுடன் அவர் அடியார்களுக்கும் அன்ன சத்திரங்கள் நவநவமாய்ப்புதுப் பித்து அன்னக்கொடிகட்டி அமுதளிக்க விரும்புகிறேன் இதிலு ன்னபிப்பிராயம் தெரிவிப்பாய் பெண்ணே.

வெண்காட்டு நங்கை வசனம்.

தங்கள் திருவுளப்படி அடியாள் நடந்துகொள்ளச் சித்தம்.

பொது வசனம்.

இவ்விதமாகச் சிறுத்தொண்டர் திருக்கணபதீச்சுரத் திரு வாலயத் திருத்தொண்டுநடாத்தி வருவதுடன் அன்னமடங்களு ம் புதுப்பித்துஅன்னக்கொடிகட்டி அமுதளித்துவருங்காலத்தில் மேல்நடக்கும் விதம்காண்பீர் கனவான்களே.

ஆண்டிகள் வருகிற பொது விருத்தம்.

உலகெலாம் புகழ்பெற்றோங்க ஓயாம லன்னதானம்
இலகவே செய்யாநின்ற எழில்சிறுத் தொண்டர்சீர்த்தி
நலம்பெறக் காதிற்கேட்டு நன்பன்றன் னடிபூசித்துத்
துலங்கவே திருச்செங்காட்டிற் றாயஜங்கமர்கள் வாரார்.

வசனம்.

இவ்விதமாக திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் அன்னக்கொடிகட்டி உலகப்பிரசித்தமாய் அமுதளிக்கிறதை யறிந்த ஜங்கமத்திருக்கூட்டத்தார் வருகிறதறிவீர்கள்.

ஆண்டிகள் வருகிற தரு.

(இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.)

பல்லவி.

ஆண்டிக்கூட்டங்களிதோவந்தார்-அடியரான
ஆண்டிக்கூட்டங்களிதோவந்தார்

அநுபல்லவி.

வேண்டியமுதிட விருதுக்கொடிகட்டி
விளங்குஞ்சிறுத்தொண்டர் வியன்மடத்தைக்கிட்டி (ஆண்)

சரணங்கள்

1. திருவார்தூளிதம் நெற்றியிற்றீட்டி-திகழுங்காவி
தீர்க்கமாயிடையில் சீதறச்சூட்டி
அருமணிருத்திராக்ஷம்மேல்பூட்டிப்-ப்ரகாசமான
அழகுபெருந்திரு வோடுகைநீட்டி
திருவாசகமுடன் தேவாரமும்பாடி
திருமஞ்செய்வோரிடத் தானமதைத்தேடி (ஆண்)

2. பரிசனத் திருகூட்டங்கள்கூடி திருப்பதிகம்
பஜனைக்கோஷ்டங்கள் பலவிதம்பாடி
தரிசினஞ்சிவ தரிசனங்கோடி-சேவித்தீடேற
தலங்கள்முழுமையுந் தாவியேநாடி
வரிசையாகத்திரு வாசஞ்செய்யும்நல்ல
புரிசெங்காட்டரு ணேசன்புகழ்சொல்ல ஆண்

ஆண்டிகள் வசனம்.

ஆகையா இந்த அன்ன சத்திரத்தில் விசேஷமாக அமுதளிக்கிறதாகக் கேழ்விப்பட்டோடிவந்தோம், அதிகபசியாயிருக்கின்றது, அமுதளிப்பீர்கள் ஐயா.

சிறுத்தொண்டர் தரு.

(ஈசா ஜெக தீசா சர்வேசா உமைநேசா, எனும் வர்ணமெட்டு)

பல்லவி.

பெரியோரே நெறியோரே வருவீரே வந்தனம்

அநுபல்லவி.

பிரியமா யமுதுண்போரின் பேட்டிக்கெதிர்பார்க்கிறேன்
பேயோடாடியோனடியார் பெருகிவரக்கார்க்கிறேன்
சரியாய்நீங்களுண்டுபசி தணியதாகந்தீர்க்கிறேன்
சற்குணரேவுங்கள்மணச் சம்மதம்போல்சேர்க்கிறேன்
சிறியன்மடந்தேடியே சிவபஜனைபாடியே
பரிவாய்வந்தீரோடியே பக்திசெய்வேன்கோடியே

சரணங்கள்.

1 சாப்பிட்டுக்களித்துச்சற்றே சயனித்திலேப்பாறுங்கள்
சத்விஷயமான சமயங்கோஷ்டங்கூறுங்கள்
தோப்புகள்துறவுகளில் தூயகூட்டம்சேருங்கள்
தொல்வினையகற்றுந்திரு நீறணிந்துவாருங்கள்
தாசனதுவேஷரே தூயசிவன்தாசரே
சத்புருஷரே சாதுசங்கவாசரே (பெரி)

2. திருச்செங்காட்டருணேசனைத் தேடிப்பதம்பாடுங்கள்
தேவியகிலாண்டேஸ்வரி திருவடியைநாடுங்கள்
வரிசையாயெப்போதுமெந்தன் வாழ்மடத்தில்கூடுங்கள்
வளருஞ்சிவதாசர்களை வணங்காதோரைஜாடுங்கள்
வல்வினைபறக்கவே வஞ்சகந்துறைக்கவே
நல்லமனமிறைக்கவே நானிலஞ்சிறக்கவே. (பெ)

சிறுத்தொண்டர் வசனம்.

வாருங்கள் வாருங்கள் திருக்கூட்டப்பெரியோர்களே வந்தனம் அறுசுவை அன்னங்கள் தயாராயிருக்கின்றது. இதோ தங்கள் இஷ்டம்போலளிக்கச் சித்தம், மடத்துக்குள் எழுந்தருளுவீர்கள் சிவபக்தர்களே.

பொது வசனம்.

இவ்விதமாக சிவபக்த்தகூட்டங்கள் சிறுத்தொண்டர் மடத்தில் அமுதுண்டபிறகு மேல்நடக்கிறதறிவீர்கள் கனவான்களே.

ஆண்டிகள் வசனம்.

ஹா! ஹா! சிறுத்தொண்டர் தருமமே தருமம், அவர் பக்தியேபக்தி பெறுவார்முத்தி, அவர்மனைவி வெண்காட்டு நங்கையின்குணமேகுணம், மற்றஸ்திரீகள் எல்லாம் திரணம். இந்த அன்ன சத்திரத்தின் அலங்காரமே அலங்காரம். இதைவிட உண்டா ஓர் சிங்காரம், இந்த திவ்வியபோஜனமே போஜனம். இதுவே நல்ல பிறையோஜனம் அந்தத் திருக்கண்ணமுதின் உருசியே, உருசி எட்டுநாள்வரை எடாதுபசி, உருசியால் அதிகமாய் புசித்தால் நடக்கச் சாத்தியமில்லை, புகழ்ந்துபேசவும் பெருமூச்சு வாங்குகின்றதே, ஆனாலுஞ் சிறுத்தொண்டரிடம் விடைபெற்றுச் செல்லுவோம் வாருங்கள்.

திருக்கூட்டத்தார் சொல் ஆனந்தக்களிப்பு.

1. சிறுத்தொண்ட பக்தரேவாழி—நாளும்
சீராகவுன் தர்மச் செழித்துநீடூழி. (சிறு)

2. திருப்பதியாய் நெய்பால் தயிர்மோர்-அன்னந்
தேவியானமட்டுந் தேக்கினேமேபார் (சிறு)

3. ஓயாமலன்னம் உதவி-வந்த
டமக்கொரு குறைவில்லை யுண்டாகும்பதவி. (சிறு)

4 அன்னதானப்பலன் பூர்த்தி-யாக
அவனியிலேயுமங் குண்டாகுங்கீர்த்தி. (சிறு)

5. உற்யவநாள் முதற்கொண்டு-இந்த
வுணவைப்போலொருநாளு முண்டிலோங்கண்டு. (சிறு)

6. எட்டு நாளைக்கன்னம் வேண்டோம்-வயறெதுப்பிட்டுப்புளியேப்ப மெடுப்பதாற்றீண்டோம்.

7. ஒட்டுக்குடற்பட் டிருந்தோம்-இன்று
ஒருமட்டார் சுவர்க்குமண்ணறைந்தாப்போலறைந்தோம்

8. அன்னக் கலிப்பறந்தோடி-போச்சு
தானந்தசந்தோஷமாச்சுதுநீடி (சிறு)

9. சிரஞ்சீவி வெண்காட்டு நங்காய்-நீ
சீர்பெற்று க்ஷேமமாய்ச் செழித்திடுந்தங்காய் (சிறு)

10. வருகின்றோமுன் புகழ்சாற்றி-மிக்க
வளமாஞ் செங்காடுறைவன் ளலைப்போற்றி. (சிறு)

சிறுத்தொண்டர் வசனம்.

ஐயோ திருக்கூட்டப் பெரியோர்களே தங்கள் ஆயுள்பரி யந்தம் அமுதளிக்கத் தடையில்லை. இவ்விடத்தில்தானே எழுந் தருளியிருங்கள் பெரியோர்களே.

ஆண்டிகள் வசனம்.

ஐயா, அன்னதானப்ரபுவே, நாளையதினம் அமுதுண்ணும் வேளைக்குத் தடையில்லாமல் வருகின்றோமையா.

சிறுத்தொண்டர் வசனம்.

ஆனல் தங்களிஷ்டம் பெரியோர்களே.

பொது வசனம்.

இவ்விதமாக ஒவ்வொருநாளுஞ் சிறுத்தொண்டர் சிவனடி யார்களுக்கன்னமிட்டு, தாம் பின்னுண்டுவருங்காலத்தில், அக் காலத்து சிவஸ்தலங்கடோறும் யாத்திரைசெய்து பல அற்புதங் களைநிகழ்த்தி, பொய்ச்சமயிகளாகிய புறமஸ்தர்களைவாதில் வெ ன்று சமணர்களைக் கழுவிலேற்றி, மெய்ச்சமயமாகிய 'சைவ சம யம் நிலைபெறச் செய்துவந்த பரசமயகோளரியாகிய திருஞான சம்பந்தஸ்வாமிகள், திருக்கணபதீச்சரத் திருவாலயத்துக்கெழுந் தருள்வதைக் கேள்வியுற்று எதிர்சென்றழைத்து விதிப்படி யுப சரித்து தன்பெயரையும் அத்தலப்பதிகத்தில் சிறப்பித்துப் பா டப்பெற்று வாழ்ந்துவருநாளில் ஓர்நாள் பரசிவன் சிறுத்தொ ண்டர் மனநிலையை சோதிக்கவெண்ணி ஒருவரும் அமுதுண்ண வாராதபடிசெய்ய,அவர் கடவுளைத் துதிக்கிற தறிவீர் கனவான் களே.

சிறுத்தொண்டர்தரு.

(சித்தம்வைத் தேழைமுன் வாவா எனும் வர்ணமெட்டு)

பல்லவி.

அன்னம்புசிப்போர்வரக்காணேன்
ஒன்றுந்தோணேன்

அநுபல்லவி,

இன்னேரம்வரையிலுஞ் சந்நியாசியாராகிலும்
என்னமாயமோவரவில்லை என்னதொல்லை (அன்)

சரணங்கள்.

1. தினந்தினமோய்வில்லாமல் தனதாகவேவருவார்
மனதின்படியே பலகாறம்-பதார்த்தம்
கனமாய்செய்தோமே யுபசாரம்
கர்த்தாநின்பாரம் இந்நேரம் (அன்)

2. சிவனடியார்க்கடிமை பவமென்செய்தேன்கொடுமை
அவனியிலன்னக்கொடிநாட்டி-நன்று
யெவர்களுமறிந்திட நீட்டி
இன்பங்காட்டி மேட்டி. (அன்)

3. சங்கராகங்காதர துங்கதிருநேத்திரா
பங்கம்வராமலெனைக்காறும்-சிவ
ஜனங்கள் வரக்கண்பாரும்
சஞ்சலந்தீரும் சரண்தாரும். (அன்)

சிறுதொண்டர்விருத்தம்

கொடுமைக ளென்செய்தோமோக் கோதிலப் பெரியோருக்கு
நடுநிலை தவறுதன்னம் நாமளித் திட்டோமின்று
விடுமுறை போட்டாப்போல வியன்மடத் தெவருங்காணோம்
கடுகசென் றடியார்தம்மைக் கண்டழைத் தோடிவாரேன்.

வசனம்.

ஹே நாயகி நாம் யாருக்கு என்னகொடுமை செய்தோம் மனதறிய வொன்றுஞ்செய்யவில்லையே பிரதி தினமும் அமுதருந்த வந்துகொண்டிருந்த ஜங்கமப்பெரியோர்கள் இன்றையதினம் ஒருவரேனும் வராதகாரணமென்னமோ தெரியவில்லை. ஆகையால்விரதபங்கம்வாராமல் நான்சென்று அழைத்துக்கொண்டு வருகின்றேன் அதற்குள் இங்கெவரேனும் அடியவர்கள் வந்தால் உபசரித்து அமுதளிப்பாய் பெண்ணே.

வெண்காட்டுநங்கை சொல் விருத்தம்

திருமொழிப் படியேசெய்வேன் றிவ்வியபாதங்கள்போற்றி
தருமங்கள் தவறுவண்ணந் தாங்கள்போய்த் தேடிப்பார்த்து
வருவதன் முன்னமிங்கே வருவோர்கள் தம்மைக்கண்டு
ஒருகுறை யேனும்நேரா துபசரித் தமுதீவேனே.

வசனம்.

துரையே தாங்கள் திருவடிக் கனந்தங்கோடி வந்தனம், தங்கள் உத்தரவுபடி அடியாள் நடக்கச் சித்தம் ஸ்வாமி.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம்-முகாரி-அடதாளம்.)

பல்லவி.

எங்கேகண்டுதேடுவேன் ஜங்கமர்களை நான்
ஏங்குதேயென்மனது

அநுபல்லவி.

மங்களமாய்நாளும் மகிழ்ந்தமுதுண்டவர்க்கு
மரியாதை தாழ்வென்ன செய்தேனோ எங்

சரணங்கள்.

1. ஆடுமாடுகள்மேய்க்கும் அருமைச்சிறுவர்களே
ஆண்டித்திருக்கூட்டத்தை யறிந்தீர்களா எங்

2. ஏருழுதுபயி ரிடுங்குடிகளேயெழில்
ஈசனடியார்களைக் கண்டீர்களா எங்

3. நாலுதிசைகளிலும் நாடித்தேடியுங்காணேன்
நானிதற்கென்ன செய்வேன் எங்

4. சரியை கிரியை யோகஞ் சார்ந்தமுனிவர் போற்றும்
புரிச் செங்காட்டருணேசா எங்

ஜங்கமர்கள் வருகிற பொதுவிருத்தம்.

அவனியி லடியாரென்போ ரறுபத்து மூன்றுபேரில்
நவநிதி செலவுசெய்து நற்படி யன்னதானம்
சிவனடி யார்க்குச்செய்யுஞ் சிறுத்தொண்டன்பத்திநன்றாய்க்
கவனித்து மனஞ்சோதிக்கக் கடவுள்ஜங் கமராய்வாரார்

வசனம்.

இவ்விதம் திருச்செங்காட்டங்குடியில் அன்னதானக்கொடி கட்டி அடியார்க் கமுதளித்துவரும் சிறுத்தொண்டர், தரும நெறியை அறிய சிவபெருமான், ஒருநாள் ஒரு அடியவரேனும் மடத்துக்கு வரவொட்டாமல்செய்ய, சிறுத்தொண்டர், ஐயமுற்று ஜங்கமர்களைத் தேடிக்கொண்டுபோயிருக்குஞ் சம

யத்தில், கைலாசபதியாகிய சிவபெருமான், வயிரவவேடந்தாங்கி மாயாசக்தியை மாயாண்டியாக்கி, சிறுத்தொண்டன் மனநிலையை சோதிக்கும்பொருட்டு மடத்தைநாடி ஜங்கமராய்வருகிறதறிவீர்கள் கனவான்களே.

ஜங்கமர் வருகிற தரு.

(இ-தர்பார்-அடதாளம்.)

பல்லவி.

ஜங்கமராய்வந்தனர் தரிசனந் தந்தனர்

அநுபல்லவி.

எங்கும்நிறைந்தபூர்த்தியேற்றுவாகனமூர்த்தி ஜங்

சரணங்கள்.

1. வெண்பொடிமெய்யில்மின்னவேங்கைத்தோளாடைதுன்ன
சண்ணப்பனெச்சில்தின்ன கர்த்தனைசம்பன்ன ஜங்

2. சடைமுடியிலங்க ஜபமாலைதுலங்க
நடையில்வயிறுகுலுங்க நதிமதிவிளங்க ஜங்

3. நரியைப்பரியாக நடத்தியவிவேக
சரியுரித்ததிபாக கடவுளரன்பாக ஜங்

4. திருச்செங்காட்டங்குடியில்சிறுத்தொண்டன்வாயிற்படியில்
மருமங்காட்டாமல்நொடியில் மனதறிந்திடமுடிவில் ஜங்

வயிரவர் விருத்தம்.

மனமதுக்கிசைந்தமாணு மாயாண்டி யிங்கேவாடா
தினந்தினமோய்வில்லாமற் சிறுத்தொண்டமடத்திலன்னங்
கனம்பெறவளிக்கின்றானைங் காணுவோமவன்றன்பக்தி
யனமிடுஞ்சத்திரத்தை யறிந்துநீயுரைப்பாயப்பா.

வசனம்.

என் மனதுக்கிசைந்த மாயாண்டி, இத்திருச்செங்காட்டங்குடியில் யாரோ சிறுத்தொண்ட பக்தனும் தினந்தினந் தவராது அடியார்களுக்கு அன்னதானம் செய்கின்றானும், அவன் பக்தி நெறியை நன்றாயறிந்து காக்ஷியளிப்போம், அன்னசத்திரமெங்கே அறிந்துரைப்பாய் அப்பா.

மாயாண்டி சொல் தரு.

(இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.)

பல்லவி.

கொடிபறக்கின்றது-அதோபார்
கொடிபறக்கின்றது

5

அநுபல்லவி.

படிதனிற்கீர்த்திகெடிபெறுஞ்சீர்த்தி
அடியார்மனபூர்த்தி அளிப்பான்வயிரவமூர்த்தி

சரணங்கள்

1. பன்னகபூஷணு பக்தர்சம்பாஷணு
பொன்னம்பலவாணு புகழ்சம்பூரணு கொடி

2. ஜாலமாகாதுசார் வோமந்தவிடத்தில்
சீலசிறுத்தொண்டன் சிங்காரமடத்தில் கொடி

3. கெம்பீரமாயெங்குங் கீர்த்திகொண்டாடுவார்
தம்பிரானேயன்னந் தாட்டியாய்போடுவார் கொடி

4. நறுமலர்வாவி நலமெலாஞ்சேருந்
திருச்செங்காடெனும்க்ஷேத்திரத்தேபாருங் கொடி

மாயாண்டி வசனம்.

இதுதான் ஸ்வாமி சிறுத்தொண்டன் அன்னசத்திரம்

வயிரவர் வசனம்.

சரி, சரி, இதுதானு ஆனல் ஒருசந்தடியுங் காணுமே என்ன காரணமோ மாயாண்டி

மாயாண்டி வசனம்

ஆயினுங் கூப்பிட்டுப் பார்ப்போங் குருநாதா

ஜங்கமர் தரு.

(சற்றேவிலகி யிரும்பிள்ளா யெனும் வர்னமெட்டு)

பல்லவி.

அன்னமடத்திலாரையா
அமுதளிப்பீர்காண்மெய்யா

அநுபல்லவி.

என்னேரம்பசியால் பொறுத்திருப்போம்
அன்னீதமாய்வந்து காத்திருப்போம் அன்

சரணங்கள்.

1. நாழிகைபதினேந்தாகுது நடந்தகால்களும்நோகுது
ரேழியிலொருஜாமமா நிற்பதுங்கட்குநேமமா அன்

2. ஜம்பமாய்க்கொடிபறக்குது சாதமில்லாமல்வறக்குது
அம்பலந்தில்லையம்பலம் ஆகறக்குமோகம்பலம் அன்

3. அரகராயீதாலேயே ஆண்டிகள்வரவில்லையே
சிரமோபசியால்நோகுதுசிவாசிவாஜீவன்போகுது அன்

4. வீணுக்கேனிங்கேவந்திட்டோம்வியர்த்தமாய்ப்பதம் நொந்திட்டோம்
பேணுஞ்செங்காட்டீசனே பிஞ்ஞகவருணேசனே அன்

வசனம்.

ஆரையா, இந்தமடத்தில் ஒருவரும் இல்லையா, அன்னம் உண்டா? இல்லையா, பசியால் மெலிகின்றோமே சிவ சிவா, சிவசிவா

வெண்காட்டுநங்கைசொல் கண்ணிகள்.

இந்துஸ்தான் நோட்.

1. சரணம்சரணம்பெரியோரே
சதாசிவம்போல்வந்த நெறியோரே
சாற்றினேன் மகிழ்ந் தேற்றினேன்
சம்ரமா யமுதுண்ணப் போற்றினேன் சா

2. அருணனுதய முதற் கொண்டு
அன்பர்கள் வரவை யெதிர்கண்டு
அமுதளிக்க வுங்கள் மனங்களிக்க
அறஞ்செழித்தோங்கியே பரிமளிக்க சா

3. மடத்துக்குள் தயைசெய்துவருவீர்கள்
மங்களபோஜனம் பெறுவீர்கள்
மகிழுடனே நல்லபுகழுடனே
மாசிலாத்திருமேனி திகழுடனே சா

4. திருச்செங்காடருணேசனைப்போல்
தீதறத்தரிசனந்தந்தீர்கள்சீல
திண்ணியரே ஞானக்கண்ணியரே
திகழ்மனத்தமர்வீர் அண்ணலரே. சா

வெண்காட்டு நங்கை விருத்தம்.

தவப்பயனோநான்முன்செய் தர்மமோ மனமகிழ்ந்தேன்
சிவபரன் கழலைப்போலுஞ் சீரடிகண்டேனின்று
தவமும லமுதளிக்கத் தனையாள்காத் திருக்கின்றேன்
உவந்துமே யெழுந்துவாரீ ரொண்கழல்போற்றிபோற்றி

வசனம்.

நான்செய்த தவமோ, அல்லது எனது முன்னோர்கள் செய்த புண்ணியமோ, தண்டு, கமண்டல, விபூதி, ருத்திராக்ஷகாவிகாம்பர தெரிசனங்கண்டு ஆனந்தங்கொண்டேன், மடத்துக்குள் எழுந்தருளுங்கள் அமுதளிப்பேன் ஸ்வாமிகளே,

ஜங்கமர் விருத்தம்.

பாக்கிய வதியேநாங்கள் பசியால்தான் வந்தோம்சாஸ்த்ர
வாக்கியப் படியேபெண்கள் வந்தழைத் திடத்தகாது
யோக்கியமாம் புருஷாளிங்கே யொருவரு மிலையாதாயே
சீக்கிரம் விளம்புவாயே சிரமத்துக் கிடம்வையாதே.

வசனம்.

அம்மா சௌபாக்கியவதியே, நாங்கள் பசியால்தான் துவளுகிறோம், ஆயினும் இந்தமடத்தில் யாராவது புருஷாளில்லையா, நீபெண்பால் ஆனதால் நீவந்தழைத்தால் நாங்கள் உள்ளே வருவது சாஸ்திரவிரோதம். ஆடவர் இல்லாததால் வரமாட்டோம் சொல்லுமம்மா.

வெண்காட்டு நங்கை ஜாவளி.

கண்ணிகள்

(மைத்துன வுன்மனைவி எனும் வர்னமெட்டு.)

1. அன்பரே நான்செய்த அபசாரம் பொறுப்பீரே
இன்பமாய்நானுங்கட்கமு தீந்திடவந்திழைத்திட்டேன்

2. தாளிகைதயாராச்சுது தாணுவினடியார்வர
தாமதமானதாலென் நாதன்போனாரழைத்துவர . அன்

3. ஜங்கமர் யார்வந்தாலும் சவரக்ஷணை செய்யச்சொன்னார்
சாமிகாளுங்கள்திவ்ய சரணிதம் போற்றிசெய்வேன் அன்

4. திருச்செங்காடுறையுந்திருத் தேவனைப்போலவந்தீர்
தேடினே னுங்களெழிற் சேவடியை நாடினேன்.

வெண்காட்டு நங்கை விருத்தம்.

பசியாக வருவோர்தம்மைப் பணிந்தெதிர் சென்றழைத்து
ருசியான வமுதமீயும் நோன்புகொண் டிருந்தோம்நாங்கள்
புசிப்பவர் வராதாலே பொருந்தாம லெனதுநாதன்
உசிதமாய்த் தேடிப்போனா ரொருநொடி வருவார் ஸ்வாமி

வசனம்.

பசியென்றுவரும் பரதேசிகளுக்கு அமுதளித்துப் பின் நாங்கள் உண்ணுகிறவிரதம், இன்றையதினம் ஒருவரும் வரவில்லை, ஆனதால் தேடிக்கொண்டு போயிருக்கிறார், யாராவது உங்களைப்போல்அடியார்கள்வந்தால் அமுதளிக்கும்படி உத்தரவு

செய்திருக்கிறார். அடியாள் அமுதளிக்கச் சித்தம். மடத்துக்குள் எழுந்தருளுவீர்கள் ஸ்வாமிகளே.

ஜங்கமர்கள் தரு.

(இ-ம்-சங்கராபரணம்-தாளம்- ஆதி)

பல்லவி.

ஆனலமுதருந்தமாட்டோம்
அம்மாஉள்ளதைசொல்லிப்போட்டோம்

அநுபல்லவி.

ஆடவரில்லை யானதால்தொல்லை
அஞ்சுகின்றேம் கெஞ்சுகின்றேம்

சரணங்கள்.

1. கானுறுகடந்து கடுந்தூரங்வந்திட்டோம்
தானைத்தியங்கி தடுமாறிநின்றிட்டோம்
தங்கோமிங்கே வெண்காட்டுநங்கே
தாளோம்பசி வேளைபோச்சு (ஆன)

2. கணபதீச்சர கானகந்துடர்ந்து
மணமுளதிரு வாத்தியின்கீழடைந்து
மன்னுகின்றேம் ஜெபம்பன்னுகின்றேம்
மாதேவுன்றன் நாதன்முன்சொல் (ஆன)

3. சென்னெல்வளர்திருச் செங்காட்டில்நீடுழி
அன்னதானப்பலன் அடைந்துவாழி
ஆசீர்வாதம் அளித்தோமெப்போதும்
அன்புடனே தென்புடனே. (ஆன)

வசனம்.

ஆடவரில்லாத அரண்மனையில், அமுதருந்தமாட்டோம், மடத்தில் உள்ளே வரவும் மாட்டோம், திருக்கணபதீச்சரத்திரு வாத்தியின்கீழ் சென்றிருக்கின்றேம். உன்நாயகன் வந்தால்வரச் சொல், வருகின்றேமம்மா.

வெண்காட்டுநங்கைக்கும் ஜங்கமர்களுக்கும் தர்க்கம்.

(இ-ம், கேதாரகௌளம். அடதாளம்.)

1. சன்யாசிமார்களே சாதுக்கள்நீங்களே
சற்றேமனம் பொறு திருப்பீர்தாங்களே
என்னிடநாதன் வருவார்காணுங்களே (சன்)

ஜங்கமர்.

நாதனில்லாவீட்டில் நாங்களிரோம்நாட்டில்
சாதம்வேறே கிடைக்குமோ திருவோட்டில்
வேதனைவேண்டாந் திருச்செங்காட்டில் (நாத)

வெண்காட்டு நங்கை.

2. வேண்டியமுதிட விரதமெங்களிட
ஆண்டிமார்ககள் நீங்கள் வந்தீரெதிரிட
தாண்டிப்போகத் தகுமோ தாள்வருந்திட (வே)

ஜங்கமர்.

வருத்தமெங்கட்கேது வழக்கந்தான்பார்மீது
தரித்திரத்தால்பிச்சை யெடுத்துண்ணும்போது
சிறுத்தொண்டர்வந்தால் வருகுவோம்மாது. (வரு)

வெண்காட்டுநங்கை.

3. வருவாரிந்நேரம் வள்ளல்களேதீரம்
திருவாய் மலர்தருள்வதுங்கள்பாரம்
திருவடிநோகப்போகலாகாதுதூரம் (வரு)

ஜங்கமர்.

தூரப்போகவில்லை தூயயிவ்வூரெல்லை
சேரத் திருவாத்திக்கீழ் சிறக்கின்றோம்கேள்சொல்லை
தீரத்திருச்செங்காட்டில் தீதொன்றுமில்லை. (தூர)

ஜங்கமர்கள் விருத்தம்.

வெகுநேர மாச்சுதம்மா விருதாவா யிங்குவந்தோம்
தகுதியா யுன்றன்நாதன் தம்பிரான் மாரைத்தேடி
சொகுசுடன் வருவார்வந்தால் சொல்திரு வாத்தியின்கீழ்
முகூர்த்த மங்கிருப்போ மப்பால்முளைந்துமேசெல்லுவோமே.

வசனம்.

நாங்கள் வந்து வேகுநேரமாச்சுது, இதுவரையிலும் இவ்வூரைச்சேர்ந்த திருக்கணபதீச்சுரத் திருவாத்திமரத்தடியில், உங்களைப்பற்றி ஒரு முகூர்த்தநேரம் தங்கியிருக்கின்றோம், உன் நாயகன்வந்தால் வரச்சொல் தாயே.

வெண்காட்டு நங்கை சொல் தரு.

(இ-ம். தர்பார் அடதாளம்.)

பல்லவி.

தடுக்க யென் தரம் ஸ்வாமி
தாங்கள் பெரியாள் தனையாள் சிறியவள்

அநுபல்லவி.

திடுக்கிடுவார்வந்து சிறுதொண்டரறிந்தால்
நடுக்குதென்னசெய்வேன் நன்மடத்தைப்பிரிந்தால் (தடு)

சரணங்கள்

1. தேடியுங்காணு-வஸ்து
தென்பட்டும்வீணு
கூடிவராதது கொடுத்துவைக்கவில்லை
மூடிவைத்ததிரவியம்மோசம்போனுப்போற்முல்லை (தடு)

2. பொழுதேறலாச்சு-என்நாதன்
போனவர்பேச்சு
அழுதெங்கதுடித்து அலையுகின்றனரோ
பழுதாய்விரதபங்கம் பரன்செய்கின்றனரோ (தரு)

3. தாங்களெத்தேயம்-விபரமாக
சாற்றுவீர்ஞாயம்
நீங்கள் திருவாத்தி நிழலிருங்கள்
நாங்கள்வந்தும்மை நாடுமட்டும் பொறுங்கள் (தடு)

வசனம்.

ஜங்கம ஸ்வாமிகளே, தாங்கள் பெரியவர்கள் அடியாள் சிறியவள், தங்களைத் தடுப்பதென்தரமா, நீங்களிருப்பது எத்தேயம், உங்கள் நாமதேயம் யாது, அதையுரைத்து உங்களிஷ்டப்படி திருக்கணப்பதீச்சுர திருவாத்தியின்கீழ் சென்றிருங்கள், என்நாயகன் வந்தவுடனே தெரிவித்து வரச்செய்கிறேன், அதுவரையில் பொருத்திருந்தருள பிரார்த்திகிறேன்.

ஜங்கமர்கள் விருத்தம்.

உத்தர தேயந்தன்னி லுள்ளவர் நாங்களம்மா
சித்தர்கள் குழாத்தோ ரென்பேர் சீர்வயி ரவனுமென்பா
லொத்தவன்பெயர்மாயண்டியுண்மையாயுரைத்தோமுன்றன்
பத்தாவுக் கிதனைசொல்லிப் பண்புடன் வரச்செய்வாயே.

வசனம்

நாங்களிருப்பது வடதேசம் சித்தர்கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பெயர் வயிரவநாதன், இவர்பெயர் மாயாண்டி, உன்நாயகன் வந்தால் சீக்கிரம்வரச்சொல், நாங்கள்போய்வருகிறோம்தாயே.

வெண்காட்டு நங்கை வசனம்.

தங்கள் சித்தம் ஸ்வாமிகளே.

பொது வசனம்.

இவ்விதம் ஜங்கமர்கள் சென்றபின்பு திருவெண்காட்டுநங்கையார், அடியார்களைத் தேடப்போன நாயகன் வாராததைப் பற்றிக்கடவுளைக்குறித்துபிரலாபிக்கிறதறிவீர்களவான்களே.

வெண்காட்டுநங்கை தரு.

(இ-ம். எதுகுலகாம்போதி. தாளம்-திரிபுடை.)

பல்லவி.

போன நாதன் வரக்காணேன்
புத்தி தடுமாறுதையோ

அநுபல்லவி.

தானுப்வந்த ஜங்கரும்
தாண்டினுரே வேண்டியும்நேரே.

சரணங்கள்.

1. எங்குதேடித் திரிகின்றுரோ
இளைத்துமெத்த வாடுருரோ
சங்கையொன்றுந் தெரிகிலேனே
சந்தேகத்தை யறிகிலேனே (போன)

2. இதுவரையில் வந்தகூட்டம்
இன்றுவரா தென்னவாட்டம்
புதுமையுதுவோ பிரகாசா
பொன்னம்பல நடராஜா (போன)

3. அன்னதான நெறியீடேற
ஆதரி நான் கடைத்தேற
பொன்னகர் நிகர்சருவேச
புகழ்செங்காடுறை யருணேச (போன)

வசனம்.

ஓம், ஹர ஹர பரமசிவமே, மடத்தைத் தேடிவந்த ஜங்கமர்களும் போய்விட்டனரே, என் பிராணநாயகனும் வரவில்லையே, எங்கெங்கு அடியார்களைத் தேடி அலைகின்றனரோ, ஒன்றுந் தெரியவில்லை, யென்செய்வேன், சிவமே.

பொது வசனம்.

இங்கு இவ்வாறிருக்க அடியார்களைத் தேடபோன சிறுத்தொண்டர் ஒருவரும் அகப்படாமையால் கடவுளைத்துதித்து மடத்துக்கு திரும்பிவருகிறவிதம் அறிவீர்கள்கனவான்களே.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி)

பல்லவி.

சங்கரா-சிவ ஜங்கமர்களை நான்
எங்கெங்குந்தேடினேன்

அநுபல்லவி.

மங்கைபங்காளாநின் மாயமோவறியேன்
அங்கம்பதறுதே ஆனலுஞ்சிறியேன்
அலைவதுநீதியோவையா
அழன்மானேந்தியகையா
நிலைக்கச்செய்யறமதைமெய்யா
நிகரிலாநீள்சடைதுய்யா (சங்)

1. அன்னக்கொடிகட்டினேன்-நான்
அதுமுதல்வருவோர்க் கமுதிட்டுண்டேன்
இன்றென்னகாரணமோ யிதுவரையில் காணேன்
எத்திசையும் ஓடி சுத்தியும்வீணனேன்
இனியென்னசெய்குவேன்சிவனே
யெங்குமேநிறைந்திருப்பவனே
புனிதனேகரியுரித்தவனே
புரமதை சிரித்தெரித்தவனே (சங்)

2. விரதம்வீணய்ப்போச்சுதே-நாளும்
விழலுக்கிறைத்த வீணர்போலாச்சுதே
துறவறத்தார்க்கிந்த துன்பங்களில்லையே
தொண்டனென்றேநாமங் கொண்டதுந்தொல்லை
துடித்துளமேங்குதேபரனே
துணையெனக்காரினியரனே
வடிவுளகணபதீச்சுரனே
வகைசொல்மங்களகரனே (சங்)

3. பாவைவெண்காட்டுநங்கை-வழி
பார்த்துப்பார்த்துவிழிபூர்த்திருப்பாளங்கே
சேவைக்கெதிர்வந்து சிந்திததிருப்பாலே
ஜங்கமரெங்கேயென றென்னைவெறுப்பாளே
சிவசிவா ஓம்பரமேசா
சீர்செங்காட்டினில் வாசர
பவமதைத்தீரருளேசா
பணிந்தனன்பாதம் ப்ரகாசா (சங்)

இதுவுமது.

கண்ணிகள்.

(இ-ம்-முகாரி-தாளம்-ஆதி)

பல்லவி.

1. சிவமே நான்செய்த பவமே
சீரமு துண்போரைக் காணேனேயோ (சிவ)

2. தவமே போச்சே யவமே
தஞ்சம் இந்த அஞ்சல் தீரக்காரும்! (சிவ-

3. என்னக்குறையோ யல்லால் புரையோ
எங்குந் தேடி ஜங்கமரைக் காணேன் (சிவ)

4. நாலு திசையும் பார்த்தேன் பல்விசையும்
நாண மாகி வீணர் போலானேன் (சிவ)

5. தனி புசியேன் நெறி யசையேன்
தாவிக் கூவி மேவி யலைகின்றேன். (சிவ)

சிறுத்தொண்டர் விருத்தம்.

அன்னதா னத்தின்கீர்த்தி யழியாம லிதுவரைக்கும்
உன்னத வடியார்வந்து உண்டபின் னுண்டிருந்தேன்
என்னமோ வித்தினத்தி லெங்கெங்குந் தேடிக்காணேன்
பன்னகா பரணவுந்தன் பாதமே போற்றி போற்றி.

வசனம்.

பன்ன பூஷண, பக்தர் சம்பாஷண, இதுவரையில் யாரும் வாராமையினால் தேடியுங்காணேன், ஆயினும் மடத்தில் யாராவது வந்திருப்பார்களோ போய் பார்க்கின்றேன் சிவமே

சிறுத்தொண்டருக்கும் வெண்காட்டுநங்கைக்கும் சம்வாதம்.

(இ-ம்-தேசிகதோடி-அடதாளம்.)

கண்ணிகள்.

நங்கை.

1. மணவாளரேயுன்றிரு மதிமுகம்வேறாக
மாறி வந்தீரென் கூறீர்

சிறுத்தொண்டர்.

தணல்போல்காயும்வெய்யலிற் றரியாமலோடிதேடி
தானுவி னடியார் காணேன்

நங்கை.

2. காணுமல்வெகுதூரம் கால்கடுக்கவோடியே
களைத்தீர் திரேகம் இளைத்தீர்

சிறுத்தொண்டன்.

களைத்தாளுஞ்தேகஞ்சேர்ந்து யிளைத்தாளுமடியாரை
கண்டு செய்வேன் தொண்டு

நங்கை.

3. தொண்டரிருவர்கூடி பண்டுமடத்தில்வந்தார்
துதித்தேன் எதிர் உதித்தேன்

சிறுத்தொண்டர்.

உதித்த ஜங்கமரமு துண்டாரோ இல்லையோ
ஓது மட மாது

நங்கை.

4. மாதுவுபசரித்தேன் மறுத்தார்நீரில்லையென்று
மயங்கிப் போனுர் தியங்கி

சிறுத்தொண்டர்.

திகழுந்திருச்செங்காடு தேவனுமருணேசன்
செயலோ அவர்க்குநான் அயலோ

வெண்காட்டு நங்கை விருத்தம்

தேடச்சென் றீரேயந்தத் ததியினி லிருவர்வந்தார்
சோடச வுபசாரங்கள் சோர்வறச் செய்துநின்றேன்
ஆடவ ரிலாமடத்தி லமுதுண்ண மாட்டோமென்று
சீடருங் குருவுங்கூடித் திருவாத்திக் கீழ்சென்ருரே.

வசனம்.

தாங்கள் தேடிக்கொண்டு போனவுடனே இரண்டு ஜங்கமப் பெரியோர்கள் வந்தார்கள், அவர்களை யுபசரித்து அமுதுண்ண வருந்தினேன், தாங்களில்லாததால் மடத்துள் நுழையோமென்றும், அமுதருந்தோமென்றும், திருக்கணபதீச்சுர திருவாத்தியின் நிழலில் முகூர்த்தகாலம் வீற்றிருப்போம் என்றும் தாங்கள்வந்து அழைத்தால் வருவதாகவும் சொல்லிச் சென்ருர்கள் நாதா.

சிறுத்தொண்டர் விருத்தம்.

மங்கள வார்த்தையாளே மனமது மகிழ்ந்தேன்பெண்ணே
யெங்கணுந் தேடிக்காணு தேங்கியே வாடும்வேளை
சங்கர னருளால்நல்ல சங்கதி களிக்கச்சொன்னுய்
ஜங்கமர் தன்னைக்கண்டு ததியினி லழைத்துவாரேன்,

வசனம்.

ஜங்கமர்களைத்தேடி யிளைத்துவந்த என்குறைதீர, சுபவார்த்தை சொன்ன யென்கண்மணியேஇதோ நான்போய் அழைத்து வருகிறேன் பெண்ணே.

வெண்காட்டு நங்கை வசனம்

சீக்கிரம் அழைத்துவருவீர் நாதா

பொது வசனம்.

இவ்விதம் சிறுத்தொண்டர் திருக்கணபதீச்சுரத் திருவாத்திவிருக்ஷத்தைநாடி வருமளவில் ஜங்கமர்கள் சம்பாஷணையை யறிவீர்கள் கனவான்களே.

வயிரவர் விருத்தம்.

அப்பாமா யாண்டியந்த அணங்குவெண் காட்டுநங்கை
தப்பாமல் நமக்குசொன்ன தவணையுந் தவறிப்போச்சு
ஒப்பாது யிங்கிருக்க வுண்மையாய் பசிக்குதப்பா
இப்பாரில் தருமஞ்செய்வோ ரிடங்தேடி யேகுவோமே.

வசனம்.

அப்பா மாயாண்டி, இந்ததிருச்செங்காட்டங்குடியில்சிறுத்தொண்டருடைய பத்தினி வெண்காட்டுநங்கை சொன்ன காலமும் சென்றுவிட்டது. இனி கணநேரமும் பசி பொறுக்க முடியாது இனி எங்கேனுந் தருமம்செய்வோரின் இடம்போகலாம் எழுந்திரு எழுந்திரு.

மாயாண்டி தரு

பார்ஸ் வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. வயிரவரே சிறுத்தொண்ட
வள்ளல்வரும்வேகமதைப் பார், பார், பார்
வையகத்திலன்ன தானம்
வழங்கிடுந்தியாகியென்று பேர், பேர் பேர் (வ)

2. தைரியத்தைமுழுதிலும்
தானறிந்துபார்க்கலாம்
தசிராமலிருந்திட்டல்
ததியிற்பதவிசேர்க்கலாம் (வயி)

3. பத்தியாய்நெற்றியில்பூதி
பளபளன்றுவீசுது
வெத்திசேருமுருத்திராக்ஷ
விளக்கங்கண்கள்கூசுது (வயி)

4. முத்திதனையடையும்நெறி
முகத்தில்மிகவீசுது
மூலாதாரனேநாம்வந்த
முடிவுபடியாச்சுது (வயி)

வசனம்.

ஸ்வாமி வயிரவநாதா, அதோ சிறுத்தொண்டன் வந்து கொண்டிருக்கிறுன் பாரும் நன்ருய்ப் பரீக்ஷிப்போம், மர்மத்தை சீக்கிரம் வெளியிடப்போகாது பத்திரம் உஷார்,ஜாக்கிரதை

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம், சுருட்டி தாளம்-ஆதி)

பல்லவி.

போற்றிப் போற்றி யுங்கள்
பொன்னடியை தொழுது புகழ்ந்து மகிழ்ந்தடியேன்

அநுபல்லவி.

நாற்றிசையிலுந்தேடி வேர்த்திங்கேவந் தேனேடி (போ)

சரணங்கள்.

1. காலையில்லேயெழுந்த கதிரைக்கண்டபங்கஜம்
போலமுகமலர்ந்தேன் புண்ணியரே கண்ணியரே(போ)

2. காணுதர்க்கருமையாங் கார்த்திகைப்பிறையெதிர்
தோணும்பாவனேபோலதொண்டநான்கண்டுகொண்டேன்

3. தரிசனத்துகுகந்த தாஷ்டீகத்தில்மிகுந்த
புரிச்செங்காட்டருணேசன் போலேவந்ததாலே (போ)

சிறுத்தொண்டர் துதி விருத்தம்.

சீரான சென்னிமிசைச் செழித்தோங்கிப் படர்கின்ற
செஞ்சடைக் கொருகோடி சரணம் சரணம்
சிவாசிவா யெனப்பூசை செய்தணிந் திருக்கின்ற
திருநீருக் கிருகோடி திவ்வியசரணம்

தீராத பவமெலாந் தீர்த்திடு ருத்ராக்ஷ
ஜெபமாலே தனக்குதிரி கோடிசரணம்
தேங்குபுகழ் தாங்கிவளர் பாங்கான புலிசரும
திகழுடை தனக்கு சதுர்க்கோடிசரணம்

பேரான மிடையுளப் பெருகிடும் காஷாய
பெருமைக் கோடி பிரியசரணம்
பிரபல மானதொரு கரமதிற் றுன்னிடும்
பிரம்மதிரு வோட்டுக்கறு கோடி சரணம்

தோராத திருவடியில் துலங்கும்பா தக்குறடை
தொழுதன னேழுகோடி தூய சரணம்
துதித்தன னென்னிட துயர்தனைப் போக்குவீர்
தொண்டனேன் போற்றி போற்றி.

ஜங்கமர் தரு.

(இ-ம். சங்கராபரணம் தாளம் ஆதி)

பல்லவி.

வாழி நீயேவாழி வாகாய் நீடூழி

அநுபல்லவி.

ஆழிசூழுலகினி லதிகம்சம்பத்துடனே
தாழ்விலாமலெப்போதுந் தழைத்துக்களிப்புடனே

சரணங்கள்

1. ஓடியேவந்தாய்
உள்ளமகிழ்ந்தாய்

கோடிசரணம்செய்து கோதற எதிர்நின்றாய்
நாடிவந்த சோதியை நவில்வா யறியாநன்றாய் (வாழி)

2. வருசியாய்பேசி
வளமார் விஸ்வாசி

துரிசாயெங்களைத்தேடி தொண்டன்நீவந்ததாலே
புரிச்செங்காடுறையும் புனிதனருளினாலே (வாழி)

வசனம்.

வாழி, வாழி, நீடூழியாகவாழக்கடவாய், அப்பா நீ யார்? எந்த ஊர்? உன்பெயர் என்ன? எங்களைத் தேடிவந்த காரணம் யாது கூறுவாய்

சிறுத்தொண்டர் வசனம்.

அடியேன் வாழிவ்வூர் திருச்செங்காட்டங்குடி என்பெயர் சிறுத்தொண்டன் என் அன்னமடத்தில் நீங்கள்வந்ததாகவும், அடியேனில்லாமைபற்றி அமுதருந்தோம் என்றும், இந்தசந்நிதானத்தில் இருப்பதாகவும் அடியேன்வந்தால் வருவதாகவும், தாங்கள் திருவாய் மலர்ந்தருளியதால் என் நாயகியால் கேழ்விப்பட்டு ஓடிவந்தேன் ஸ்வாமிகளே.

ஜங்கமர் வசனம்

அப்பா பக்திசிரோமணி நீ சொன்னதெல்லாம் வாஸ்தவந்தான், நீ எங்களை எங்கே வருந்தி யழைக்கின்றாய், சீக்கிரம் சொல்லுவாய்.

சிறுத்தொண்டர் தரு.

(சாரதா நீயே கதி தாயே எனும் வர்னமெட்டு)

பல்லவி.

அமுதுண்ண வழைக்கின்றே னையா
அடியேனுக் கருள்செய்வீர் மெய்யா

அநுபல்லவி.

சமுகமதனைத்தேடிச் சந்தோஷத்துடனோடிக்
குமுதமலரடிக்கண்டேன் குறைதீர்ந்தானந்தங்கொண்டேன்

சரணங்கள்.

1. அன்னமிட் டுண்ணெனு மௌவை
அமுதவாக்கியஞ் செவ்வை
இன்னாள்வரையில் செய்துவந்தேன்
இன்றெவருவரும்வாரமையால்நொந்தேன் (அமு)

2. ஆத்திமரத்தின் கீழே
அமர்ந்தீ ரடியேன்வாழ
தோத்திரஞ்செய்தேன் கண்பாருங்கள்
தொண்டனென் மடத்தில் வாருங்கள் (அமு)

3. அறியாச்சிறிய னீடேற
அன்பர்மனங் களிகூற
பிரியமான தெல்லாம் தரிவேன்
பின்புங்களாசிபெறுவேன் (அமு)

4. கஞ்சமலர்த் தடஞ்சேர்
கதிக்குசெங் காடெனுமூர்
பிஞ்ஞகனெனு மருணேசன்
பீடிதாசானு தாசன். (அமு)

வசனம்.

உத்தம ஜங்கமர்களே, சித்தங்களித்து. பத்தன்மடத்தில் சுத்தமான அமுதுகொள்ள எழுந்தருளுங்கள்.

ஜங்கமர் தரு.

(வந்தனள் சரஸ்வதி யெனும் வர்னமெட்டு)

பல்லவி.

என்னகாண் கறியுமதிடமதா மடத்தினில்
இன்னவிதங்களென்று இயம்பினல் வருவோமின்று

அநுபல்லவி.

இன்றைக்கெவரும்வரவில்லை என்னசெய்தீர்காண்தொல்லை
நன்றறிவோ முன்சொல்லை நாழிகையானுல் பயனில்லை (என்)

சரணங்கள்.

1. எங்களிஷ்டப்பிரகாரம் இருந்தாலும்போமேதீரம்
சங்கையென்னவிசாரம் சாற்றிடுவாயுத்தாரம் (என்)

2. சென்னெல்சூழ்செங்காட்டினில் செழித்தவருணேசனர்
பொன்னடிக்குச்சுத்தனே புகல்வாய்நல்லபத்தனே (என்)

வசனம்.

அப்பா, அன்னதானம் செய்யும் அன்பனே, உன்மடத்தில் பிரதிதினமும் ஓயாது வந்துகொண்டிருக்கும் அடியார்கள் இன்றையதினம் ஏன் ஒருவரும் வரவில்லை, யோசிக்கின், யாதோஉன் மடத்தில் விரோதம் இருக்கிறது என்று தோன்றுகிறது அல்லவா ஆனுலும் உன்மடத்தில் எவ்வித கறியமுதுகள் தயாராகியிருக்கின்றது, கூறுவாய் பார்க்கலாம்.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம், தோடி-தாளம்-ரூபகம்)

பல்லவி.

என்னவிதங்கள்வேண்டுமோ எல்லாம் குறைவிலைகாண்

அநுபல்லவி.

கன்னல்சர்க்கரைகற்கண்டு கண்ணமுதுவேணதுண்டு (என்)

சரணங்கள்.

1. ஆமவடைபோளிசுய்யம் அதிரஸமாவினெய்யும்
சாமைதினைமாவில்செய்யும் சாரமனேகரத்தையும் (என்)

2. இட்டலிதோசைலட்டு இன்பமதாகத்தொட்டு
கட்டிதயிரதனைவிட்டு கலந்துண்பீருடன்பட்டு (என்)

3. வாழைப்பலாபூஷணிக்காய் வரல்பொரியல்வண்டக்காய்
மாழைபுடலன் பாகல்காய் மந்தமுள்ள முந்திரிக்காய்

4. கொத்தவரைக் கத்தரிக்காய் கோதிலாத அவரைக்காய்
சத்தான கிழங்குவகை சமைத்துளது வேணதுகை (என்)

5. அறுசுவை யோடுவுண்டு ஆனந்தீப்பீர்களிகொண்டு
திருச்செங் காட்டினில்பண்டு தேவனருணேசன்றெண்டு

வசனம்.

இவ்வுலகின்கண்ணுள்ள பதார்த்தங்கள் என்னெனன்னவோ அவையெல்லாந் தயாராக யிருக்கின்றது, உங்கள் இஷ்டப்படி அமுதுண்டு களிப்பீர் வாருங்கள் ஸ்வாமிகளே.

ஜங்கமர் தரு.

பார்ஸ் வர்ணமெட்டு.

பல்லவி.

போதும் போதும் அன்னமிடும்
பவிஷெல்லாம் வெளியாச்சுப் போ, போ, போ,

அநுபல்லவி.

சாதுவான யெங்களை நீ சாகடிக்கப் பார்க்கிறுய்
சந்துசந்தாயோடிவந்தசிவ ஜங்கமரை சேர்க்கிறுய்
சூதுவாதும் உள்ளே வைத்து தூயவார்த்தை கோர்க்குறுய்
சோகி யஞ்சை பஞ்சைகளை சொர்க்கந்தாரை வார்க்குறுய்

சரணங்கள்.

1. அன்னக்கொடி கட்டியதேன் ஆண்டிகளைக்கொல்லவோ
ஆதிசிவ னடியார்களை அக்ரமத்தால் வெல்லவோ
கன்னக்குறவர் வீடெல்லாங் கள்ளக்கும்பி டல்லவோ
கறிசமைத்த வகைக்குநாம் கண்டனங்கள் சொல்லவோ

2. பூஷணிக்காய் ஆதிசிவன் பூசல்தொப்பையல்லவா
பொரியல்பாகல் ருத்திராக்ஷம் புதுமை யழகல்லலா
தோஷிசுரக் காயோடு சோறெடுப்ப தல்லவா [லவா
துன்னும்வாழை யாண்குறிதான் தொல்லைவிட்டுச் சொல்

3. கத்தரிக்காய் தூளிதப்பை காரணங்க ளாச்சுதே
கருணைக்கிழங்காவது கர்த்தன்வித்து போச்சுதே
கொத்தவரைப் பித்தனிட கொள்கைவிர லாச்சுதே
கோதிலாத அவரைக்காய் குறிப்புநக மாச்சுதே (போ)

4. ஆனதினு லுன்மடத்தில் ஆரும்வர வில்லையே [ல்லையே
அன்னதானம்செய்தும்வீணுய் அடைந்தாய்பெருந்தொ
வானளவு சோலைமிக வளர்செங்காட்டு யெல்லையே
வள்ளரு ணேசன்திரு வாய்க்குருசி யில்லையே. (போ)

வயிரவர் விருத்தம்

சமைத்திடும் பதார்த்தமெல்லாம் சங்கமர்க் கொப்பாதப்பா
உமைத்திருப் பாகன்றிவ்ய வுருவத்துக் கொத்ததாகும்
சுமையாகப் பாபமூட்டை சுமந்திடச் செய்கின்றுயோ
அமைத்திடு முன்மடத்தில் அமுதுண்ண மாட்டோம்தானே

வசனம்.

அப்பா, அன்னதான பக்தனே, நல்லகாரியஞ்செய்தாய், போதும், போதும், பதார்த்தவகை யிலக்ஷணம் பரமசிவன் அவயவத்துக் கொப்பான பதார்யதங்களைப் போட்டதினுலேயே உன்மடத்துக்கு ஒருவரேனும்வரவில்லை. இதற்காகத்தான் முன்னதாகவே கேட்டுக்கொண்டோம். எங்களுக்கும் இஷ்டமில்லை. நாங்கள் வரமாட்டோம்.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம்-பியாகடை- அடதாளம்.)

பல்லவி.

வேறேயெதுவேண்டுமோ விரும்பியதைக்கேளுங்கள்
வெதும்புங்கோபத்தைத்தாளுங்கள்

அநுபல்லவி

போரேனென்றுசொல்லாதீர் போய்விடுமெனதாவி
பொறுங்கள்பொறுங்கள்நானோர் புத்தியில்லாதபாவி (வே)

சரணங்கள்.

1. பணத்துக்குப்பணயெடை யிருந்தாலுமேயந்த
பதார்த்தத்தையேதருவேன்
குணத்துக்குயேற்றபடிக் கொடுப்பேனுயிரானாலும்
கோரும்விதங்க ளென்னமோ

மணத்துக்குள்மணம்நீங்கள் மர்மம்விட்டுச்சொல்லுங்கள்
மங்களமாய்போஜன மகிழ்ந்துண்ணப் பின்செல்லுங்கள்
வணங்குமேழைமேல்தோஷம் வையாமலேபுல்லுங்கள்
வந்துயென்மடத்தினில் வாகாய்சற்றேநில்லுங்கள் (வே)

2. கொடுக்கச்சக்தியில்லாமல் கொடிகட்டியிருப்பேனே
கோதிலாப்பெரியோரே
அடுக்கடுக்காய்மணி யடிபடவுங்கெங்கும்
அன்னமீந்தேன் நெறியோரே
நெடுக்கப்பார்த்துயெந்தன் நிலையையறிந்திடுங்கள்
நினைத்ததைதராவிட்டால் நீங்கள் தள்ளிவிடுங்கள்
சடுக்கென்றுவாய்திறந்து சமைக்கவரங்கொடுங்கள்
ஜங்கமரேமனதில் சந்தோஷமேபடுங்கள் (வே)

3, மண்ணும்கணபதீசா மகதலத்திருவாத்தி
மரமதின்நிழலின்மீது
தன்னந்தனியேநீங்கள் தளர்ந்துபசியால்வாட
தர்மமோயிப்போது
சின்னஞ்சிறியன்பேரில் சிற்றமின்றித்தேருங்கள்
சிறுத்தொண்டனென்னும்பேர் ஜகத்திலங்கக்கோருங்கள்
அன்னதானப்பலன் அடையக்கண்பாருங்கள்
அற்புதசெங்காட்டு அருனேசன்போல்நீங்கள் (வே)

வசனம்.

தங்கள் இஷ்டப்படி எதுகேட்டாலும் கொடுக்கத் தடையில்லை ஸ்வாமிகளே.

ஜங்கமர் தரு.

(இ-ம்-தர்பார்-ஏகதாளம்.)

பல்லவி.

தருவீரா நீர் தருவீரா
தாட்டியா யுண்டிடக் கேட்டிடும் வகையை

அநுபல்லவி.

அருமைமெத்தவு மருமையுன்னாலே
ஆகாதுவுனக்கேன் சிறுமையென்னாலே
வெறுமைகேட்டிலையென் றால்தொல்லைபின்னாலே
விலையாய்முடியுஞ்சொன் னேமதைமுன்னாலே (தரு)

175900

சரணங்கள்.

1. ஆறுமாதத்துக்கு வோர்தரம்விருந்து
அழகுபசுங்கறியருந்துவோம்பரிந்து
கோரும்விதமது கூறினேம்தெரிந்து
கொள்வீரெங்கள்மனக் குறிப்பையறிந்து (தரு)

2. வாரமறிந்து வந்தோமேஓடி
வழக்கவிரோதம் வையாமலேதேடி
தீரமிருந்திட்டால் தென்புடன்கூடி
செய்தாலானமட்டுந் தேக்குவோம்நாடி (தரு)

3. ஆதிமுதல்செய்த வன்னதானக்கீர்த்தி
அடைவாயிவ்வித மளித்தால்சீர்த்தி
நீதிசேர்செங்காட்டில் நீள்சடைமூர்த்தி
நிர்க்குணனருணே சன்மனப்பூர்த்தி (தரு)

வயிரவர் விருத்தம்.

ஆறுமா தத்துக்கோர்நா ளரும்பசு தன்னைக்கொன்று
கூறுடன் பாகஞ்செய்துக் குணமுட னேபுசிப்போம்
கூறுவோ மதுதானிந்நாள் கூடின தானதாலே
நீறுசேர் நுதலாயன்பாய் நீயின்று தந்திடாயே..

வசனம்.

அப்பா அன்னதான தியாகி, எங்களுக்கொரு விரதமுண்டு யாதெனில். ஆறுமாதத்துக் கோர்தரம பசுக்கறி புசிக்கின்ற வழக்கம், அத்தினம இத்தினமேயானதால், நீதான் தருவாயென்று வந்தோம், இவ்விதம்கொடுக்க சக்தியிருந்தால் வருகின்றோம், என்னசொல்லுகிறாய்.

சிறுத்தொண்டருக்கும் ஜங்கமருக்கும் சம்வாதம்.

(சங்கரனே சங்கரனே யெனும் வர்னமெட்டு.)

சிறுத்தொண்டர்.

1. இதுதானா யெனக்கருமை
எண்ணவேண்டாம்மன திற்சிறுமை
எதுவானாலுந்தருவேன்
ஏவல்களுஞ் செய்துவருவேன் (இது)

ஜங்கமர்.

ஏவல்செய்யத் தேவையில்லை
யெங்கள்பசி தாளவில்லை
ஆவல்கொண்ட படியேநீர்
அளிப்பீரா மணங்களிப்பீரா (ஏவ)

சிறுத்தொண்டர்.

2. களிப்புடனே பாகம்செய்யக்
காக்கின்றேன் எதிர்பார்க்கின்றேன்
ஒளிர்பசுக்கள் மிகவுண்டு
உரைப்பீர்கள் பார்த்து குறிப்பீர்கள் (களி)

ஜங்கமர்.

குறித்துச்சொன்னோம் நரபசுதான்
குறியீரா நன்றாய்த் தெரியீரா
பொரித்தெமக்கு வழுதீந்தால்
புசிப்போமே நாவில் ருசிப்போமே (குறி)

சிறுத்தொண்டர்.

3. நரபசுபெண்ணு வாணு
நானிலத்திற் சொல்லுமையா
தீரமுடனே விபரமதாய்
தெறிந்திடவே நா னறிந்திடவே (நா)

ஜங்கமர்.

தெளிந்திடுசீர்ச் செங் காடுறைத்
தேவனருணேசன்மனங்
குளிர்ந்திடவே கூறுகின்றோங்
முணமுளது ஆண் உணவுளது (தெளி)

ஜங்கமர் விருத்தம்

அருமையாம் பசுமாடல்ல அன்பனே சொல்வேன்நல்லப்
பெருமையா முயிர்தனக்குப் பேர்பசு வெனவிளங்குந்
திருவுரு வமைந்ததான திகழ்நர மாமிசத்தை
விரும்பினே மின்றைக்கந்த விரதம்போல் தருகுவீரா.

வசனம்.

அப்பா சிறுத்தொண்டனே, பசுவென்றால் உயிர், நர பசு வென்றால் மானிடவுயிர் அதிலும் ஆண்வடிவந்தான் இவ்வித கறி சமைத் தன்னமிட உன்னால் கூடுமா கூடாதா சீக்கிரம் தெரிவிப் பாய்.

சிறுத்தொண்டர் விருத்தம்.

அடியவ ரெதைக்கேட்டாலு மளிப்பதென் கடமையாகும்
படிமிசை பால்யமூப்புப் பலவகை யுளவவற்றில்
பிடிப்புள தெதுவோசீராய்ப் பிரித்தெடுத் துரைப்பீரானல்
நொடியினிற் றருவேன் நீங்கள் நுகர்ந்துமே யுவகைகொள்வீர்.

வசனம்.

அடியார்கள் கேட்டபடி அமுதளிக்கத்தான் அன்னக்கொ டி கட்டியிருக்கின்றேன். ஆகிலு மிதுவரை ஒருவரும் நரமாம்ஸ பக்ஷணம் கேட்டவர்களில்லே, அதிசயமாய் நீங்கள் கேட்கிறபடி யால் மானிடர்களில், பலவகை பருவபேதங்கள் இருப்பதால் அவற்றில் விருப்பமெதுவோ அவற்றை தெரிவிப்பீர்ஸ்வாமிகளே

ஜங்கமர் தரு.

(இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.)

பல்லவி.

சீலசிறுத்தொண்ட பக்தனே-ஜெகம்புகழும்
சீலசிறுத்தொண்ட பக்தனே.

அநுபல்லவி.

ஞாலமுழுது முமதுகீர்த்தி
மேலாய்விளங்கி மேவிடும்புகழ் தாவிடுந்திகழ் (சீல)

சரணங்கள்.

1. பாலவயது வைந்ததாக
பஞ்சலக்ஷண மிஞ்சியவிவேக
காலையிலெழுங் கதிரோன்போலாக
கஞ்சமலர் முகமாக
கதித்திடுங்குடி தனக்கொன்றாய்
கலைகளையறிந்ததாய் நன்றாய்
மதித்ததை பிடித்தறுத்தொன்றாய்
மணமாய் சமைத்து வுண்வாய் தருவாய் (சீல)

தாயார் துணிந்து தலையைப் பிடித்து
தந்தை மகிழ்ந்து தனயனை மடித்து
தோயா வுதிரமோர் பாண்டத்திற் பிடித்து
துரிதமாய்ப் பாகங்கள் முடித்து
துலங்கவே யவயவங்கள்வேறாய்
முணித்துமேநீ பொரித்துசீராய்
நலமொடுரு சித்திடதாராய்
நாடி கூடி யோடி வருவோம் (சில)

3. விரதவுண்மையை விள்ளச்சொல்லிப்போட்டோம்
வேளைதவறினல் விருந்துண்ணமாட்டோம்
அறம்வளர்திருச் செங்காடுறைத்தேட்டம்
அருணேசன் றிருக்கூட்டம்
அறிந்துகொள் சீக்கிரம் சீக்கிரம்
அகத்தினில்வந்து யேன்காக்கிறோம்
பொருந்தியகளை களைத்தீர்க்கிறோம்
புண்ணியம் பண்ணிய கண்ணிய திண்ணிய (சில)

ஜங்கமர் வசனம்.

அப்பா சிறுத்தொண்ட தியாகி, எங்களுக்கிஷ்டமானவை யெவையென்றால், ஒரு குடிக்கொன்றாகவும்,ஐந்துவயதுள்ளதாகவும், அவயவங்கள் பழுதில்லாமலெல்லா இலக்ஷணங்களும்நிறைந்ததாகவுமுள்ள ஆண்பிள்ளையைப்பெற்ற தாய் கால்களைச்சேர்த்துப் பிடிக்கவும், தகப்பனார் சந்தோஷத்துடன் கழுத்தைஅறுக்கவும், உதிரத்தையோர்பாண்டத்திற் பிடித்துப்பொரித்து,மற்றத் தசைகளையும் நாலுவித பாகம்செய்து அளித்தால் சாப்பிடுவோம், இதிலுன் னபிப்பிராயம் தெரிவிப்பாய் சீக்கிரம்.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம்-தோடி-தாளம்-ஆதி.)

பல்லவி.

அளிப்பதற்கோர் அட்டியில்லைகாண்
ஆண்டிமாரே வேண்டியவாறே.

அநுபல்லவி.

குளித்துப்பூஜை முடித்துக்கொண்டு
கோதிலாயென் மடத்திற்பண்டு
களித்துவேணமட்டும் உண்டு
கடையேன்நான் கடைத்தேறக்கண்டு

காரணமிதை விடவேறே
கவனியே னதிபெரியோரே
பூரணத்துற வறத்தோரே
போகலா மெழுந்திருப்பீரே (அளி)

சரணங்கள்

1. அடியார்களைத் தேடித்தேடி
அலைந்தேனிது வரையில்வாடி
முடிவிலுங்களைக் கண்டேன்கூடி
முகமலர்ந்தேன் தென்புநீடி
மூழ்கினேனா னந்தவாரியில்
முன்செய்த புண்ணியதாரியில்
தாழ்விலா தருமங்கள் பாரினில்
தருகிறேன்வாருங்கள் நேரினில் (அளி)

2. உங்கள்மனது குளிர்ந்திடவேணும்
உடனேயென்குறை தீருங்காணும்
எங்கணும்புக ழோங்கத்தோணும்
எளியன்மே லன்புப்பூணும்
இக்ஷணம் நரபலியிட்டு
யெடுத்துவெவ்வேறு கூறிட்டு
பக்ஷணங்கொடுக்க வுட்பட்டு
பணிந்தனன் பாதங்கும்பிட்டு (அளி)

3. அதிசயமீ தானதாலே
அரைநிமிஷம் பொறுப்பீரென்மேலே
ததிபில்முடித்துங்க ளிஷ்டத்தைபோலே
தடை யுண்பீரன்பாலே
தருவீரெனக்கு வுத்தாரம்
தனயன்மேல்தயை செய்திந்நேரம்
திருச்செங்காட்டினில்தீரம்
திகழருணேசரின்பாரம் (அளி)

வசனம்.

உமதிஷ்டப்படி யளிக்கிறேன், அடியேனிட மடத்துக்கெழுந்தருளுங்கள் ஸ்வாமிகளே.

ஜங்கமர் விருத்தம்.

நிமிஷத்தில் முடிக்கவேண்டும் நேரங்காத் திருக்கமாட்டோம்
தமதுளத் தெண்ணமென்ன தாட்டியா யுரைப்பீரானுல்
உமக்காக பசிபொறுத்து உயிருக்கோ ரமுதமான
நமசிவா யனைபூசித்து நாங்களிங்கிருக்கின்றோமே,

வசனம்.

இனி பசிதாளமுடியாது, சீக்கிரத்தில் முடித்துத்தர சக்தி யுண்டா? இல்லையா? உண்டானுலும் அதுவரை அங்கேன் விருதாவாய் வந்திருக்கவேண்டும் சிவத்தியானம் செய்துக்கொண்டு இங்ஙனே வீற்றிருக்கின்றோம் அப்பா.

சிறுத்தொண்டர் வசனம்.

அப்படியே சீக்கிரத்தில் முடித்துவந்து அழைத்துப்போகிறேன் ஸ்வாமிகளே.

ஜங்கமர் வசனம்.

சென்று சீக்கிரமே வருவாயப்பா.

பொது வசனம்.

இவ்விதமாக சிறுத்தொண்டர் மடத்துக்குத் திரும்பிப்போகும்போது, சேய்க்கறிதரும் விஷயம் நிறைவேறக் கடவுளைத் துதிக்கிற தறிவீர்கள்.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம்-சாமா-தாளம்-ஆதி.)

பல்லவி.

இதற்கெப்படி யோசிப்பேன்
யார்பிள்ளையைபோய் யாசிப்பேன்

அநுபல்லவி.

பதர்போல்பிதற்றினேனே பழிகாரனுனேனே
பார்வதி பார்வதி பார்வதி பாகாநீகதி (இத)

சரணங்கள்.

1. கோடி கோடி யாய் நிதி
கொடுத்தாலும் கிட்டாதித் ததி

நாடிடா ரெவரு மதி
நண்பர்க்கென் மைந்தன் தான்விதி
நண்ணினர் நண்ணினர் நண்ணியோ சனைபண்ணினர் (இ)

2. நங்கை சம்மதங் கொண்டு
நடத்தினல் பலனுண்டு
சங்கை கொள்வளோ கண்டு
சம்மதமென்னமோ தொண்டு
சங்கரா சங்கரா சங்கரா கெங்காதரா (இத)

3. விரிசடை நீள் பிரகாசா
வேடிக்கையிது வோநேசா
புரிச்செங்காட்டினி லீசா
புனிதனே யருணேசா
போற்றினேன் போற்றினேன் போற்றிப்பணிந்தேற்றினேன்.

வசனம்.

ஓம் அரகரா காலகண்ட திரிநேத்திரா இன்றையதினம் ஜங்கமர்கள் கேட்ட லக்ஷணம்பொருந்திய சிறுவன் மாமிசத்துக்கு வேறே யோசிப்பதிற் பயனில்லை, என்குமாரன் சீராளன்தான் யோக்கியம் எனத் தோற்றுகிறது ஆயினும் அவனை அருமையாய்ச் சுமந்துபெற்ற எனது மனைவிசம்மதிப்பாளோ, சம்மதியாளோ என்னசெய்வேன் என்மனம்போல் என்மனைவி மனமுமொன்றுயிருக்கக் கடைக்கண் நோக்குவாய் சிவமே.

பொது வசனம்.

இவ்விதமாக கடவுளைத் துதித்துக்கொண்டு சிறுத்தொண்டர் மடத்துக்கு வருங்காலையில் மனைவிவெண்காட்டுநங்கைதான் தன்தாதியுடன் சம்பாஷிப்பதறிவீர்கள் கணவான்களே.

வெண்காட்டு நங்கை வசனம்.

சகி, சந்தணநங்காய், ஜங்கமரை யழைக்கப்போன என் பிராணநாதன் இன்னும் வரக்காணேமே,யாதுசங்கதியோ ஒன்றுந் தெரியவில்லையே.

சந்தணநங்கை வசனம்.

இதோ வந்துகொண்டிருக்கிறுர் பார் தாயே.

வெண்காட்டு நங்கை வசனம்.

சகி, ஏன்னடி முகவாட்டத்துடன் தனியாக வருகின்றாரே விசாரிப்போம்.

வெண்காட்டு நங்கைக்கும் சிறுத்தொண்டர்க்கும் சம்வாதம்.

கண்ணிகள்.

(இ-ம்-முகாரி-தாளம்-ஆதி.)

வெண்காட்டு நங்கை.

1. என்னகுறை தங்கள் மன மேங்கி வரு கின்றீர்
இங்குவந்த ஜங்கமர்கள் எங்கேதனி நின்றீர்.

சிறுத்தொண்டர்.

ஜங்கமரைச் சிங்காரமாய்ச் சங்கையறக் கண்டு
மங்களமாய் நானழைக்க மறுத்தார் மர்மங்கொண்டு

வெண்காட்டு நங்கை.

2. மறுத்தமர்மம் பிரித்துரைப்பீர் மணவாளரேயென்ஸ்வாமி
குறித்தென் றன்மேல்குற்றஞ்சொல்லிகோபித்தாரோநேமி

சிறுத்தொண்டர்.

குற்றம் நமதுமடத்தில் கூறினார்கள்பெண்ணே
உற்றுப்பார்த்து உண்மையென்று ஒப்புக்கொண்டேன்கண்
[ணே.

வெண்காட்டு நங்கை.

3. கண்ணாற்பார்த்து மனதறியக் களங்கமொன்றுமில்லை
பெண்ணாய்ப்பிறந்திதுவரைக்கும் பிரியேன் தங்கள்சொல்லை

சிறுத்தொண்டர்.

சொல்லக்கேளாய் நாம்சமைத்த தூயகாய்கறியை
நல்லதல்லவென்றுரைத்து நவின்றார் வேறேநெறியை

வெண்காட்டு நங்கை.

4. வேறேயிந்த வுலகிலில்லா விதமானபதார்த்தம்
நேரேதாங்க ளறிந்திருப்பீர் நேர்த்தியாய் யதார்த்தம்

சிறுத்தொண்டர்.

நேர்த்திதிருச் செங்காடருணேசதாசர்சங்கை
சாத்தியப் படுமோயென்று சந்தேகிக்கின்றேன் நங்கை

சிறுத்தொண்டர் வசனம்.

இந்த உலகின்கண் ஒருவரும் புசிக்கத் தகாததாகவும் நம் மால்செய்ய சாத்தியமில்லாததாகவும் இருக்கும் ஓர்விதத்தைக் கேட்டார்கள் உன்னிடத்தில் சொல்லவும் சந்தேகிக்கின்றேன் பெண்ணே.

வெண்காட்டு நங்கை விருத்தம்.

சந்தேகமானதென்ன சாண்கும்பிக் காகவேதான்
இந்தமா னிலத்திலில்லா ததுவதை விரும்பினர்கள்
எந்தமாதிரி கேட்டாலும் இல்லையென் றுரைக்கலாமோ
சுந்தரமுகம் சோராமல் சொல்லுவீர் பிராணநாதா.

வசனம்.

சந்தேகமாக நீர் சொல்லவேணடியதென்ன, அப்படி அருமையான வஸ்துவானாலும் அதை சேகரித்துத்தான் கொடுக்க வேண்டும் இன்னதென் றுரைப்பீர் நாதா.

சிறுத்தொண்டர் அகவல்.

நங்கையே கேளாய் நான்போ னசேதி
திங்கள்போலவீசுந் திருவாத்தியின்கீழ்
ஜங்கம ரிருவர் தரிசனங் கண்டேன்
அங்கவர் பாத மன்புடன் றுழ்ந்து
போஜனத் திற்குப் போற்றியே யழைத்தேன்
நேசமாய்ச் சமைத்த நெறியதைக் கேட்டார்
வாசமா யிருக்கும் வகையெலாம் புகன்றேன்
தோஷமென் றுன்னி தூஷித் திகழ்ந்து
வொருகுடி தனக்கு வொன்றுள தாயும்
பெருமையாங் கல்விப் பேரோங்கி வளரும்
அருமையாம் வயது வைந்துள தாயும்
திருவளர் செல்வம் திரண்டுள தாயும்
அதிகுண மழகு மமைந்திடு பிள்ளையை
சதிரொடு தந்தைதாய் சரசமாய் பிடித்து

மதிமிகத் துணிந்து மாய்த்ததி னிறைச்சியை
கதிக்கவே சமைத்த கறிதனைக் கேட்டார்
அப்படி தானே யளிக்கிறே னென்று
ஒப்புக்கொண் டிங்கே வோடியே வந்தேன்
எப்படி யிதற்குநா னீடொன்றுங் காணேன்
செப்படி யெனதுசெந் தேனே மானே.

வெண்காட்டு நங்கை தரு

(ஐயையோ தெய்வமே யெனும் வர்னமெட்டு.)

பல்லவி.

நாதாயெனது துரையே-யினி
நடக்கும்விதத்தை யுரையே

அநுபல்லவி.

சாதாரணமாயின்று ஜங்கமர்கேட்டபடி
ஆதாரமெங்கேதேடுவீர் அலைந்துவாடுவீர் (நாதா)

சரணங்கள்

1, தங்கள்கருத்தைவிட்டு தளராமற்சொல்முன்னிட்டு
மங்களமாகச்செய்குவோம் மகிழ்ந்துய்குவோம் (நாதா)

2. ஜாலம்செய்வதாகாது சற்குணரேயிப்போது
பாலனையார் தந்திடுவார் பகர்ந்திடுவீர். (நாதா)

3. திருச்செங்காட்டினில்வாசன் தேவனுமருணேசன்
பரிசைஷநாமறியோமே பகர்வீர்தாமே (நாதா)

வசனம்.

துரையே, தாங்கள் எவ்விதம்யோசித்து அளிக்கிறேன்என்றுரைத்தீர் அவ்விதம்செய்ய அடியாள்சித்தம் வெளியிடுவீர்.

சிறுத்தொண்டர் விருத்தம்.

நீடியவுலகு தன்னில் நெறியொடு சென்றுணர்ந்து
தேடியே பார்த்துவேண திரவியங் கொடுத்துவாங்கி
நாடியே யழைத்துக்கொண்டு நானரை க்ஷணத்தில்தானே
ஓடியே வருவேன்பெண்ணே யுன்மன மகிழுவாயே.

வசனம்.

இந்தவுலகில் எங்கேயாவது தேடி எவ்வளவு திரவியங்கேட்டாலும் கொடுத்து வாங்கிக்கொண்டு வருகிறேன், சீக்கிரம்விடை தருவாயடி பெண்ணே.

வெண்காட்டு நங்கை விருத்தம்.

ரொக்கத்துக் காசைப்பட்டு நொய்யாமல் கொடுத்திட்டாலும்
மிக்கவே தந்தைதாயார் மீண்டுமக் குழவிதன்னைத்
துக்கப் படாமற்கொல்லத் துணிவரோ யாரானாலும்
அக்கரை நமக்கிருக்க அயலார்கள் செய்தல்நன்றோ.

வசனம்.

இவ்வுலகின் கண்ணுள்ள சகலபாக்கியங்களிலும், புத்திர பாக்கியம்தான் சிறந்தது, அதிலுங் காக்கைக்குஞ்சானாலுந் தன் குஞ்சு பொன்குஞ்சு என்ற பழமொழி தாங்கள் அறிந்ததில்லையா, பணத்துக் காசைப்பட்டு பெற்ற பிள்ளையைக் கொடுப்பார்களா? கொடுத்தாலும் அதை தாய், தந்தையர்கள் கொலைசெய்ய ஒப்புவார்களா, ஒப்பமாட்டார்கள். மேலும் செய்யவேண்டிய அக்கரை நமக்கிருக்க, பிறர்செய்தல் உசிதமல்லவோநாதா.

சிறுத்தொண்டர்க்கும் வெண்காட்டு நங்கைக்கும் சம்வாதம்.

(சின்னகாஞ்சி வரதன்ஜோதி எனும் வர்ணமெட்டு.)

சிறுத்தொண்டர்.

1. பெண்ணேவேறேகதியேது-சிவ
பெருமானருளிருக்கும்போது
கண்ணேபொய்வாழ்விந்தப்பார்மீது-நன்றாய்
கவனித்தாலக்யானங்களேது (பெண்)

வெண்காட்டுநங்கை.

அக்யானமென்பதை நாம்நீக்கி-அந்த
அடியாரமுதுண்ண சீர்தூக்கி
சுக்யானஞானநெறிநோக்கி-நீர்
சொல்வீருமது திருவாக்கில் (அங்)

சிறுத்தொண்டர்.

2. சொல்லுவேன்கேளினிமீது-நமது
சுதனை துணிந்தறுப்போம்மாது
அல்லல்படவேதகாது-அந்த
ஆண்டிமார்கள்வருவாரிப்போது (சொல்)

வெண்காட்டுநங்கை.

இப்போதேயுமதெண்ணம்போலே-நான்
இருப்பேனெப்போதுமாகையாலே
ஒப்பிலாகல்விச்சாலையிலே-சுதனை
ஓடியழைப்பீரினிமேலே (இப்)

சிறுத்தொண்டர்.

3. இனிமேலொருவர்தாக்ஷண்யம்-நான்
எண்ணேன்நமக்கிதுவேகண்யம்
புனிதர்கள்புசித்திட்டால்புண்யம்-நமது
புத்ரஜென்மமேலாருண்யம் (இனி)

வெண்காட்டு நங்கை.

ஜென்மங் கடைத்தேறுமாற்கம்-நாம்
செய்வதுவே நல்லதீர்க்கம்
இன்பமாய்தந்தாலவர்க்கேற்கும்-ஸ்வாமி
எப்போதும் தர்மந்தலைகாக்கும் (ஜென்)

சிறுத்தொண்டர்.

4. தர்மமேஜெயம்பெறுமென்று- இந்த
தரணிபெரியோர்மொழிநன்று
கிரமத்தை தவறுமலின்று-ஒன்றும்
கெடுதியில்லை யுன்மணமொன்று (தா)

வெண்காட்டுநங்கை

கெடுதியொருநாளும் வாராது-இந்த
கண்ணியசெங்காட்டங்குடிமீது
கொடைதவறுதுதரும்போது-அருணேசக்
குருவருள்புரியதப்பாது (கெடு)

பொது வசனம்.

இங்கு மடத்தில் சிறுத்தொண்டரும் மனைவியும் இவ்விதம் யோசனை செய்துகொண்டிருக்கையில், திருக்கணபதீச்சுரத் திருவாத்தியின் கீழ்வீற்றிருக்கும் ஜங்கமர்கள் பேசிக்கொள்வ தறிவீர்கள் பெரியோர்களே.

வயிரவர் தரு.

(இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.)

பல்லவி.

எந்நேரம்காத்துக்கொண்டிருப்போம்- இங்கே
இனிமேல்பசிபொறுக்கவெந்தனால்முடியாது

அநுபல்லவி.

அந்நீதமாகத்திரு வாத்திமூலதன்மேல்
தன்னந்தனியேஇஞ்சி தின்றகுரங்கதுபோல் (என்)

சரணங்கள்.

1. சிறுத்தொண்டன் சொன்னகாலம்போச்சு-அவன்
சேதியொன்றுந் தெரியாமல் விழிக்கலாச்சு
திருத்தமுடனேநீபோய் தெரிந்துவாராய்மாயாண்டி
திரமதாயுண்டிலை யென்றவனைநீவேண்டி (என்)

2. பெருத்தயிடமென்றெண்ணி வந்தோம்-நல்ல
ப்புவென்றபேரின்று புரண்டுபோச்சுதுநன்று
வருத்தப்படநமது வயற்றைப்பட்டினிபோட்டான்[ட்டான்
வழங்கும்வள்ளலென்றால் வாபால்ஜம்பஞ் சொல்லமா

3. கெஞ்சாக்குடித்து யிளைப்பாறி-யப்பால்
கிளம்புவோம்வேறேயிடம் செட்டியாயினிதூறிக்
கஞ்சமலர்த்தடஞ்சூழ் கனகமாந்திருச்செங்காடு
கர்த்தனருணேசனார் கழலதைநிதந்தேடு. (என்)

வயிரவர் விருத்தம்.

மாயாண்டி பசிக்குதப்பா மாலையாங் காலமாச்சு
ஓயாம லன்னதானம் உதவுநற் றியாகியென்று
வாயார ஜம்பஞ்சொன்ன வள்ளல்சிறுத்தொண்டனென்ன
ஞாயாதி பதியாமன்னேன் நடத்தையை யறிந்துவாராய்.

வசனம்.

அப்பா மாயாண்டி, அந்த சிறுத்தொண்டன் சொன்ன தவணை கடந்துவிட்டது, நாம்கேட்ட நரமாம்ஸ பக்ஷணத்துடன் அன்னம் அளிக்கின்றானா? இல்லையா? சீக்கிரம் தெரிந்துவருவாய்.

மாயாண்டி தரு.

(இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.)

பல்லவி.

ஆச்சாங்காணும்-கறிசமைத்து
ஆச்சாங்காணும்.

அநுபல்லவி.

ஓச்சலில்லாமல்தினம் ஊண் தந்தவன்நீதானே
வாச்சாகைங்கர்யம் வலதா, நலதா, யிலதா, சொல்வீர் (ஆ)

சரணங்கள்.

1. அந்திப்பொழுதாச்சு
ஐயோயெங்கட்கிளைப்பாச்சு
முந்தியிந்த மோசம்தெரிந்தால்
மொழியோம் விழியோம் வழியேன் வருவோம் (ஆச்)

2. திருவோட்டைத் தட்டிக்கொண்டு
தெருத்தெருவாய்ச்சுற்றினால்
இருவரும் உண்டுமிகுதி
யிருக்கும் வெறுக்கும் குறுக்கேன் மறுத்தாய் (ஆச்)

3. சக்தியில்லாதபோது
ஜம்பமேன்பேசவேண்டும்
யுக்திபண்ணுகின்றீரோ
ஓகோ ஆகா தியாசி நீயா (ஆச்)

4. அழகாம்திருச்செங்காடு
அருளோசனாறிய
வழங்குகிறேனென்ற
வார்த்தை நேர்த்தி கீர்த்தி பூர்த்தி (ஆச்)

வசனம்.

என்னகாணும் ஒய், ஒய் சிறுத்தொண்டபக்தரே, சொன்ன படி சிறுவன்கறி தயாராச்சுதா? எங்கள் குருநாதராகிய வயிரவ நாதர் பசி பொறுக்கமாட்டே னென்கிறார், என்னசொல்கிறாய் அப்பா.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ட்-கமாஸ்-தாளம்-ஆதி.)

கண்ணிகள்.

1. பொறுங்கள் பொறுங்கள் என்சொல்
பொய்யாது மெய்யாக எண்ணி
புண்ணியரே கண்ணியரே உண்மையாகச் செய்வேனே (பொ)

2. பெருமையாய் அன்னக்கொடி
பெருகிவளரும்படி
பேருலகில் சீருடனே கோரும்படியே செய்வேன். (பொ)

3. காக்கவைத்தேனென்றன்மேலே
கடுஞ்சினம்கொள்ளாமலே
காதலொடு நீதமுடன் கோதறவே செய்வேனே (பொ)

4. அறம்வளரும் செங்காட்டில்
அருணேசனாரறிய
அன்னதானம் உன்னதமாய் சொன்னபடியேசெய்வேன் (பொ)

வசனம்.

அடியேன் உங்கட்குரைத்தமொழியைத் தவறேன், கொஞ்சநேரம் பொறுப்பீர் ஜங்கமஸ்வாமிகளே.

சிறுத்தொண்டர் விருத்தம்.

அடிமட மயிலேயிப்போ தாலஸ்யஞ் செய்யொணாது
அடியவர் பசிக்குதென்று அவசரப் படுத்துகின்றார்
துடிதுடித் தேகுவார்போல் தோன்றுகின் றதனாலேயே
நொடியினிற் செய்யவேண்டும்நோன்பினைத்தவறொணாதே

வசனம்.

இனிமேல் ஆலஸ்யம் செய்தல் கூடாது. ஜங்கமப் பெரியோர்கள் பசியால் மெலிந்து வாடுகின்றார்கள். கோபித்தேகு

வார்கள்போலிருக்கின்றது, நடக்கும் காரியத்தைச் சீக்கிரமாய்ப்பார்க்கவேண்டும் பெண்ணே.

வெண்காட்டு நங்கை விருத்தம்.

பலகலையோதுகின்ற பள்ளிக்கூடத்திற் சென்று
நலம்பெறப் படித்திருக்கும் நாட்டில்வாழ் சிறுவர்தம்மில்
குலமது விளங்கவந்த குமாரன்சீராளன்றன்னை
இலகவே யழைத்துக்கொண்டு இக்ஷணம் வருகுவீரே

வசனம்.

கல்விச்சாலையில் சென்று பலநூல்களும் படித்துக்கொண்டிருக்கும் நமது குலக்கொழுந்தாகிய செல்வச் சீராளன்றன்னை அழைத்து வருவீர் பிராணநாதா.

பொது வசனம்.

இப்படியாக சிறுத்தொண்டரும் அவர்மனைவியும் யோசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் சீராளனுக்கும் உபாத்தியாயருக்கும் பள்ளிக்கூடத்தில் நடக்கும் சம்பாஷணை யறிவீர்கள் சபையோர்களே.

சீராளன்வருகிற பொது விருத்தம்.

நிரஞ்சன மாகவிந்த நீதிசே ருலகுதன்னில்
திரஞ்செறி யன்னதானஞ் செய்திடுந் தியாகியான
பரஞ்சோதி சிறுத்தொண்டேயர் பாலகனாய் விளங்குஞ்
சிரஞ்சீவி யதிகசுந்த்ரசீராளன் வருகின்றானே.

சீராளன் வருகிற தரு.

(இ-ம்-சஹானா-தாளம் ஆதி.)

பல்லவி.

சீர்பெருகுஞ்சீராள சுந்தரனிதோவந்தான்—சுப
ஜெயஜெயவெனத்திருச் செந்தமிழ்ச்சாலையுகந்தான்

அநுபல்லவி.

பேர்பெருஞ்சிறுத் தொண்டநாயனார்பாலன்—நல்ல
பெருமையாகப்புக ழருமைக்கலையுணர்ந்தசீலன்

சரணங்கள்.

1. அங்கஜனு மறுமுகவனுங் கண்டு கண்கூச—வெகு
அற்புதமிது வெனபற்பலரும் புகழ்ந்துபேச
பங்கஜமலர்முகமின்ன நல்ல பணிமணிபளபளவென்ன
பத்தினிவெண்காட்டுநங்கைபுத்ரனுய்விளங்கியசொர்ன

2. தண்டைசதங்கை கலீரென வொலிமிக கொஞ்ச—நல்ல
தளதளவெனபொற்சரிகை பட்டாடைகள்மிஞ்ச
உண்டைவில்கையினிலிங்கவோ துமுலகநீதிபுராணந்துலங்க
உத்தமனுஞ்சிறுத்தொண்டர் மனக்குறைவிலங்க (சீர்)

உபாத்தியாயர் வருகிற விருத்தம்.

கீறுசந் தணமேயிட்டு கெண்யவெண் ணீறுபூசி
வீறுடன் பட்டுசால்வை விகசிதமா யணிந்து
ஆறுசாஸ் திரநால்வேத மாராய்ந்து கற்றுணர்ந்த
பேறுறு முபாத்தியாயர் பெருமையாய் வருகின்றுரே.

உபாத்தியாயர் வருகிற தரு.

(இ-ம்-மோஹனம்-தாளம்-ஆதி.)

பல்லவி.

வாத்தியார்வந்தனர்—வண்மையாகவே
வாத்தியார்வந்தனர்

அநுபல்லவி.

நேர்த்தியாங்கலை பூர்த்தியாயுணர் (வாத்)

சரணங்கள்.

நெற்றியிற்பூதி வைத்தப்ரைக்யாதி
நீதி யோதி
நிகரிலாகுருவாய் திகழொளியுருவாய் (வாத்)

சீராளன் ஜாவளி.

இந்துஸ்தான் கோட்.

1. குருவேவந்தனம் தருவேவந்தனம்
கோதிலாப்புண்ய தீதிலாக்கண்ய (குரு)

2. சிறுவன்மேலன்பு செய்குவீர்தென்பு
சிந்தைமகிழ்ந்து ன்மைந்தன்புகழ்ந்து (குரு)

3. ஓதியபாடம் ஒளிர்பள்ளிக்கூடம்
ஒப்பித்துக்கொள்வீர் தப்பினுல்தள்வீர் (குரு)

4. செங்காட்டில்வாசன் ஜெயவருணேசன்
பங்கஜபதம் பணிந்தேன்நிதம் (குரு)

உபாத்தியாயர் விருத்தம்.

பார்தனில் சிலாக்கியமான பாலசுந் தரனேவாழி
சோர்விலா தழகுவாய்ந்த தூயநவ மணியேவாழி
நீர்புனே சிவன்வரத்தால் நீடூழியாக நாளும்
சீர்பெறுஞ் சீராளாநீ சிரஞ்சீவி வாழி வாழி.

வசனம்.

வாழிவாழி ஆசீர்வாதமப்பா சீராளா, என்னடா முகம் சோர்ந்து ஒரு விதமாய் இருக்கின்ருய், உன்பாடங்களை வாசியா மலிருக்கின்ற காரணம் விவரமாய்ச் சொல்வாய்.

சீராளன் தரு.

(இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயோயென்றன் ஆசாரியரே
அடியேனுெருவிண்ணப்பம்

அநுபல்லவி.

மெய்யுஞ்சோர்ந்து மயக்கமாகி
மெலியுதென்செய்வேன் (ஐயோ)

சரணங்கள்.

1. மூதேவியென்முகத்தில்வந்துமூடுதையாவிழிகள்ரெண்டும்
வேதையிதுயென்னமோதான் விதமறியேனே (ஐயோ)

2. சற்றுநேரம்நித்திரைசெய்ய சற்குருவேவிடைதாரும்
பற்றுடனேயுமதுபாதம் பணிந்தேன்கண்பாரும் (ஐயோ)

3. அகமகிழ்வாயென்னைத்தந்த அன்னைதந்தையாவுமந்த
புகழுஞ்செங்காடுறையுமீசாபுனிதனருணேசன்தாச(ஐயோ)

வசனம்.

ஐயா குருவே, இன்றையதினம் என்னமோ எனக்கு மயக்கமாய் இருக்கின்றது. கண்ணிமை துடிக்கின்றது, என்னவிபரீதமோ தெரியவில்லை, சற்றுநேரம் நித்திரைசெய்தால் மயக்கந்தீரும் உத்தரவளிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

உபாத்தியாயர் விருத்தம்.

பள்ளிக்கூடத்தில்வந்து படிக்கின்ற சிறுவரெல்லாம்
நள்ளிருள் தனில்மினுக்கும் நக்ஷத்ர கூட்டமாகும்
தெள்ளிய திங்கள்போலத் திகழ்நவ மணிசீராளா
சள்ளையா மயக்கந்தீர சயனித்துக் கொள்வாயப்பா

வசனம்.

அடா அப்பா சீராளா, நீ சோர்ந்திருப்பது யெனக்கும்பரிதாபமாகத்தான் இருக்கின்றது ஆகையால் என்துடையின்பேரில் சயனித்துக்கொள்ளும் பிள்ளாய்.

உபாத்தியாயர் தரு.

(இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.)

பல்லவி.

பாலாயேண்டா யின்னம்நித்ரை
பலிதமாகுதே பகலேகுதே

அநுபல்லவி.

காலங்காலையில் கல்விச்சாலையில்
கண்ணுறங்கும்வழக்கம் கருதாதேதுர்ப்பழக்கம் (பாலா)

சரணங்கள்.

1. அறியாச்சிறிய பாலனென்று
அஞ்சிநித்ரைசெய்ய வறைந்தேனின்று
பிரியமாய்ப்பாடம் பிடிக்கப்படிக்க
பிள்ளையெழுந்திரு பேர்செழுந்திரு (பாலா)

2. ஒருநாளுமிந்த வுறக்கமில்லை
உன்முகம்சோர்ந்த தென்னதொல்லை
பெருஞ்சோகம் நேர்ந்துபெருகியுருகி
பின்னுந்தூங்குகிறாய் பிணிதாங்குகிறாய் (பாலா)

3. அஷ்டலக்ஷ்மி அகலாதிருக்கும்
ஆல்போல்திருச் செங்காட்டிற்சிறக்கும்
இஷ்டமாயருணேசனை யெண்ணுவாய்
இடருகள்நீங்கிடும் எழிலோங்கிடும் (பாலா)

வசனம்.

அடா அப்பா, சீராளா தேவசிகாமணி, என்னடா திடுக்குத் திடுக்கென் றலருகின்றாய், தேகத்தில்வேர்வை பொங்குகின்றதே பசியால் களைத்தனையோ எழுந்தருளுவாய் கண்மணி.

சீராளனுக்கும் உபாத்தியாயருக்கும் சம்வாதம்.

(பாலா பென்ன காலம் வந்ததடா யெனும் வர்னமெட்டு)

சீராளன்.

1. ஐயோவொரு அதிசயகினவு கண்டேன் உண்மைவிண்டேன்
ஆருக்குநேருமோ பாருக்குள்புதுமை
தாருமாறாகவே சோருதேயென்னுவி (ஐயா)

உபாத்தியாயர்.

ஐயப்படவேண்டமதை சொல்வாய்பாலா குண சீலா
அஞ்சாதே உன்மனம் துஞ்சாதேயேங்கிநீ
கெஞ்சாதேசோகம்மேல் மிஞ்சாதே மிஞ்சாதே

சீராளன்.

2. என்னைப்பெற்றதாய் தந்தைமனந்தேறிஎன்னுசையைமாறி
இறுக்கிக்கைசாலை முறுக்கியென்தாயார்
மெரிக்கயென்தந்தை யறுக்கவுங்கண்டேன் (என்)

உபாத்தியாயர்.

கினவுகண்டபணம்சிலவுக்குக்கிடைக்காததுபோல்நடக்கா
சுண்யசிறுத்தொண்டர் புண்யவனுச்சுதே
மண்ணில்கோடிதவம் பண்ணியுனைப்பெற்றோர் (கின)

சீராளன்.

8. அவையவம்வெவ்வேருய்சமைத்திடக் கண்டேன்சொல்லிக்கொண்டே
ஆதிசிவன்செய லேதாய்முடியுமோ [ன்
நீதியையெனக்கு வோதியகுருவே (அவ)

உபாத்தியாயர்.

நீதிசேர்திருச்செங்காடருணேச னவர்க்குநீ தாசன்
நேராதொழிகுறை வாராதொருநாளும்
தோராதழகுள சீராளப்பாலகா (நீதி)

வசனம்.

அருமைக் கண்மணியாகிய சீராளா, எவ்வுயிரையும் பாது காக்கும் கடவுள் ஒருவரிருக்கின்ருர். அவரன்றி ஓரணுவும் அசையாது, அருமையாக தவம்செய்து பெற்றுவளத்தோர்களே, கொலை செய்யத் துணிவார்களா, கினவிற்கண்ட பணம்சிலவுக்குதவாததுபோல, நீகொண்ட சொப்பனம் பித்தமாயிருக்கும் அஞ்சாதே பாலா.

பொது வசனம்.

இவ்விதமாக பள்ளிக்கூடத்தில் சீராளனுக்கும், வாத்தியாருக்கும் சம்பாஷணைநடந்துகொண்டிருக்க, முன் திருக்கணபதீச்சுர திருவாத்தியின்கீழ் தங்கியிருக்கும் ஜங்கமர் சங்கதி அறிவீர்கள் சபையோர்களே.

வயிரவர் தரு.

(இ-ம்- கமாஸ்- தாளம்- ஆதி.)

பல்லவி.

இப்படிக்காத்திருக்கவும் எழுத்தா-அவன்
என்னதானுன்னதமானபொன்னுனகறிபோட்டாலும்

அநுபல்லவி.

தப்புமொட்டும்வேலையற்ற தாசரியென்றெண்ணினுனே
துப்புகெட்டதூங்குமூஞ்சியா யோசனைபண்ணினுனே (இப்)

சரணங்கள்

1. கொள்ளுக்கொடிபந்தலேறி
தள்ளுமோகுலைபடர்ந்து
வள்ளல்சிறுத்தொண்டன்சொன்ன
பிள்ளைகறிக்குத்துடர்ந்து (இப்)

2. புலியைப்பார்த்துபூனைசூடு
போட்டுக்கொள்ளும்பாவனைபோல்
வலியநமக்கமுதிட
வந்தழைத்துமோசஞ்செய்தான் (இப்)

3. தாமரைத்தடாகம்நிறை
க்ஷேமமாதிருச்செங்காடு
நேமமாமருணேசனூர்
நாமத்தைப்புகன்றான்நீடு (இப்)

வயிரவர் விருத்தம்.

பெரும்புளுகானடம்பம் பேசியே நம்மையிங்கு
விருதாவாய் காக்கவைத்து வீண்காலம் போக்குகின்றான்
மருமங்களென்னமோதான் மாயாண்டி நீயோயந்த
அருஞ்சிறுத்தொண்டன்சேதி அறிந்துநீ வருவாயப்பா.

வசனம்.

அப்பா மாயாண்டி, சிறுத்தொண்டன் பேச்சு பெரும் புளுகாயிருக்கும்போல தோன்றுகிறது, இன்னமொருதரம் நீபோய் உண்டில்லையென்று அறிந்துவருவாய் சீக்கிரம்.

மாயாண்டி சொல் தரு.

(இ-ம். அடாணா. தாளம்-ஆதி.)

பல்லவி.

நல்லஞாயமிதுகாண்—சிறுத்தொண்டரே
நல்லஞாயமிதுகாண்.

அநுபல்லவி.

நல்லஞாயமிது நாங்கள் பசித்திருப்பது
நம்பியிருங்களென்று நடந்தாய்மனைக்குள்சென்று
நாணயம்போச்சு
நாழிகையாச்சு
வீணையும்பேச்சு
வெளிச்சமேயாச்சு (நல்ல)

சரணங்கள்.

1. வயிரவநாதன் மனம்வாடி
வழிபார்த்திருக்கின்றாரே நாடி

உயிர்போச்சோ களையால் காதைமூடி
உண்டியிலே என்றால் போமோ மோடி
பகிரங்கமாகவிட்டு
பகர்வாயுனைப்போலெட்டு
தைரிய ரீதற்குட் பட்டு
தருவார்நாங்கள் சாப்பிட்டு
கதி பசியாறி மதிமிகதேறி
எதிரிலாபாரில் பதிரெயடுகோரி (நல்ல)

2. தியாகியென்று கொடிகட்டி
தாரத்தைரிய மில்லாதமட்டி
ஆகிலுன்றன் மடத்தைக்கிட்டி
ஆரும்பார்க்க வில்லையெட்டி
யோகியென்று வந்து
உளரிளுப்சந்தில்சிந்து
த்ரோகியெங்களை வந்து
துன்பத்துக்கிடம் வந்து
தூயனைப்பேசி தூளிதம்பூசி
பேயனேசீச்சி பெருமையைபேசி (நல்ல)

3. எங்கள்விரத நெறியைக்கெடுக்க
எத்தனைநாள் காத்திருந்தாய்நெடுக்க
ஜங்கமர்கள் நாங்கள் சாபம் கொடுக்க
சாத்தியமோ வுன்னால்தடுக்க
மங்களமாகத்திரு
மருவுந்திருச்செங்காடு
தங்கவருணேசர்க்கு
தொண்டனென்றுயேஒரு
சொல்நிலையில்லை துடிக்கிறேன்தொல்லை
கல்மனச்சொல்லை காட்டினைப்பல்லை (நல்ல)

மாயாண்டி விருத்தம்.

அம்புவி தனிலேதர்மம் அளித்திடுந் தியாகியென்று
நம்பிக்கை யொடுநாம்மிக்க நாழிகை காத்திருந்தோம்
அம்பிகை பாகனை அரனடியார்கள்வினைப்
வெம்பியிங் கிருக்கமாட்டோம் வேறிடம் செல்கின்றோமே.

வசனம்.

ஒய் ஒய் சிறுத்தொண்ட பத்தரே நல்லஞாயம் நன்றாய் இருக்கின்றது, போங்காணும்போம் உன்பேச்சைநம்பி வெகு நேரமாய்க், காத்திருந்தோம் நீர் அன்னமளிக்கிறதிறமை வெட்டவெளிச்சமாய்த்தெரிந்து போச்சுது நாங்கள் வேறிடம் செல்லுகின்றோமையா.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம். சஹானு. தாளம் ஆதி.)

பல்லவி.

சற்று நேரம் பொறுங்கள்
சகித்திருங்கள்

அநுபல்லவி.

மற்றொருகாரியமில்லை
மறக்கேன் தங்கள்சொல்லை
முற்றிலுமே பாருங்கள்
முடிப்பேன் தேருங்கள் (சற்று)

சரணங்கள்.

2. காய்கிழங்காலிந்நேரம் கணத்தில்முடிப்பேன்நேரம்
ஆயுதத்தாலுயிர்க்கொலை அனுபோகமில்லை (சற்று)

1. சீர்த்திருச்செங்காடுறை செழித்தவருணேசரை
சார்ந்தோர்குறைதீர்ந்திடும் சவுக்யம்நேர்ந்திடும் (சற்று)

சிறுத்தொண்டர் விருத்தம்.

கடலது கொதித்தெழுந்து கனல்மிகவீசுமாகில்
குடத்தினில்சலத்தைக்கொண்டு கொட்டினலாறுமோதான்
அடல்பெறு முங்கள்கோபம் அணைத்திடவென்னலாமோ
மடத்தினிற் சற்றுநேரம் மனம்பொறுத் திருந்திடீரே.

வசனம்.

பெருத்த சமுத்திரமே கொதித்து அனல் வீசினல், குடத்து ஜலத்தினல் ஆற்றிவிட முடியுமோ அதுபோல, பெரியோராகிய நீங்கள் கோபித்தால், அடியேனல் தணிக்க சாத்தியமா, சற்றுநேரம் பொறுங்கள் ஸ்வாமிகளே.

மாயாண்டி வசனம்.

ஓய் என்னகாணும் இதோடு இரண்டுதரம் ஆச்சுது, இனி மேற் பசி பொறுக்கமாட்டோம் சீக்கிரம் முடித்து வாருமையா போய்வருகிறேன்.

சிறுத்தொண்டர் வசனம்.

பெண்ணே, ஜங்கமப் பெரியோர்கள், துரிதப் படுத்துவதால் பள்ளிக்கூடம்சென்று சீராளச்செல்வனை அழைத்துக்கொண்டு வருகிறேன், அதற்குள் சமையலுக்கு வேண்டிய பாத்திரங்களை சுத்திசெய்வாய் பெண்ணே.

வெண்காட்டு நங்கை வசனம்.

சித்தம் நாதா.

பொது வசனம்.

இவ்விதமாக சிறுத்தொண்டர் கல்விச்சாலை சென்று சீராளனை அழைக்கிற தறிவீர்கள் கனவான்களே.

சிறுத்தொண்டர் விருத்தம்.

பெருங்கல்விக் கடலேகீர்த்தி பெற்றிடு முபாத்தியாரே
தருமங்கள் தவறுதோங்கத் தாணுவி னடியார்வந்து
திருவமு துண்ணவேண்டி தியங்கிகாத் திருக்கின்றார்கள்
மருவும்சீ ராளன்றன்னை மனமகிழ்ந் தனுப்புவீரே.

வசனம்.

ஐயா, உபாத்தியாயரே நமஸ்காரம், என் மடத்தில் அமுதுண்ண வந்திருக்கும், ஜங்கமப் பெரியோர்கள் சிறுவனில்லாது அமுதுண்ணமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் என்செல்வக் குமாரனான சீராளனை, உத்தரவுகொடுத்தனுப்புவீரையா.

உபாத்தியாயர் வசனம்.

ஆசீர்வாதம், சுபமஸ்து. தங்களிஷ்டப்படியே சீராளனை அழைத்துக்கொண்டு போமையா.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம். எதுகுலகாம்போதி. தாளம் - ஆதி.)

பல்லவி.

பாலகாயென்றன் பசுங்கிளியே வாடா
பண்பாயோர்முத்தம்தாடா

அநுபல்லவி.

சீலமாகசில சிறுவரோடுகூடி
செந்தமிழ்ச்சாலையில் சிறப்பாய்விளையாடி
காலையமுதுண்ணக் காணேனென்றுதேடி
கண்மணியேவந்தேன் வருவாயடாஓடி (பால)

சரணங்கள்.

1. தயிலம் தலைக்கிடத் தாயார் அழைக்கிருள்
தளிகைசெய்துவைத்து தயங்கிவிழிக்கிருள்
குயில்போல் முறையிட்டுக்கூவிதவிக்கிருள்
குலக்கொழுந்தே யேண்டா பொழுதைக் கழிக்கிருய்

2, திருவே மணமுள்ள மருவே யோங்குந்தேவ
தருவே மதனெனு முருவே தழைத்திடும்
தருமம் பெருகிய தண்செங்காடுறை
சங்கர னருணேசன் தந்ததுரை. (பால)

வசனம்.

அடா சீராளசிகாமணி, என் முகம் சோர்ந்திருக்கிருய் இது வரை அமுதுண்ணுமையாலேயா? என் தோள்மீதில் எறிக்கொள்கமதுகிர்கத்துக்குச் செல்வோம் பாலா

சீராளன் வசனம்.

சித்தம் தந்தையே.

சிறுத்தொண்டர் வசனம்.

பெண்ணே வெண்காட்டு நங்காய், நமது செல்வச்சீராளனை இதோ அழைத்துவந்தேன் பெண்ணே.

வெண்காட்டுநங்கை தரு.

(இ - ம். சுருட்டி. தாளம்:ரூபகம்)

பல்லவி.

கட்டிக்கரும்பே யென்கண்மணியே ஓடிவாடா முத்தம்தாடா

அநுபல்லவி.

அட்டி என்னமோ அமுதுண்ணுமலிந்நேரம் என்விசாரம் (கட்)

சரணங்கள்.

1. புனலாடிநீறுபூசி மகிழ்பேசி (கட்)

2. பஞ்சவர்ணக்கிளிமொழியே நல்வழியே (கட்)

3. திருச்செங்காடருணேச செல்வதாச (கட்)

சிறுத்தொண்டர்க்கும் வெண்காட்டுநங்கைக்கும் சம்வாதம் தரு.

பார்ஸ் வர்னமெட்டு.

சிறுத்தொண்டர்.

1. மைந்தனெனுமாசையை மறந்துகளிப்புடனே
சிந்தைமிகத்துணிந்து செய்வோம்சிறப்புடனே
சீக்கிரம் தீர்க்கமாய் பார்க்கவேணும்இனிமேல் (மை)

வெண்காட்டுநங்கை.

சம்பங்கியெண்ணெயிட்டு சந்தோஷத்துடனன்னம்
சம்ப்ரமதாகவூட்டி சயனிக்கச்செய்வேன்முன்னம்
சஞ்சலம் நெஞ்சினில் கிஞ்சித்து மிலையென்சாமி (சம்)

சிறுத்தொண்டர்.

2. ஆலஸ்யம் செய்தோமானல் ஆண்டிமார்கோபிப்பார் பெண்
பாலனை பக்குவமாய்படுக்கவையடி யென் கண்ணே [ண்ணே
பக்கத்தில் மிக்கவே தக்கதாய் சர்க்கரைவார்த்தைசொல்லடி

வெண்காட்டு நங்கை.

சர்க்கரை தேன்சொரியும் சாலைபொலிச் செங்காடு
முக்கண்ணனருணேசன் முடித்தவிதிக்குயிடு
மூலமார்ஞாலமேல்ஜாலமேன்சிலவென்றன் துரையே

பொது வசனம்.

இவ்விதமாக சிறுத்தொண்டரும் தேவியரும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் முன் திருக்கணபதீச்சுர திருவாத்தியின்கீழ் வீற்றிருந்த ஜங்கமர்கள் சங்கதி அறிவீர்கள் சபையோர்களே.

வயிரவர் தரு.

(இ-ம்-கமாஸ்-தாளம்-ஆதி.)

பல்லவி.

மாயாண்டி சிறுத்தொண்டன் மடம் போய்வருவாய்-அவன்
மனதை நன்றாய் அறிவாய்

அநுபல்லவி.

பேயாண்டிவசித்திடும் பெருத்தஸ்தலத்தில்வெம்பி
ஆயாசப்பட்டுமனம் அஞ்சிதுஞ்சிகெஞ்சிடாமல் (மாயா)

சரணங்கள்.

1. கத்துகடல் சூழுலகில் சத்தியசம் பன்னனென்று
வெத்தியன்னக்கொடிகட்டி விசிபேசிமோசம்செய்தான் ()

2. கற்பகத்தருக்கள்சூழுங் கனத்ததிருச்செங்காடு
நற்புகழருணேசரை நாடித்தேடி பாடியோடி (மாயா)

வயிரவர் வசனம்.

அப்பா மாயாண்டி, இனிமேலிங்கிருக்க சாத்தியப்படாது ஆனாலும் தண்ணீரும் மூன்றுபிழை பொறுக்கும் என்ற உலக மொழிபோல, இன்னும் ஒருதரம் சிறுத்தொண்டன் சேதியை அறிந்துவருவாய் சீக்கிரம்.

மாயாண்டி வசனம்.

அப்படிக்கே யென்றறிந்துவருகிறேன் வயிரவநாதா

மாயாண்டி தரு.

(சுந்தரபால துருவன்வந்தானே எனும் வர்னமெட்டு.)

பல்லவி.

ஹாஹாநீதானு அன்னதானப்ரபு
அந்தமட்டும் போதும்போதும் (ஹா)

அநுபல்லவி.

ஓகோசரியிந்த ஊார்மெச்சம்வேஷம்
உன்னித்தில்கண்டுகொண்டேன் உண்மைவிண்டேன் (ஹா)

சாணங்கள்.

1. குஷ்டரோகிமுடவன் கொம்புதேனில்மேல்
இஷ்டப்பட்டாற்போல்தர்மம்செய்யவெண்ணினையையா

2. பூனைவாங்கிக்கட்டப் பொருளில்லாதவன்
ஆனையதைவாங்கிகட்ட ஆசைநீபட்டாய் (ஹா)

3. அண்டமளவிட அன்னக்கொடிநாட்டி
மண்டலத்திற் சிறப்பாக்கிய மஹாயோக்கிய (ஹா)

4. நரிக்குளிப்பாட்டி நாணயங்கள்நீட்டி
திருச்செங்காடருணேசனைகாட்டி திரிந்தாய்மேட்டி (ஹா)

வசனம்.

ஹா! ஹா! சரி சரி சபாஷ் சபாஷ் ஓய் ஓய் என்னகாணும் பெருத்த கொடுமையாய் இருக்கிறது, இதற்கேன்காணும் பெருத்த வீண் ஜம்பம், எந்நேரம் காத்திருக்கலாம், இனி தவணைசொல்லத்தகாது, தடுக்கவேண்டாம் நாங்கள் போய்வருகின்றோம்.

சிறுத்தொண்டர் சொல் தரு.

(இ-ம்-தன்யாசி-தாளம்-ஆதி.)

பல்லவி.

ஆச்சுது மனம்வைத்து அரைக்ஷணம் பொறுப்பீர்
அடியன் மடத்திலிருப்பீர் ஐயா மெய்யா (ஆச்)

அநுபல்லவி.

பேச்சது புரண்டிடேன் பின்வாங்கிமுரண்டிடேன்
எச்சானபழிப்பெயா எடுக்கேன் தொடுக்கேனிதோ (ஆச்)

சரணங்கள்.

1. எத்திசை புரண்டாலும் எழுகடல்வறண்டாலும்
சத்தியம்தவறிடேன் சகிப்பீர்கள் சுகிப்பீர்கள் (ஆச்)

2. இகத்துக்கும் பரத்துக்கும் எழிலாந் திருச்செங்காடு
மகத்துவ வருணேசன் மகிழுறப்புகழ் பெற (ஆச்)

வசனம்.

தங்கள் காரியத்தில் தான் இருக்கிறேன், சத்தியம்தவறேன் சமைக்கப்பொறுத்தோர் சற்றூற்ப் பொறுப்பதுபோல் சற்று பொறுத்திருக்கப் பிரார்த்திக்கின்றேன் ஸ்வாமிகளே.

மாயாண்டிவிருத்தம்.

தண்ணீரும் மூன்றுபிழை பொறுக்குமென்ற
தன்மைபோ லிதுவரையில் பசியடக்கி
உண்ணீர்நா வறண்டுந்தன் பேச்சைநம்பி
ஒருபலனு மில்லாமல் காத்திருந்தோம்

கண்ணிமையும் பூத்துமிகக் காதைமூடி
களைத்தெங்கள் வயிரவரும் கலங்குகின்றார்
புண்ணியவான் நீதானு போதும்போதும்
பொழுதாச்சு சீக்கிரமாய் புசிப்புதாராய்.

வசனம்.

தண்ணீரும் மூன்றுபிழை பொறுக்குமென்பதுபோல இதோடுமூன்றுதாரமும் பொறுத்தோம், இனி பொறுக்க சாத்தியப்படாது சீக்கிரத்தில் முடித்து எங்கள் பசியைத்தீர்க்க வருவீர் காணும் நான்வருகிறேன்.

சிறுத்தொண்டர் வசனம்.

சித்தம் ஸ்வாமிகளே.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம். முகாரி. தாளம் ஆதி.)

கண்ணிகள்.

1. பெண்ணே வெண்காட்டு நங்காய்—யெந்தன்
பேச்சுக்கு ஒத்திணங்காய் (பெண்)

2. கண்ணுறங்கிடும் விதம்—மகன்
களிப்பாடுவாய் பதம் (பெண்)

3. ஜங்கமர் கோபிக்கின்றார்—அவர்கள்
அங்கம் பசிக்குதென்றார் (பெண்)

4. காக்கவைத் திட்டோ மானல்—ஜங்கமர்கள்
மூர்க்கம்வைத் தேகிவிடுவார் (பெண்)

5. ஜாலம் செய்யத்தகாது—விரத
காலம் வீணாய்ப்போகுது (பெண்)

6. எங்கும் பரவிய பேர்—திரு
செங்காட்டரு ணேசன்சீர் (பெண்)

வசனம்.

மாதே ஜங்கமர்கள் அதிகபசியினால் வெகுண்டேகுவார் போலிருக்கின்றது, ஆகையால் நமதுசிறுவனை பக்குவமாய் நித்திரைசெய்யும்படி செய்வாய், நான் இதோ கருவிகளோடு தயாராயிருக்கின்றேன்.

வெண்காட்டு நங்கை வசனம்.

சித்தம் நாதா.

வெண்காட்டுநங்கை தரு.

(இ-ம். பிலகரி. அட தாளம்.)

பல்லவி.

மகனே நித்ரை செய்வாயடா-என்மடிமீதில்
மகனே நித்ரை செய்வாயடா

அநுபல்லவி.

சுகமேபெருகிடும் சோம்பல்நீங்கிடும்
சுதனேமலர்விழி ஜோதியோங்கிடும்
அகமகிழ்ந்தென தப்பா தூங்கிடும்
அருமையாய்ப்படித்த அனுப்புவாங்கிடும் (மக)

சரணங்கள்.

1. உண்டயிளைப்பாருக்குமுண்டு - உலகோர்மொழி
ஓதினேனுன தனைக்கண்டு
அண்டையில் படுத்துக்கொண்டு விளையாடி
அன்னைநானு மிகசொன்னபடி நாடி
பண்டேபழகியே பள்ளிக்கூடம்தேடி
படிக்கும் சிறுவரோடேகவேண்டுங்கூடி (மக)

அப்யங்க ஸ்நானம்செய்தாயே - ஆனதினுல்
ஆயாசம்நீங்கிடு மெனமேசெயே
ஒப்பிலா ரத்ன வொளியே கிளிமொழி
உலகோர்புகழ்ந்திட பிறந்தாயகலவழி
செப்புமசெங்காட்டினில் சிறந்த அறமமொழி
செழித்தவருணேசன செயலாலவருமெழில் (மக)

வசனம்.

அடா என்னருமைக்கிளியே, மிரண் டேன் விழிக்கின்றாய் சற்றுநேரம் நித்திரைசெய்தெழுந்திருப்பாய் சீராளச்செல்வமே.

சிறுத்தொண்டர் வசனம்.

கண்ணே நங்காய், குழந்தை நித்ரைபோய்விட்டானு நேரமாகிறதே.—

சீராளன் தரு.

(மகனே வா மகனே வா யெனும் வர்னமெட்டு.)

பல்லவி.

தந்தையே தாயேநீங்கள் சந்தேகப் படவேண்டாம்
தாங்குவீர்கள் என்னுயிரைப் போக்குவீர்கள்

அநுபல்லவி.

எந்தன்ஜன்மத்துக்கிணை யெவ்வுலகியில்லை
சந்தோஷமாய்ச்செய்து சமைத்துஜங்கமருண்ண
சலியாதீர் உங்கள்மனம் நலியாதீர் (தந்)

சரணங்கள்.

1. பள்ளிக்கூடத்திலின்று படித்துநித்திரைசெய்தேன்
கள்ளமறச்சொர்ப்பனம் கண்டபடியேநல்ல
காக்ஷிகண்டேன் சிவபதி மாக்ஷிகொண்டேன் (தந்)

2. நீர்மேற்குமிழிபோல நிலையில்லாக்காயமிது
பார்மீதுபொம்மலாட்டம் பாசபந்தத்தை நீங்கள்
பற்றறுப்பீர்மோக்ஷம் பெற்றுசிறப்பீர் (தந்)

3. மகிதலம்புகழ்பெறும் மாக்ஷிசெங்காடுறை
அகிலாண்டேஸ்வரிநாத னருணேசனார்மனது
ஆரவேணும் அவரடி சேரவேணும். (தந்)

வசனம்.

தந்தையே தாயே, நீங்கள் இப்போது எண்ணியிருக்கும் எண்ணம் என்கனவால்தெரிந்துக்கொண்டேன், எனக்கும் மெத்த சந்தோஷமே, நடக்கும் காரியத்தை நடத்துவீர்கள் சீக்கிரம்.

சிறுத்தொண்டர் விருத்தம்.

மூவர்கள் மனதுமொன்றாய் முடிந்ததென் னதிர்ஷ்டமன்றோ
பாவபுண் ணியர்களென்று பாரார்கள் மூடர்கண்டால்
கேவல மாகவெண்ணி கேலிக ளாக்குவார்கள்
ஜீவனை நீங்கச்செய்ய சிவன்செயல் மறைவாய்ச் சொல்வோம்.

வசனம்.

ஆ! ஆ! நமது மூன்றுபேர் மனமும் ஒன்றாய் அமைந்தது என்னிட அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம், ஆயினும் பக்திமார்க்கத்

தைமூடர்கள் அறியார்கள். ஆகையால் இரகஸ்யமான இடம் செல்வோம் பெண்ணே.

வெண்காட்டு நங்கை வசனம்.

துரையே, அவ்விதமே செய்வீர் இதோ பாத்திரங்களையும் சுத்திசெய்து வைத்திருக்கிறேன், சீக்கிரம் நடத்துவீர்நாதா.

சிறுத்தொண்டர் தரு.

(எப்போதகலுமிந்ததுன்பம் எனும் வர்னமெட்டு.)

பல்லவி.

பெண்ணேபிறரறியப்போகாது-நாம்
பெற்றபிள்ளையை துணிந்தறுக்கிறபோது

அநுபல்லவி.

கண்ணேவுலைவாயை காக்கவேமூடினாலும்
மண்ணோர்வாயைமூட மாளாதெவரானும் (பெண்)

1. சற்றுங்குணமில்லா சள்ளையிந்தசம்சாரம் - அதை
சாஸ்வதமென்றெண்ணி சந்தோஷப்படுதல்கோரம்
உற்றுப்பார்த்தொரு மனதாய்நிற்பதேதீரம்-நம்மை
உறுதியாகவெண்ணி வருவார்ஜங்கமரிந்நேரம்.
சுற்றுமுற்றுபார்த்து சுறுக்காய்கத்தியாலே
பற்றுவையாமலே பார்ப்போம்இனிமேலே (பெண்)

2. கையுங்காலையும் கெட்டியாய்ப்பிடித்து-பாலன்
கதறினால்கலவைநேரும்கதவைநீசாத்து
கொய்கிறேனுதிரம் கொப்பளித்துவரும்பார்த்து-ஒரு
குடத்தில்பிடித்துவை கொடுப்போம்பொரியல்கள்தீர்த்து
தையலேயிந்தத் தலையைத்தாதியுட
கையில்கொடுத்தப்பால்காணுதெறியச்சொல் (பெண்)

3. ஈரல்குண்டியை யெடுத்துசீக்கிரமாக-மற்ற
இறைச்சியெலும்புகளினிப்புடன்தீயில்வேக
காரசாரங்கள் கணக்குடனளவாக-நல்ல
கமகமவென வரல்பொரியல் குழம்பாக
தீரமாகதயார்செய்து வைப்பாய்பெண்ணே
நேராய்போயழைத்து வருவேனடிகண்ணே (பெண்)

4: பாகமதிலணுவளவும்பிசகாமல்பாராய்-நல்ல
பக்குவப்படியேபதமாயிறக்குவெவ்வேறும்
போகமிகுத்திடும் புகழ்செங்காட்டினில்சீராய்-நாளும்
புனிதனருணேசன் பொன்னடியர்களைஜோராய்
வாகுடனழைத்து வருவேனொடிதனில்
ஏகமனதுடன் இருப்பாய் மடத்தினில். (பெண்)

வசனம்.

பெண்ணே, இந்தத் தசைகளை வெவ்வேறு வகையாய் வரல், பொரியல், குழம்பு, கூட்டு முதலியன ஜாக்கிரதையாய் தயார்செய்துவைப்பாய் நான் ஜங்கமர்களைப் போய் அழைத்துக் கொண்டு வருகிறேன்.

வெண்காட்டு நங்கை விருத்தம்.

பாகத்தில் குறைவுறாது பயபக்தி மிக்கதாக
சேகரம் செய்துநானும் சீருடனிருப்பேன் நீர்போய்
தாகமாய்க் காத்திருக்கும் ஜங்கமர் தம்மைக்கண்டு
வேகமாய்அழைத்துக்கொண்டுவெற்றியாய்வருவீர்ஸ்வாமி.

வசனம்.

மிக்க பயபக்தியுடனே பாகங்களில் ஒரு குற்றமேனு மிராது தயார்செய்து வைக்கிறேன். தாங்கள் சீக்கிரம் சென்ற ழைத்துவருவீர் பிராணநாதா

பொது வசனம்.

இவ்விதம், சிறுத்தொண்டர், ஜங்கமர்களை அமுதுண்ண அழைக்க நாடி வருகிறபோது, அங்கவர்களுக்குள் நடக்கும் விதம் அறிவீர்கள் கனவான்களே.

வயிரவர் தரு.

பார்ஸ் வர்னமெட்டு.

பல்லவி.

என்னமாபமோ சிறுத்தொண்டன்
இன்னுங் காணோமே.

அநுபல்லவி.

அன்னக்கொடி ஏன்நாட்டினுன்
ஆசைநமக்குக் காட்டினுன்
சொன்னபடி முடித்திட்டானே
சூதுவார்த்தை படித்திட்டானே. (என்)

சரணங்கள்

1. நாணயவானென்று வந்தோம்
நாக்கைதட்டிக் கொண்டிருந்தோம்
ஆணையிட்டு மறந்திட்டானே
அகப்படாமல் நின்றிட்டானே (என்)

2. பார்த்தகண்ணும் பஞ்சடைந்து
பசியால்களை துடர்ந்து
காத்திருக்கக் காரணமோ
கலகத்துக்கிவன் பூரணமோ (என்)

3. சரிசறியினி பொறுக்க
சாத்தியமில்லை யிருக்க
திருச்செங் காட்டீசனறிய
தீரங்காட்டிப் போனுனீட்டி. (என்)

வசனம்.

மாயாண்டி, சிறுக்தொண்டன் வார்த்தைத் தவறிப்போச்சுது, இனிமேல் பசியை க்ஷணமேனும் சகிக்க சாத்தியப்படாது, வேறிடம் செல்கிறேன் வருவாயப்பா.

மாயாண்டி தரு.

இந்துஸ்தான் நோட்.

1. அதோபார் அதோபார்வாரானதி வேகமாகத்தானே .
அவசரப்படவேண்டாம் நில் நில் நில் (அதோ)

2. இதோபார் ஓடியேவாரான் இளைத்துமெய் வருந்திடவே
இவன்பேரில் குற்றமுண்டோ சொல்சொல்சொல் (அதோ)

3. சாபானுக் ரகமிருந்த சாமார்த்ய மிருந்தாலும்
சாத்தியமோ உயிர்வாங்கச் சொல் சொல் சொல்

4. வாயால்வளப்போட்டிவிட்டோம் வருத்தமவனுக் கல்லவோ
ஆயாசப்படவேண்டாங்காண் நில் நில் நில் (அதோ)

வசனம்.

குருஸ்வாமியான வைரவநாதா, அதோ சிறுத்தொண்டன் அதிகவேகமாய் வந்துகொண்டிருக்கிறான் பாரும், அவன் குறிப்பைப்பார்த்தால் நம் இஷ்டப்படி முடித்து வருகிறான்போல் காண்கிறது, அவசரப்பட்டுச்செல்லவேண்டாம் நிற்பீர்ஸ்வாமி.

சிறுத்தொண்டர் தரு.

இ-ம். பைரவி. தாளம்-ஜம்பை.

பல்லவி.

ஐயாநீங்களெழுந்து வாரீர்
அமுதுகொள்ள அன்பாய் தென்பாய் முன்பாய்

அநுபல்லவி.

செய்யச் சொன்ன படியே செய்தேன்
சித்தம்வைத்து பத்தன்மடத்திடத்தில் (ஐயா)

சரணங்கள்.

1. அன்னதானவிரதமின்று அழியாமலேகாப்பீர்நன்று
தன்னந்தனியாகநின்று தளர்ந்தீர் பசியாலேயினிமேலே ()

2. உங்கள்மனப்பூர்த்தியாக வுண்டுயிளைப்பாறிப்போக
சங்கையில்லை யினிவிவேக சற்குணரேசரணமன்பாகதாக ()

3. எழில்திருச்செங்காட்டில்வாசன் ஏதமிலாவருணேசன்
வழியவர்தம்பாரம்தாசன் வந்தனமுங்கள் பாதமுன்னிபன்னி. ()

வசனம்.

நமஸ்காரம் ஸ்வாமிகளே, தங்களிஷ்டப்படி தயாராயிற்று அமுதுண்ண எழுந்தருளுவீர்கள் ஐயா

வயிரவர் விருத்தம்.

எத்தனை கடிகையாக வெதிர்பார்த்து காத்திருப்போம்
மெத்தவும் பசியால்தேகம் மெலிந்திளைப் பாச்சுதப்பா
சித்தமாய் நாங்கள்கேட்ட சீரெல்லா முடித்திட்டாயா
பத்தியா யழைக்கவந்த பத்தனே பகருவாயே.

வசனம்.

ஓய் ஓய், நல்லதர்மம் செய்தாய், போதும், போதும், எத்தனை நாழிகையாய் உம்மை எதிர் பார்த்திருப்பது, நாங்கள் கேட்ட பதார்த்தம் தயாராகிவிட்டதா.

சிறுத்தொண்டர் வசனம்.

தயாராயிருக்கின்றது ஸ்வாமிகளே.

ஜங்கமர் வசனம்.

ஆனால் புறப்படுவீர்கள் போகலாம்.

சிறுத்தொண்டர் வசனம்.

பெண்ணே வெண்காட்டு நங்காய், இதோ ஜங்கமப்பெரியோர்களை அழைத்து வந்தேன், கை கால் சுத்திசெய்ய ஜலம் கொடுத்து ஆசனம் அளித்தமுதிடுவாய்.

வெண்காட்டுநங்கை வசனம்.

சித்தம் நாதா.

வயிரவர் வசனம்.

அப்பா சிறுத்தொண்ட பத்தா, அம்மா வெண்காட்டுநங்காய், நரமாம்ஸபக்ஷணம் தவிர வேறே ஒன்றுந் தேவையில்லை, அதை ஒவ்வொன்றாய் தெரியப்படுத்தி வழங்குவீர்கள்.

சிறுத்டுதாண்டர் வெண்காட்டுநங்கை தரு.

(ஆசியா ஆபிரிக்கா லட்டன் யெனும் வர்னமெட்டு.)

1. ஈரல்குண்டியைவேறே யெடுத்துப்பொரியல்செய்தோம்
இதோவைத்தோம் பாருங்கள் ஸ்வாமி-உங்கள்
இதயம்களிப்பீர்கள் நேமி

2. சாரமானகொழுப்பை சட்டதிட்டமுடனே
சமைத்ததிதுதானுற்றுப்பாரீர்-இதில்
சந்தேகமிருந்திட்டால்கூறீர்

3. மார்க்கண்டங்களை துண்டு துண்டாகவேசதைத்து
மணக்கவருத்தோமிதைப்பாரும்-நல்ல
மாக்ஷிமையுடன் மனம்தேரும்

4. தோள் துடைமுழங்காலை துணித்துச்சமயல்செய்து
தூயப்பசுநெய்யினில்வறுத்தோம்-இந்தாரும்
துலங்கும்பாண்டத்திலொன்றுநிறுத்தோம்.

5. தந்தங்களெல்லாம்சேர்த்து தாராளசூப்புசெய்தோம்
தயைசெய்துவுண்ணுங்கள்ஸ்வாமி-எங்கள்
தர்மங்கள்நிறைவேறநேமி

6. புகழார்திருச்செங்காடு புனிதனருணேசனை
போற்றிபூரிப்பாய்செய்தோம்நாங்கள்-இதில்
பிழையிருந்தால்பொறுப்பீர்தாங்கள்

வயிரவர் தரு.

(இ-ம் அடாணு. தாளம்-ஆதி.)

சரணங்கள்.

1. என்னகாண்சிறுத்தொண்டரேயேமாற்றிவிட்டீர்
அன்னமளிக்கிறேனென்று அவலம்செய்திட்டீர் (என்)

2. உன்னதமானசிரசின் ஊனதைக்கேட்டோம்
அன்னீதம்செய்துவிட்டீர்கள் அருந்தவேமாட்டோம் (எ)

3. கண்மூக்குசெவிநாக்குதான் கரும்புபோல்ருசி
உண்மையாயிருந்தால் சாப்பிட்டாறுவோம்பசி (என்)

4. எண்சாண்திரேகத்திற்கெழில் சிரசே பிரதானம்
கண்மூடியானாலும் தெரியுமேநிதானம் (என்)

5. சத்தானமூளைக்கறியை நத்திக்கேட்டோமே
மித்ரபேதம்செய்வாயென் றறியமாட்டோமே (என்)

6. தேவதருசூழ்திருச்செங்காட்டருணேசன்
சேவ்டிக்குத்தொண்டனென்று செப்பிடுதாசன். (என்)

வயிரவர் விருத்தம்.

பகந்தவிர மற்றதெல்லாம் கன்யாதானம்
பாங்குடனே செய்திட்ட பான்மைபோல
சிகரமதை நிறுத்திவிட்டு சத்தில்லாத
செங்குருதி மாமிசத்தை செய்துவைத்தாய்
புகழான யெங்களிட விரதந்தன்னை
போக்கடிக்கக் காத்திருந்தாய் போதும்போதும்
சிகமடையா திலவுகாக் கிள்ளையானேம்
தொண்டனேநீபடைத்த சோறுண்ணோமே.

வசனம்.

சரி சரி, சபாஷ் சபாஷ் போதும் போதும், இதற்காகத் தானு இத்தனை நாழிகை காத்திருந்தோம், நல்ல தர்மம் செய்தாய், உபஸ்தம் தவிர கன்னிகாதானம் என்கிற கதையைப் போல, பிரதானமான சிரசை நிறுத்தி, சத்தில்லாத தசைகளை பாகம் செய்தளித்தீர்கள் எங்கள்விரதத்துக்கேற்காது, கட்டாயமாய் அமுதுண்ணமாட்டோம்.

சிறுத்தொண்டர் தரு.

ஐயையோ தெய்வமே யெனும் வர்னமெட்டு.

பல்லவி.

பட்டதெல்லாம் பாழாச்சுதே—ஒரு
பலனுமில்லாமல் போச்சுதே

அநுபல்லவி.

கட்டாயமாய்சிரசின் கறியைகேட்கின்றார்களே
விட்டெறிந்திடச்சொன்னேமேவிருதாவில்நாமே (பட்)

1. கடலெல்லாந் தாண்டிவந்தும் கால்வாயை தாண்டப்பிந்தும்
மடமையோன் போலானேமே மயங்கிப்போனேமே (பட்)

2. ஐயோவாய்த்தவீடும்போய் அடுப்புநெருப்பதுவும்போய்
செய்யும்வாறேதுதெய்வமே சிறியேன்சிவமே. (பட்)

3. சரசிவெண்காட்டுநங்காய் சந்தணநங்கையெங்கே
துரிசாயழைத்துக்கேளடி சொல்லுவாளடி (பட்)

4. திருச்செங்காட்டினில்வாசன் தேவனுமருணேசன்
பரீக்ஷையைநாமறியோமே பக்தியாய்நாமே (பட்)

சிறுத்தொண்டர் வசனம்.

மாதே, தர்மநெறியைத்தவறாது செய்க்கறிதர உடன்பட்டும், சிரசை பாகம்செய்யாமல் தாதிகையில் கொடுத்துக் குப்பையில் எறியச்சொன்னேமே, அதை எவ்விடத்தில் எறிந்தனளோ கொஞ்சத்தில் புத்திசபலமாய்விட்டதே ஆகிலும் சந்தணநங்கையை அழைத்துக்கேட்பாயடி பெண்ணே.

வெண்காட்டுநங்கை வசனம்.

சித்தம் நாதா.

பொது வசனம்.

இவ்விதம் சிறுத்தொண்டநாயனாரும், பத்தினி வெண்காட்டுநங்கையாரும், அன்னதான விரதநெறி ஈடேற்றவேண்டி அருமையாய்ப் பெற்ற மகவை யறிந்து, சிரசை தாதிகையில் கொடுத்து அப்பால் எறிந்துவிடச்சொல்லி, மற்றத்தசைகளை பாகம் செய்து அளிக்க, சிரசின் தசையில்லாமல் அமுதுண்ணமாட்டோம் என்று மறுக்க, நாயனாரும் நங்கையாரும் மனம்வாடி தாதியை அழைக்க, அவரிடம் தாதி சந்தணநங்கை வருகிறதறிவீர் சபையோர்களே,

சந்தண நங்கைவருகிற ஜாவளி

கண்ணிகள்.

(கோபமேனோ எந்தன்மேல் எனும் வர்னமெட்டு.)

1. வந்தனளே சுந்தர வனிதை சந்தணநங்கை
வண்மைமேதா டுண்மையாய்
பண்புடன் தண்மையாய் (வந்)

2. கந்தம் மணக்குமெழில் காரைப் பழித்தகுழல்
கஞ்சம்போல் ரஞ்சிதம்
மிஞ்சவே வஞ்சியாள் (வந்)

3. புகழாந் திருச்செங்காடு புனிதனைப் போற்றியே
போதமாய் நீதமாய்
சீதம்போல கோதையாள் (வந்)

சந்தணநங்கை விருத்தம்.

தந்தையை தாயைப்போல தற்காத்து ரக்ஷிக்கின்ற
சுந்தர மானதாயே சோர்வுகொண் டொருவாறாக
எந்தனை யோர்பொருட்டாய் எண்ணியிங் கழைத்ததென்ன
விந்தையை விபரமாக விளம்புவாய் தாயேபோற்றி.

வசனம்.

சரணம் சரணம் தாயே, அடியாளான எனையழைத்த விபரம் யாதுவிளம்புவாய்.

வெண்காட்டு நங்கை விருத்தம்.

அருமைசி ராளன் றன்னை அறுத்துமே கறிசமைத்தும்
ஒருகுறை யாலேவந்தோ ருண்ணமாட் டோமென்றார்கள்
தருமங்கள் தவறுவண்ணம் தாதியே யுன்கைதந்த
திருமகன் சிரந்தானெங்கே தெரியாமலெறிந் திட்டாயோ.

வசனம்.

சகி சந்தணநங்காய், சிரசின்கறியில்லாமல் ஜங்கமர் அமுதுண்ணமாட்டோம் என்கிறார்கள். உன்கையில்கொடுத்த சிரசை எவ்விடத்தில் எறிந்தாய் சொல்வாய் அம்மா.

சந்தணநங்வக தரு.

(இ-ம். தர்பார்-அடதாளம்.)

பல்லவி.

அஞ்சவேண்டாந்தாயே—அதற்காக
அஞ்சவேண்டாந்தாயே

அநுபல்லவி.

சஞ்சலம் நேருமென்று
சமைத்துவைத்திருக்கின்றேன் (அஞ்)

சரணங்கள்.

1. அன்னதானநெறியில் சீராளன்றன்னை
அறுத்து சமைத்தகறியில்
உன்னதசிரசினை உணவாய்கேட்பார்களென்று
உளவறியாமலீந்து உரைத்தீரப்பால்போடென்று

2. கண்மூக்கு செவி மூளை கன்னங்கள்வேறே
கறிகள்செய் தேனிவ்வேளை
எண்சாணுடம்புக்கு யெழில்சிரம் பிரதானம்
என்றுமனதிலெண்ணிஎடுத்துச்செய்தேன்நிதானம்

3. திருவிருந்தொளிர்வாசன் திருச்செங்காடு
தேவனு மருணேசன்
திருக்கூட்டத்தலைவர்க்கு திவ்யஅமுதளிக்க
திருவில்லையினிமேலே தீர்க்கமுடன்களிக்க (அஞ்)

வசனம்.

தாயே சரணம், நீங்கள் தந்தசீராளன் சிரசை, குப்பையிலெறியமனமில்லாமல் ஜங்கமர்கள் ஒருகால் அதை விரும்புவார்களென்று யோசித்து அதை ஐந்துவித பாகமாய் தயார்செய்து இதோ வைத்திருக்கிறேன். எடுத்துவைப்பீர் தாயே.

வெண்காட்டுநங்கை தரு.

(இ-ம். தேசிகதோடி. தாளம் ஆதி.)

பல்லவி.

அம்மாசந்தண நங்காய்—பேர்
அறிவிற்சிறந்த தங்காய்

அநுபல்லவி.

இம்மாத்திர முபகாரம்—எங்கட்
கெவர்கள்செய்வாரிந்நேரம் (அம்)

சரணங்கள்.

1. தீயும்பயிருக்குதவி-தந்து-பேயும்மழைபோல்பதவி
தாயும்தந்தையும்நீயே-இன்று-தர்மந்தழைக்கச்செய்தாயே

2. காராவாயிலகப்பட்ட-மத-கரிக்கபயம்தந்திட்ட
முராரிமுகுந்தன்போலே-தர்மம்-முடித்தனையா தலாலே

3. இந்தநன்றிக்குகைம்மாறு-நாங்கள்-என்னசெய்வோம் பதி [ல்வேறு
சுந்தரசெங்காட்டில்வாசன்-புத்தி-சொன்னாரோடியருணேசன்

வசனம்.

சகி சந்தணநங்காய் உன்பேரறிவுக்கு மெச்சினேன் நீயே புத்திசாலி, இன்றுமுதல் நீயெனக்கு பணிசெய்யத்தகாது என்னொடொப்பாய் இருந்து வாழ்வாயம்மா.

சந்தனநங்கை விருத்தம்.

ஏதமில் லாமலுங்க ளிருவர்கள் மிருதுவான
பாததூ ளாகும்நானோ பணிவிடை செய்யும்தாதி
யாதலா லென்னைநீங்கள் அருமையாய்ப் புகழொண்ணது
கோதறு மன்னதானங் குறைவிலா தளிப்பீர்போற்றி.

வசனம்.

சரணம் சரணம் குற்றமற்ற தாய் தந்தையைப்போல் விளங்கும் தங்கள் பாததூசுக்கொப்பாகும் பணிப்பெண்ணான என்னை, நீங்கள் புகழத்தகாது மேல்நடக்கவேண்டிய காரியத்தை பூர்த்திசெய்வீர்கள்.

வெண்காட்டு நங்கை விருத்தம்.

சந்தணநங்கைபுத்தி சாதுர்ய புகழைச்சொல்ல
சந்தத மாதிசேஷன் சகஸ்த்ரநா வாலுமாகா
சுந்தர பிராணநாதா சுருக்காக யிதையெடுத்து
வந்தஜங் கமர்களுண்ண வழங்குவோம் வாரும்ஸ்வாமி.

வசனம்.

சந்தணநங்கை புத்தி சாதுர்யத்தைப்பேச, ஆதிசேஷனுக்குமருமை, ஆதலால் அவள் தந்த யிந்தபதார்த்தத்தை யெடுத்து ஜங்கமருக்களிப்போம் வாரும் பிராணநாதா.

சிறுத்தொண்டர் வசனம்.

ஜங்கமஸ்வாமிகளே தாங்கள் விருப்பமாய்க்கேட்ட சிரசின் பதார்த்தமிதோ அளித்தோம் தயைசெய்து உட்கொள்வீர்கள் பெரியோர்களே.

ஜங்கமர் ஜாவளி.

(இ-ம். கல்யாணி. தாளம் ஆதி.)

பல்லவி.

மெத்தசந்தோஷம் மெச்சினேம்இனி
மேலே இஷ்டம்போலே அன்பாலே யீந்திட்டதாலே

அநுபல்லவி

சத்தானபதார்த்தம் தந்தையேயெதார்த்தம்
பத்தியிற்சிறந்தாய் பாக்யமேயோக்யமே (மெ)

சரணங்கள்.

1. ஆனலோர்குறை அறைகின்றேமுறை
தானய்தனித்து சாப்பிட்டவழக்கமில்லை (மெ)

2. புண்ணியசிலாக்கிய புகழ்ந்தோமேரோக்ய
கண்ணியசெங்காடருணேசன் கிருபைதாச. (மெ)

ஜங்கமர் விருத்தம்.

மெத்தசந் தோஷமாச்சு மெச்சினேம் நீயேதியாகி
உத்தம மெல்லாம்செய்தா யொருகுறை யிருக்குதப்பா
பத்தர்க ளென்போல்வார்கள் பந்தியி லருந்தவேண்டும்
சித்தமாய் தேடிப்பார்த்து சீக்கிரம் அழைப்பாயப்பா.

வசனம்.

அப்பா சிறுத்தொண்ட பக்தனே, ஆனந்தசந்தோஷ சாகரத்தில் மூழ்கினம், நீயே அன்னதானப்ரபு, எல்லாம் என்னிஷ்டப்படி செய்தாய், இன்னும் ஒருகுறை யிருக்கின்றது அதாவது கூட்டமின்றி தனியாய்சாப்பிட்டவழக்கம் இல்லை, மேலும் விசேஷ பதார்த்தங்களும் தயாரித்திருக்கின்றமையால் யாராவது அடியார்களை அழைப்பாய் அப்பா.

சிறுத்தொண்டர் விருத்தம்.

சதிரவ னுதயங்கொண்டு கால்கனும் சேரத்தேடி
அதிதிகளொருவரேனும் அகப்படா தலைந்தேனந்த
ததியினி லுங்கள்திவ்ய தரிசனம் கண்டேன்ஸ்வாமி
சதிரொடு நீங்களுண்டு சஞ்சலம் தீர்ப்பீரையா.

வசனம்.

பிரிதி தினமுமென்மடத்தை தேடிவந்துக் கொண்டிருந்த திருக்கூட்டங்க ளித்தினம் ஒருவரும் வரவில்லை ஆனதுபற்றி இன்றுசூரியோதயமுதல் வெகுநேரமாகத்தேடியும் ஒருவரும் அகப்படவில்லை, பின் கடவுளருளால் தங்களைக்கண்டேன் தங்களிஷ்டம்போல் அமுதளித்தேன், தங்களைக்கண்டாலே பரமாத்மாவைப்போல் காண்கின்றது, ஆதலால் தாங்களுண்டால் ஆயிரம்பே ருண்டதையொக்கும் ஸ்வாமிகளே.

ஜங்கமா விருத்தம்.

விருந்தென்றால் வெகுகூட்டம் கூடவேண்டும்
விசேஷ அன்ன தருமங்க ளாதலாலே
பெருந்தன்மை யானசிவ பத்தர்பத்து
பேரிருந்து புசித்திட்டால் பிரியமாகும்
இருந்தாலு மிருக்கட்டும் நீயுங்கூட
யென்தனைப்போல் காவிக்கண் மணியும்பூதி
பொருந்திடவே யிருக்கின்றாய் புண்யவான்நீ
புகழுடனே யென்னோடு புசிப்பாயப்பா.

வசனம்.

அப்பா அன்பனே, விருந்தென்றால் அநேகம் பரதேசிக ளிருந்தமுதுண்ணவேண்டும், கூட்டமின்றி புசிக்கலாகாது ஆனாலும் நீயும் சிவபத்தரைப்போல் வெண்ணீறு ருத்ராக்ஷ காஷாய மணிந்திருக்கின்றாய் ஆகையாலுடனிருந்துண்ணுவாய்.

சிறுத்தொண்டர் வசனம்.

இதற்கும் சம்மதந்தான் வயிரவநாதா

ஜங்கமர் வசனம்.

இதற்குச் சம்மதந்தானென்று மனவருத்தத்துடன் சொல்கின்றாப்போ லிருக்கின்றது. அப்படி என்பேரில்வருத்தம்வேண்டாமப்பா:

சிறுத்தொண்டர் வசனம்.

ஸ்வாமி, அப்படி மனவருத்தம் வேண்டாம், அடியேன் முன்னதாகவே சாப்பிடுகின்றேன் இனியாவது சாப்பிடுவீர்கள் ஸ்வாமிகளே.

ஜங்கமர் விருத்தம்.

எல்லாஞ்சொல்லிடுமோர்பல்லிபிழிந்தகாடியில்வீழ்ந்தாப்போல்
நல்லகா ரியம்நீசெய்தாய் நானூறு மாதம்காத்தேன்
அல்லவா வுனக்குமந்த அதிசயந் தெரிந்திருந்தும்
வில்லங்கம் செய்துயென்தன் விரதத்தை கெடுக்கப் பார்த்தாய்.

வசனம்.

எல்லாம் சொல்லுமோர் பல்லி காடியில் வீழ்ந்ததுபோல, நான் ஆறுமாதத்துக்கோர் விசை இப்படிப்பட்ட புசிப்பெடுக்கிறதென்றும், அநுவிரதமென்றும் முன்னமே சொல்லியிருக்கின்ற விஷயமெல்லாம் தெரிந்த நீ அதை கவனியாமல் பதறிப் புசிக்க ஆரம்பித்தாய், நல்லது நீர்சமைத்த சாதம் கறி யமுதுகளை நீரே சாப்பிடுங்காணும் நான் போய் வருகின்றேன்

சிறுத்தொண்டர் தரு.

(என்முகம் பார்த்தருளையா எனும் வர்னமெட்டு)

பல்லவி.

அடியேன்செய்பிழைநீக்குமையா
அறியாச்சிறியேனுனதால்மெய்யா

அநுபல்லவி.

முடியுந்தருவாயினில் மூடன்நான்பதறினேன்
கெடுதியென்றதட்டினீர் கேட்டுக்கையுதறினேன் (அடி)

சரணங்கள்.

1. தாங்கள் மயங்கியிருந்தீர் தமியேன்சந்தேகங்கொண்டு
வேங்கியமில்லாமலே விரைந்துண்ணலானேன்தொண்டு ()

2. வெற்றிசேர் திருச்செங்காட்டில் விளங்குமருணேசர்தாள்
பற்றிநிவேதனம் பண்ணிப்புசிப்பதற்கு (அடி)

ஜங்கமர் விருத்தம்.

கழுத்தினையறுத்துவிட்டுக் கைப்பிழையென்றாற்போல
அழுத்தமா யுரைத்தாயப்பா ஆகிலுங் குற்றமில்லை
செழித்திடு மகனிலாது சீரமுதுண்ணமாட்டோம்
வழுத்திடும் புத்ரனுண்டா வள்ளலே சொல்வீரையா.

வசனம்.

கழுத்தை அறுத்துவிட்டு கைதவறி செய்துவிட்டதென்கிற கதையைப்போல சொல்கின்றாய், போனது போகட்டும், மைந்தர்களில்லாத இல்லறத்தில் அமுதுண்ணமாட்டோம், உனக்குப் பிள்ளைகளிருக்கிறதா? இல்லையா? கூறுவாய் சிறுத்தொண்ட பக்தனே.

சிறுத்தொண்டர் வசனம்.

இருக்கின்றதையா,

ஜங்கமர் வசனம்.

ஆனால் சீக்கிர மழைப்பாய்.

சிறுத்தொண்டர் வசனம்.

இத்தருணத்துக் குதவுவது சந்தேகம் ஸ்வாமிகளே.

ஜங்கமர் வசனம்.

ஆனாலும், நீயும் உனது பத்னியும், தெருவாயிற்படியில் நின்று அழைத்துப்பாருங்கள்.

சிறுத்தொண்டர் வசனம்.

பெண்ணே வெண்காட்டுநங்காய், வறுத்தசெந்நெல் முளைக்குமா, அதுபோல உயிரைப்போக்கித் தசைகளைப்பதார்த்தங்களாய் சமைத்திட்ட சுதன் எழுந்துவரப்போகிறதில்லை, மைந்தனில்லாமல் ஜங்கமரும் அமுதுண்ணப்போகிறதில்லை, இதையோசிக்கில் அன்னதானவிரதமும்போய் அருமைமகனும் போய் அவலமானேம், எல்லாம்ஈஸ்வரச்செயலாகும் ஆனாலும் ஜங்கமப்பெரியோர் அழைக்கச்சொன்னபடி மைந்தன் பெயரையிட்டு அழைப்போமடி பெண்ணே.

சிறுத்தொண்டர் வெண்காட்டுநங்கை தரு.

(நாமாளிவர்னமெட்டு.)

பல்லவி.

சீராளா செல்வச்சீராளா அப்பா சீராளா
சேயாவந்தெங்கள் முறைகேளாய்

அநுபல்லவி.

தாராளமாகச்செய்த தானத்துக்கேச்சாச்சு
கூவாளுக்குன்னுயிரைக் கொடுத்ததும்வீணாச்சு (சீரா)

சரணங்கள்.

1. வறுத்தசெந்நெல்முளைத்து வளரப்போகின்றதில்லை
அறுத்துசமைத்தோமுன்னை அழைப்பதும்வீண்தொல்லை

2. ஏதமில்திருச்செங்கா டெழில்சேரருணேசன்
பாதமதைநம்பின பாலனைபரிக்ஷிக்காதே.

ஜங்கமர் விருத்தம்.

சத்தியம் தருமம்நீதி சாந்தமுந் தயைதாக்ஷண்யம்
நித்தியந் தவறுச்சீல நிலைசிறுத் தொண்டனீன்ற
புத்திரன் ஜென்மம் பொன்னைபுடம்போட்டு மாற்றுயர்ந்த
பத்தரைமாற்றுத்தங்கப் படிவம்போல் வருகத்தானே.

வசனம்.

சத்தியம் தவறாத சிறுத்தொண்டனீன்ற சீராளன், பத்தரைமாற்றுத் தங்கப்பதுமைபோல் உயிர்பெற்றிக்கணமே வரக்கடவது.

பொது வசனம்.

இவ்விதம், சத்தியசம்பன்னனான சிறுத்தொண்டநாயனா ரும், பத்தினி வெண்காட்டுநங்கையாரும், அன்னதானவிரத நெறியை யீடேற்றவேண்டி, அருமையாய்ப்பெற்ற மகவை அறு த்து சமைத்து வயிரவர்க்களிக்க அவரிலையில் படைத்தபோது அவர் சீராளனை உடனிருந்துண்ண அழைக்கும்படி தாய்தந்தை யரை யேவ, அவர்கள் அப்படியே அழைத்ததருணத்தில், வயிர வராய்வந்த ஸ்ரீகைலாசபதியாகிய சிவபெருமான், சீராளன் அங் கங்களை யொன்றாய்ச்சேர்த்து உயிர்பெற்றெழுந்து வரக்கடவ தென்று திருவாய் மலர்ந்தருளிய அந்தர்த்தானமாயினர் மேல் நடக்கும் விதம் அறிவீர் சபையோர்களே.

சீராளன் உயிர்பெற்றுவருகிற தரு,

(இ-ம். பூபாளம். தாளம் - ஆதி.)

பல்லவி.

வந்தேன் வந்தேன் தந்தையே மைந்தன்நானிதோ

அநுபல்லவி.

அந்தரமார்க்கமாய் அத்திபூத்தாப்போல்
செந்தணலால்வறுத்த செந்நெல்முளைத்தாப்போல் (வ)

சரணங்கள்.

1. பஞ்சணைமீதில் பள்ளிகொண்டெழுந்தாப்போல்
கஞ்சமலர்கதிரைக் கண்டுவளர்ந்தாப்போல் (வந்)

2. தண்டைக்கொலுசு சதங்கைபணிமின்ன
உண்டைவில்கையில் ஒளிதளதளவென்ன (வந)

3. மாசிலாததிருச் செங்காட்டருணேசன்
ஆசீர்வாதத்தாலே யவதரித்ததாசன். (வந்)

சீராளன் விருத்தம்.

முன்செய்த தவமோயெந்தன் முன்னோர்செய் புண்யந்தானோ
தென்பொடு யெனையீரைந்து திங்களாய் சுமந்துபெற்று
அன்பொடு மடியாருண்ண அறுத்தன்ன தானஞ்செய்தீர்
ஜென்மபா வங்கள்நீங்கித் திருவுரு வமைந்தேன்போற்றி.

வசனம்.

சரணம், சரணம், தந்தையேதாயே, நீங்களிருவரும் அழை த்தபடியே, ஜகதீசனருளா லுயிர்பெற்று, இதோ நித்ரை நீங்கி வந்தவன்போல வந்துங்கள் திருவடி தரிசனம் கண்டேன் தந் தையே தாயே.

சிறுத்தொண்டர் வெண்காட்டு நங்கை.

கண்ணிகள்.

(இ-ம்:சஹானா-தாளம்-ஆதி)

பல்லவி.

ஆ! ஆ! இதுவென்ன அதிசயமே
ஆகிலுமுன்செய்த அருந்தவமே
ஆனந்தம் பரமானந்தம் அற்புதமாகிய யேகாந்தம் (ஆ)

அநுபல்லவி.

ஓ! ஓ! சிறுவன்ற னுயிரினைக்கொய்தோம்
உணவொடுபலவித பாகங்கள்செய்தோம்
உச்சிதமாய் விச்சித்திரமாய் உயிர்பெற்று வந்தனன் நிச்சயமே()

சரணங்கள்.

1 அதமெலாந் திரண்டொரு திருவுருவாக
அமைந்ததோ நமதுகண்களிப்பதற்காக
அருமையிது அரும்பெருமையிது
ஆனாலு ஆச்சரிய மரிதரிது ஆ

2 ஜெயம்பெருதிருச் செங்காடருணேசர்
செயலினால்மறுஜென்மம் ஜெனித்தபிரகாசா
சீராளா பேரறிவாளா
செல்வசிகாமணி குணவாளா ஆ

சிறுத்தொண்டர் விருத்தம்

அப்பனே வாழிவாழி அருமைக்கண் மணியேவாழி
ஒப்பிலா வழகுவாய்ந்து ஒளிர்நவ மணியேவாழி
தப்பிலா வன்னதானந் தழைக்கச்செய் தவனேவாழி
செப்பருஞ் சீர்த்திபெற்ற சீராள தேவாவாழி

வசனம்.

வாழி வாழி சீராளச்செல்வமே வாழி.

சிறுத்தொண்டர் வசனம்

பெண்ணே நங்காய், யிதென்னமோமிக ஆச்சரியமாயிருக்கின்றது, ஜங்கமருத்தரவுப்படி அழைத்ததில்செல்வச்சீராளனும வறுத்தசெங்நெல் முளைத்தாப்போல் உயிர்பெற்றுவந்தனன், யோசிக்கில் பேரானந்தத்தைத் தருகின்றது, ஆயினுஞ் சிறுவனை அழைத்துக்கொண்டு வயிரவரிடம் போகலாம் வருவாயடி தேனே.

வெண்காட்டு நங்கை வசனம்.

சித்தம் நாதா.

சிறுத்தொண்டர் வசனம்.

ஹா! ஹா! இதென்ன ஆச்சரியம் ஜங்கமரைக்காணேம், நாம் படைத்த கறியமுதுகளும் இல்லே. இதைவிட அதிசயம் வேறுளதோ பெண்ணே.

சிறுத்தொண்டர் தரு.

(இ-ம். சஹாண தாளம் ரூபகம்)

பல்லவி.

மாயமென்னமோ ஆ! ஆ!
மாதேமெத்த சூதேயிது

அநுபல்லவி.

சேயனேயழைப்பாயென்று
செப்பியவைரவரின்று
தீயவஞ்சனே-நம்மை
செய்தார் நெஞ்சினில்
சீற்றம்ஏதோ தோற்றங்காணு (மாய)

சரணங்கள்

1. இன்றுதயமுதற்கொண்டு
யியல்பாப்ச்செய்தோமேதொண்டு
ஒன்றுந்தப்பில்லே-எல்லாம்
உழைத்ததும் வீண்தொல்லே
ஒ ஒ நம்மா லாகா காரியம் (மாய)

2. பாசபந்தங்களேத்தேக்கி
பாலனுக்குயிருண்டாக்கி
மோசஞ்செய்தாரே-துன்பம்
மூளேயச் செய்தாரே
மூலம் என்ன கோலமுது (மாய)

3. சிவசிவா பரமேசா
திருச்செங்காட்டினில்வாசா
நவம்அருணேசா-கடைக்கண்
நாடகத்தீசா
நாயேன்தர்மம் கேலியாகுதே. (மாய)



சிறுத்தொண்டர் விருத்தம்.

கைலைவா ழீசாவுன்றன் கழலடி தன்னைநம்பி
தைரிய மாகவன்ன தானங்கள் செய்தும்வீணாய்
வையமீ தலைகின்றேனே மகிழுடன் மடத்திருந்த
வைரவரெழுந்துபோன வழியேதோ வறிகிலேனே.

வசனம்.

ஹர ஹரா, சம்போசங்கரா, கெங்காதரா, மங்கைபங்காளா, நின்திருவடிக்கடிமைசெய்யும் தொண்டனாகிய நான்செய்த அபசாரமென்னமோ அறிகிலேன், இன்றையதினம் வைரவரென்னும் பெரியவர்வந்து சிறுவன்கறிகேட்டார், அவ்விதமளித்தேன், மறுபடியும் சிறுவனில்லா இல்லத்தில் திருவமுதுண்ணேனென்றார், அதற்கையமுற்று அடியேன் அவருத்தரவுபடி சீராளாவென்று கூப்பிட்டேன், என்கையால் உயிரிழந்த சிறுவன் ஓடிவந்தனன், பின் அமுதுண்ண எழுந்தருளியிருந்த வைரவநாதனைக் காணேம், இதென்ன ஆச்சரியம் அடியேனுக்கொன்றுந் தோன்றவில்லை, சோதனை செய்யாது தரிசனம் தருவாய் மஹாதேவா.

பரமசிவன் வருகிற பொது விருத்தம்.

திரிதண்ட வைரவராய்த் திருநீறிட்டு
திருக்கரத்திற் றிருவோடு தெளிவாய்த்தன்ன

அருஞ்சிறுத்தொண்டர்மன மதனையாய்ந்து
அருள்கனிந் துயர்பதவி யளிக்கவெண்ணி
கருங்கண்ட மொளிவீச கரியுரித்தோன்
கங்கைமதி சிரந்தாங்கி கௌரியோடு
திருக்குமர னுடனழகார் விடையிலேறி
சிறுத்தொண்டன் முன்னாகச் சிறந்திட்டாரே.

வசனம்.

இவ்விதமாக சிறுத்தொண்டபத்தருடைய மனவுறுதியை சோதிக்க, வைரவராய் வேடந்தாங்கிவந்த கைலாசபதியாகிய சிவபெருமான் சிறுத்தொண்டருடைய பக்திக்காக மகிழ்ந்து அவர்க்கு மோக்ஷசாம்ராச்சியமளிக்கத் திருவுளங்கனிந்து உமா சமேதராய் விடையிலேறி, தமதிளையகுமாரனை சுப்ரமணிய க்கடவுள்சூழ திருத்தரிசனம் தரும்வித மறிவீர்கள் சபையோர் களே.

சிவபெருமான் வருகிறதரு.

(இ-ம். பூபாளம். தாளம்-ஆதி.)

பல்லவி.

ஆதிசிவபெருமான் வந்தார்-விடையிலேறி
ஆதிசிவபெருமான் வந்தார்

அநுபல்லவி.

சோதிப்ரகாசமான பாதிமதிநதியும்
கோதிலாமான்மழு ப்ரைக்யாதிதயாநிதியாம் (ஆதி)

சரணங்கள்.

1. வாகாயொளிருமிடப் பாகமுமைதுன்னிட
நாகபணிமார்பிட மாகயெழில்மின்னிட (ஆதி)

2. தேவர்முனிவர்நிதம் ஆவலாய்தொழும்பதம்
பாவலர்புகழுன்னதம் சேவையார்க்குமற்புதம் (ஆதி)

3. கொண்டல்வண்ணனும்போதன் கண்டறியாதபாதன்
மண்டலந்தனில்சிறுத் தொண்டன்முன்பாகத்திரு (ஆதி)

சிறுத்தொண்டன் துதி தரு.

(நெஞ்ச மஞ்சுதென் எனும் வர்னமெட்டு.)

பல்லவி.

ஆனந்தசேவைகண்டேன்
அடியிணை சிரமேற்கொண்டேன்

அநுபல்லவி.

வானமுதினையுண்டோம் வந்தனம் சிறுத்தொண்டன் (ஆ)

சரணங்கள்.

1. தானேதானுனவனே தற்பரனேயற்புதனே
மானேந்தியகரனே மதிநதிபூண்சிரனே

2. காணக்காணுவினோதம் காளியோடாடியபாதம்
தோனும்பொழுதேபோதம் துலக்கமாச்சேவையும்பூதம் ()

3. திருச்சங்காட்டினில்வாச தேவனேயருணேசா
கருணைபுரிந்தாயீசா கடைத்தேரினேனுல்லாசா (ஆ)

வசனம்.

ஹரஹரா! சிவசிவா! சம்போ சங்கரமகாதேவா, காளகண்ட திரிநேத்ரனே, திரிசூலப்படையோனே, திரிபுராந்தகனே, தீன தயாளுவே, அகண்டாகார சச்சிதானந்த சுயம்பிரதகாசசொரு பானந்தனே, பேசாப்பெருமையனே, அளவிற்சிறியேனுகிய அடி யேன் தேவருங்காணுதற்கரிய திருச்சேவையைக்கண்ணுற்றேன், ஆனந்தவாரியிலாழ்ந்தேன், என்விரதம் பலித்து கடைத்தேறி னேன், ஆயினும் தம்திருப்பாத வாழ்வியினைச்சித்துளேன், திரு வுளம் கனிவாய் மகாதேவா.

பரமன் விருத்தம்.

தொண்டரே கேளீர்நங்கை சுதனெடு தாதிசூழ
அண்டருங்காணவொண்ணு அழகிய விமானமேறி
பண்டுநம் பதியாங்கைலைப் பதவியைப் பெற்றுநாளும்
எண்டிசை புகழவாழ்க இக்கணம் வருவீர்தானே.

வசனம்.

கேளும் சிறுத்தொண்டபத்தனென்னும் எம்முடைய அன் பனே, நீவிர்செய்த திருத்தொண்டுக்கு மிகவும் மகிழ்ந்தோம், அமரரும் காணுதற்கரிய அழகிய இந்த விமானத்தில், நீயும் உன்பத்தினியும், தாதியும், சுதனும் ஆரோகணித்துக்கொண்டு நாம் சதா வீற்றிருத்தற்கிடமாகிய கைலாசகிரியை யடைந்து நம் பாதநீழலில் எக்காலத்தும் எவ்விதத்துங் கெடாத பரமா னந்தவாழ்வினைப்பெற்று சதாநித்யதிருபக்தனுய் வாழ்ந்தருள திருவுளங்கனிந்தோம் எண்டிசையி லுள்ளோர்களும் புகழும் படியாக இந்தக்ஷணமே வந்தருள்வீராக.

பொது வசனம்.

இவ்விதமாக வெள்ளியங்கிரி வாசனாகிய சிவபெருமான் திருவருளால், சிறுத்தொண்டநாயனாரும்அவர்பத்தினி வெண்காட்டு நங்கையாரும், தாதி சந்தணநங்கையாரும், சுதன்சீராளனும், தேவவிமானம் ஏறி கைலாசகிரியடைந்து சதாபரமானவாழ்வினைப்பெற்றுய்ந்தனர் என்பதையறிவீர் சபையோர்களே.

வாழி விருத்தம்.

தேவரந் தணர்வாழி திகழ்சைவ மறைவாழி
மூவர்சிறுத்தொணடரும் முச்சுடரு மிகவாழி
நாவல ரறுபான்மூவர் நலமுற வாழிவாழி
யதவரும்வாழியீதை யச்சிட்டோர் வாழியவே.

175900

மங்களம்.

(இ-ம். பூபாளம் அடதாளம்.)

பல்லவி.

மங்களம் மங்களம் சுபஜெய
மங்களம் மங்களம்

அநுபல்லவி.

வெங்கையமர்முகனுக்கும் வேலவனுக்கும்
வீசுபுகழ்சிவ சம்போசங்கரருக்கும்
அங்கயற்கண்ணி யம்மையுமையவட்கும்
அருபத்துமூன்று அடியாரவர்களுக்கும் (மங்)

சரணங்கள்.

1. சீர்பெறுஞ்சிறுத் தொண்டநாயனார்க்கும்
செல்வசிகாமணி சீராளபாலனுக்கும்
கார்குழல்திருவெண் காட்டுநங்கையார்க்குங்
களங்கமிலலா சந்தணநங்கையார்க்கும் (மங்)

2. செப்பருஞ்சீர்த்தி சேக்கிழாரவர்கட்கும்
சிரத்தையாகப் படிப்போர்க்குங்கேட்பவர்க்கும்
தப்புப்பிழைகளை தள்ளிச்சோதித்தவர்க்கும்
தாசன்மாசிலாமணி தமிழ்ப்புலவனுக்கும். (மங்)

சிறுத்தொண்ட நாடகம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

புத்தக விளம்பரம்.

இப்புத்தகம வேண்டியவர்கள் சின்ன காஞ்சிபுரம் நெம்ந் தக்கார தெருவு, 45-வது நெம்பர் வீடு, மா-ா-ஸ்ரீ, சுப்பிரமணிய முதலியாரிடத்திலும், கீழ்க்கண்டவரிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பண்டரிகீர்த்தனை	0	4	0
ஸ்ரீராமலீலா அல்லது ஸ்ரீமத்ராமாயண சம்பூரணம்	0	6	0
சரஸபூஷண சரித்திரம்	0	4	0
கூலிக்குதாலிகட்டின கதை	0	4	0
நீலி கதை	0	4	0
6-பாஷைகளின் ஒக்கபில்லரி	0	4	0
ஷை தெலுங்கு	0	4	0
சுந்தரகாண்டம் லங்காதகனம்	0	4	0
கெர்ப்ப சாஸ்திரம்	2	0	0
லங்காதகனம்	0	4	0

இதிற்கண்டுள்ள புத்தகங்கள் தேவையானவர்கள் அடியிற் கையொப்ப மிட்டிருக்கும் என்னிடத்தில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர்களுக்கு வி. பி. தபால் மூலமாகவும் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

கைவண்டேர்-சு. துரைசாமி முதலியார்,

நெ. 7, பெருமாள் கோவில் தோட்டம் 2-வது சந்து,

சௌகார்பேட்டை, மதராஸ்.